உலக அளவில் 100 மில்லியன் புத்தகங்கள் விற்பனை

ரியோ

சர்வதேச ஆன்மீகத் தலைவர்

ஒகாவா

Ryuho Okawa

வாகை சூடும் சிந்தனை

தோல்வி என்று ஏதும் இல்லை

INVINCIBLE THINKING

NOW IN TAMIL

OVER 2 MILLION BOOKS SOLD

Ryuho Okawa's books have been sold over 100 million copies worldwide

JAICO

வாகை சூடும் சிந்தனை

INVINCIBLE THINKING

NOW IN TAMIL

வாகை சூடும் சிந்தனை

தோல்வி என்று ஏதும் இல்லை

INVINCIBLE THINKING

NOW IN TAMIL

ரியோ ஒகாவா

ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ்
மும்பை டில்லி பெங்களூரு புவனேஷ்வர் கொல்கத்தா
ஹைதராபாத் சென்னை அஹமதாபாத் லக்னோ போபால்

பதிப்பாளர்: ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ்
ஏ-2 ஜாஷ் சாம்பர்ஸ், 7-ஏ சர் பிரோஸ்ஷா மேத்தா ரோடு
ஃபோர்ட், மும்பை - 400 001
jaicopub@jaicobooks.com
www.jaicobooks.com

© Ryuho Okawa
Tamil Translation © Happy Science, 2016
First published as '*Josho-Shikou*'
All Rights Reserved.

ஐ.ஆர்.ஹெச் ப்ரஸ் கம்பெனி
ஒத்துழைப்புடன் பதிப்பு வெளியிடப்படுகிறது.
2-10-14, அகசாகா, மினாடோ - கு
டோக்கியோ 107-0052, ஜப்பான்

INVINCIBLE THINKING
வாகை சூடும் சிந்தனை
ISBN 978-81-8495-093-9

தமிழாக்கம்: அ. ராஜ்மோகன் **IPS**
நூற்பொருள் ஒருங்கிணைப்பு: மிஸ்டிக்ஸ்ரைட்

First Jaico Impression: 2010
Ninth Jaico Impression: 2016

இந்த புத்தகத்தின் எந்தப் பகுதியையும் பதிப்பு செய்யவோ,
பயன்படுத்தவோ அல்லது வேறு ஏதாவது முறையில்
உபயோகப்படுத்துவதோ அல்லது எலக்ட்ரானிக்,
மெக்கானிக்கல் முறையில் நகல் எடுப்பது, பதிவு செய்வது,
மின்னணு யந்திரம் மூலம் பாதுகாப்பது போன்ற எதுவும்,
பதிப்பாளரின் அதிகாரபூர்வமான அனுமதியின்றி செய்யலாகாது.

பொருளடக்கம்

புது பதிப்பிற்கான முன்னுரை
முன்னுரை

பகுதி **- 1 -** வாகை சூடுவது என்பதன் அடிப்படை

1. தலைவருக்குத் தேவையான தகுதிகள்
2. மறுசிந்தனை தலைவர்களை உருவாக்குகிறது
3. ஆன்மிக வளர்ச்சிக்கு சோதனைகள் தேவை
4. கடும் சோதனையிலிருந்து அனைத்தையும் கற்றுக் கொள்ளுங்கள்
5. சாக்குபோக்கு வாழ்க்கை வாழாதீர்கள்
6. நம்பிக்கையும் மனஉறுதியும் புதிய வழியைக் காட்டும்
7. வாகை சூடுவதற்கான வழிகளை வகுத்துக் கொள்ளுங்கள்
8. வரையறைகளைத் தாண்டிச் செல்லுங்கள்
9. வெற்றியடைய இரண்டு ரகசியங்கள்
    1) தேவையைக் கண்டுபிடியுங்கள்
    2) மேலும் வளர்ச்சி அடைவதைப் பற்றி சிந்தியுங்கள்
10. பொருளாதார சக்தி தடைகளை வெல்ல சக்தி தரும்
11. வாகை சூடும் சுயத்தைக் கண்டறியுங்கள்

பகுதி **2 -** உங்கள் பார்வையைப் புரட்சிகரமாக மாற்றுதல்

1. புதிய கருத்துக்களை உருவாக்குதலின் முக்கியத்துவம்
2. மூன்றாவது வழி ஒன்றைக் கண்டுபிடியுங்கள்
3. தீர்மானமான முடிவெடுக்க நேர் எதிராக சிந்தியுங்கள்
4. தோல்வியை உந்து பலகையாக்குங்கள்
5. இறைவன் உருவாக்கிய உலகத்தில் வீணானது என்பதே கிடையாது

6. உங்கள் கர்மவினை என்பதை ஆக்கபூர்வமான மனோபாவத்துடன் எதிர்கொள்ளுங்கள்
7. உங்களை வேறுவிதமாக மக்கள் எடை போடுகிறார்கள்
8. நூற்றி இருபது ஆண்டுகள் வாழத் திட்டமிடுங்கள்
9. முயற்சியினால் வாழ்நாளைக் கூட்டமுடியும்

பகுதி - **3** வாழ்க்கையும் வெற்றியும்

1. ஒரு தத்துவம் எப்போது ஒளியைப் பரப்புகிறது?
2. உடல்நலத்துடன் வாழ்வது எப்படி?
   1) உடல்நிலை மனதைக் கட்டுப்படுத்துகிறது
   2) மனித உடலைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்
   3) உடலைப் பாதுகாப்பது என்பது ஒரு தனி மனிதனைப் பொறுத்தது
   4) உடலுக்கும் மனதுக்கும் உள்ள உறவு
3. செல்வத்தை உருவாக்குதல்
   1) ஆன்மிகம் சார்ந்த விருப்பத்தினால் எழும் பிரச்சினைகள்
   2) மகிழ்ச்சிக்கு செல்வம் ஒரு வழி
   3) பொறாமையால் கறைபட்ட ஏழ்மை தவறானது
   4) செல்வத்தை உருவாக்குவதற்கான மூன்று அடிப்படைக் கோட்பாடுகள்
4. துணைவரும் வீடும்
   1) உங்களையே தலைசிறந்தவராக ஆக்கத் தொடங்குங்கள்
   2) உங்கள் துணைவரைப்பற்றி உங்களால் நன்றாகப் புரிந்து கொள்ள முடியுமா?
   3) பொருத்தமான ஜோடியை உருவாக்க நீங்கள் பாடுபட வேண்டும்
5. உங்கள் தலைவிதியை மாற்றும் சந்திப்புகள்
   1) ஓர் உயர்ந்த மனிதர் சந்திப்பை எதிர்பாருங்கள்
   2) உங்களிடம் சொல்லப்படுவதைப் பணிவுடன் கேளுங்கள்
   3) நன்றியுள்ள இதயம் கொண்டு இருங்கள்

6. ஒரு ஆன்மிக தொன்மை மரபு
    1) நேர்மை என்னும் ஆன்மிகத் தொன்மை மரபு
    2) இரண்டு வழிகளில் உருவாகும் நேர்மை

பகுதி - **4** வாகைசூடும் சிந்தனையின் வலிமை

1. தியானத்தையும் முன்னேற்றத்தையும் இணைக்கும் கோட்பாடு
2. உன்னதமான உலகில் வாகைசூடும் சிந்தனையின் சக்தி
3. சங்கடங்களை உங்கள் ஆத்மாவுக்கு பலமாக மாற்றிக்கொள்ளுங்கள்
4. உங்கள் நேரத்திற்கு முதலாளியாக இருங்கள்
5. மூங்கில் மரத்தின் சக்தி உருவாக்கும் கனுக்கள்
6. கடினமான சூழ்நிலையில் வருடாந்திர வளையங்களை உருவாக்குதல்
7. நீண்ட தூர ஓட்ட வீரரைப்போல சிந்தியுங்கள்
8. திறன் எண்ணிக்கை விளைவு
9. அதிர்ஷ்டத்தை நம்பியிராமல் அடுத்த கட்டத்துக்கு தயார் செய்யுங்கள்
10. நிலைமை சாதகமாக இருந்தால் அன்பு என்னும் விதையை விதையுங்கள்
11. ஒரு படி மேலே உங்கள் குறிக்கோள் இருக்கட்டும்
12. மாற்றத் தக்கவாறு சிந்தியுங்கள்; சோதனையை சாதகமாக்குங்கள்
13. அன்றாடம் வெற்றி தரும் வாழ்க்கையை நோக்கி

பின் குறிப்பு
ஆசிரியரைப் பற்றி
ஹேப்பி சயின்ஸ் என்றால் என்ன?
ஹேப்பி சயின்ஸ்

புது பதிப்பிற்கான முன்னுரை

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான தடயங்கள் யாவை என்பதை கருத்தில் கொண்டு இந்த நூல் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டது. முதலில் 1989ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஜப்பானில் இரண்டு மில்லியனுக்கு அதிகமான புத்தகங்கள் விற்கப்பட்டன. இது அரசியல் வாதிகளுக்கும் பெரிய நிறுவனங்களின் மேலாளர்களுக்கும் விருப்பமான நூல் ஆகும். மொழிபெயர்க்கப்பட்டதால் உலகெங்கும் உள்ள வாசகர்கள் இதில் உள்ள கருத்துக்களைப் பாராட்டியுள்ளனர். ஆனந்தமான விஞ்ஞானம் என்னும் நான் தோற்றுவித்த மதம் தற்போது ஜப்பானில் மிகப்பெரிய மதமாகி மேலும் வளர்ந்து உலகில் உள்ள பெரிய மதங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

இருப்பினும் தற்போது பல நாடுகள் அரசியல் மற்றும் பொருளாதார அடிப்படையில் அதிகமாக உருக்குலைந்து மக்களுக்கு பெரும் சங்கடத்தைத் தருகின்றன. இக்காரணத்திற்காக இந்த நூல் வாயிலாக நான் கூறும் செய்தி என்னவென்றால், தோல்வி என்று ஒன்றும் இல்லை, மக்களுக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் சொல்லித் தரமுடியும் என்பதே.

இந்த நூலின் நோக்கம் வாசகர்கள் தலைசிறந்த தலைவர்களாகி மற்றவர்களுக்கு வழிகாட்டும் திறமை படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும். எந்தச் சூழ்நிலையிலும் மக்கள் வெற்றி பெறமுடியும் என்பதே வாகை சூடும் சிந்தனையின் தத்துவம் ஆகும். வெற்றியிலிருந்தும், தோல்வியிலிருந்தும் பாடங்களைக் கற்கும் வழிமுறைகள் தரப்பட்டுள்ளன. இதன்மூலம் தலைமைப் பொறுப்பு வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமையும். ஆக்கபூர்வமான சிந்தனை மற்றும் சுய ஆய்வு மூலம் எவ்வித சூழ்நிலையிலும் உங்கள் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள உதவும்.

ரியோ ஒகாவா,
ஹேப்பி சயின்ஸ்

முன்னுரை

வாகை சூடும் சிந்தனை என்னும் தத்துவம் வாழ்க்கையில் உண்மையான வெற்றியை ஈட்டித்தரும் சக்தி நிறைந்தது. வெற்றியைப் பெறுவதற்கு அர்த்தமில்லாத வழிகளை நான் போதனை செய்ய விரும்பவில்லை. இநத நூலில் ஆண்-பெண், வயது, நாடு என்பவற்றைத் தாண்டி எல்லோருக்கும் பொருந்தும் ஒரு தத்துவத்தை முன் வைக்கிறேன். நீங்கள் இளைஞராக இருந்தாலும், வயதானவர் ஆனாலும், ஆணானாலும், பெண்ணானாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், இந்த நூலை எடுத்து கடைசி வரை படித்து முடித்துவிட்டால், வாழ்க்கையில் வெற்றிக்கான பாதையை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும் என்பதற்கு நான் உறுதிமொழி தருகிறேன்.

வாழ்க்கை என்பது மலையைக் குடைந்து, உருவாக்கப்பட்ட ஒரு சுரங்கப் பாதை போன்றது. தண்ணீர் மற்றும் கடினமான பாறைகள் உருவாக்கும். ஆயினும் தடைகளை நீங்கள் எதிர்கொள்ளலாம். வாகை சூடும் சிந்தனைகள் என்னும் சக்தி வாய்ந்த வெடிகுண்டு மூலம், கடினமான பாறைகளைத் துளைக்கவும் உங்கள் இலக்குகளை அடையும் வரையில் எல்லாவித தடைகளையும் தகர்த்து எறிவதற்கான ஒரு துளைக்கும் கருவியாகவும் இருக்கும்.

இந்த நூலைப் படித்து, ரசித்து இந்தத் தத்துவத்தை உங்கள் பலமாக்கிக் கொண்டு, இனி தோல்வி என்பதே உங்களுக்குக் கிடையாது, வெற்றி மட்டுமே என்று தலை நிமிர்ந்து அறிவிப்பீர்கள்.

ரியோ ஒகாவா,
ஹேப்பி சயின்ஸ்

பகுதி
1

வாகை சூடுவது என்பதன் அடிப்படை

1

வாகை சூடுவது என்பதன் அடிப்படை

1. தலைவருக்குத் தேவையான தகுதிகள்

மக்கள் தாங்கள் வாழும் வாழ்க்கை எப்படி உருவாகும் என்று தொடர்ந்து கண்டுபிடிக்க முயல்கிறார்கள். எது உண்மையான மதிப்பு உள்ளது, எந்த திசையில் அவர்கள் போகவேண்டும் போன்ற வினாக்களின் விடைகளுக்காகவும் வழிகாட்டுதலுக்கும் ஒருவரைத் தேடுகிறார்கள். எனவே நீங்கள் தலைசிறந்த தலைவர் ஆவதற்கு, சரியான திசையை உங்களால் காட்ட முடிய வேண்டும்.

இந்த உலகத்தில் தங்களுடைய திறமைகள், நேரம், மற்றும் பணம் இவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்று உறுதியாகத் தெரியாமல் இருக்கிறார்கள். ஒரு தலைவர் என்பவர் வருங்காலத்தின் போக்கு. இப்போது மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். இதுவே உண்மையான ஞானம் பெற்றவர்களின் குறிக்கோளும் கூட. ஒரு தலைவராவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? இதுவே இந்த நூலின் மையக் கருத்து ஆகும்.

ஒரு தலைவருக்கு என்ன குணங்கள் அவசியம்? முதலில் நீங்கள் எப்போதும் எதிர்காலத்தைக் கணிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மற்றவர்களைவிட ஓரிரண்டு படிகள் அதிகமாகப் பார்க்கத் தெரிந்திருக்க வேண்டும். யார் ஒருவர் நிகழ்வுகளின் விளைவுகளை சரியாகக் கணிக்கத் தெரிந்தவரோ அவரே தலை சிறந்தவர், அசாதாரணமான திறமைகள் கொண்டவர் என்று மக்கள் கருதுவர். அதேபோல் மிக உயரமானவர் மற்றவர்களைவிட அதிக தூரம் பார்க்க முடியும். ஒருவரை தலைசிறந்தவர் என்று மக்கள் நம்புகிறார்கள் என்றால் அவரிடம் நிகழ்வுகளை மிகத் தெளிவாகப் பார்க்கும் திறமை உள்ளது. அதற்குக் காரணம் அவரிடம் உள்ள சீரிய

குணநலன்களும், ஆன்மிக சக்திகளும் ஆகும். இந்த குணங்கள் நிரம்பப் பெற்றவரைச் சுற்றி மெல்ல மெல்ல மக்கள் கவரப்பட்டு, அவரது புதிரான ஆளுமையை உணர்ந்து அவர்களையே விரும்பி பின்பற்றுவார்கள்

வருங்காலத்தைக் கணிப்பது என்பது தலைமைப் பொறுப்புக்கு அடிப்படைத் தேவை ஆகும். ஆனால் இது மட்டும் போதாது. வருங்காலத்தைக் கணிக்கும் போது தோல்வியின் சாத்தியக்கூறுகளை மட்டும் அல்லது வெற்றி கிடைக்காததைப்பற்றி மட்டும் முன்கூட்டியே சொன்னால், ஆரம்பத்தில் உங்களைத் தலைவர் என்று கருதினாலும், மக்கள் விரைவில் விலகி விடுவார்கள்.

பலர் இந்த இன்ஸ்டிடியூட் ஃபார் ரிசர்ச் இன் ஹ்யூமன் ஹேப்பினஸில் கூடி உள்ளார்கள். நான் அதன் தலைவர். இதில் சேர்ந்தால் ஏதாவது நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்புடன் குழுமியிருக்கிறார்கள். மூழ்கப்போகும் கப்பலில் யாரும் ஒன்றுகூட மாட்டார்கள். ஏதாவது நல்லது நடக்கும் என்று எதிர்பார்த்து எங்கள் இயக்கத்தில் சேர்ந்து அதில் ஒருவராகப் பங்கு வகிக்க விரும்புகிறார்கள்.

எனவே, தலைவர் ஆவதற்கு இரண்டாவது அடிப்படைத் தேவை என்னவென்றால், மக்கள் அவருடன் நெருங்கி இருந்தால், ஒரு ஒளிமயமான எதிர் காலத்தை எதிர்பார்க்கலாம் அல்லது ஏதாவது நல்லது நடக்கும் என்று பிறரை நம்பவைக்க வேண்டும்.

மூன்றாவது அடிப்படைத் தேவை என்பது ஒளிமயமான எதிர்காலத்தைத் திறந்து காட்டும் சக்தி மட்டுமின்றி, மற்றவர்களை உங்கள் உயர்ச்சியை நம்புவதற்குப் போதுமான கடந்த கால சாதனைகளும் உங்களிடம் இருக்க வேண்டும். தனித் திறமைக்காக தொடர் விருதுகள் வாங்கி இருக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தாலும் நீங்கள் உங்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை எப்படி சமாளித்தீர்கள் என்று மக்கள் பார்ப்பார்கள், அவற்றிலிருந்து உங்களுடைய தலைசிறந்த தலைமைப் பண்புகள் யாவை என்று தெரிந்து கொள்வார்கள்.

வரலாற்று நாயகர்களின் வரலாற்றைப் பார்த்தால், மிகச் சிலர் மட்டுமே வசதியான பின்னணியில் இருந்து வந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். நல்ல சூழ்நிலையில் பிறந்திருந்தாலும், ஒரு காலகட்டத்தில், அதிர்ஷ்ட அலைகள்

அவர்களுக்கு எதிராகத் திரும்பியதால், கடுமையான பின்னடைவு ஏற்பட்டு கொடுமையைச் சந்திக்க நேர்ந்தது. வழக்கமாக இவர்கள் சுகமான சூழ்நிலையில் பிறப்பதில்லை. ஆனால் வாழ்க்கையில் தங்கள் முயற்சியால் தடைகளைத் தாண்டும்போது, நிறைய வலிமையைப் பெற்றார்கள். மற்றவர்கள் இத்தகைய மனிதர்களின் மீளும் தன்மையில் விவரிக்க முடியாத வலிமையைக் கண்டார்கள்.

இதுவரையில் நான் தலைவருக்குத் தேவையான மூன்று குணங்களைக் குறிப்பிட்டேன். இந்த நூலில் “வாகைசூடும் சிந்தனை” என்பதை அறிமுகப்படுத்தப் போகிறேன். புதிய சகாப்தத்தில் தலைவர்களுக்கு இது இன்றியமையாத தத்துவம் ஆகும். வாகைசூடும் சிந்தனை என்பது ஒரு மனோபாவம் ஆகும். வாழ்க்கையில் என்ன நடந்தாலும், ஏதாவது ஆக்கபூர்வமானதை நீங்கள் பார்க்கலாம். எந்த நிலைமையையும் உங்களுக்கு சாதகமாகத் திருப்பலாம். இந்த தத்துவத்தைப் பின்பற்றினால், இக்கட்டான நிலை என்பதும் கடினமான நிலை என்பதும் கிடையாது. தொடர்ந்து வரும் வாய்ப்புகளே இருக்கும்.

2. மறுசிந்தனை தலைவர்களை உருவாக்குகிறது

உங்களுடைய விருப்பங்கள் எல்லாம் நிறைவேறினால் எவ்வளவு நன்றாக இருக்கும், வழிகள் எல்லாம் எளிதாகத் திறந்தால் எப்படி இருக்கும் என்று நீங்கள் கனவு காணலாம். இருந்தாலும் உண்மையில் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் மூலம் நிறைய தெரிந்து கொள்ளலாம். உடல்நலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சிலர் எப்போதும் பலம் நிரம்பப்பெற்று வீரியத்துடன் இருப்பார்கள். அவர்கள் உடல்நலத்தைப் பற்றி சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்வதில்லை. நோய்வாய்ப்படுதல் என்பது நல்ல உடல்நலம் என்பதற்கு எதிர்ப்பதம் என்றாலும் நோய்வாய்ப்படுதல் துயரத்தையே தருமா என்று கேட்டால், அதற்கு விடை நீங்கள் கற்பனை செய்வதுபோல் அவ்வளவு எதிராக இருக்காது.

எப்போதாவது ஒருமுறை ஏன் மனிதர்கள் நோய் வாய்ப்படுகிறார்கள் அதற்கு முன்னால் முந்திய கட்டம் ஒன்று இருக்கிறது. உடல்நலம் குறைவதற்கு முன்னால், ஓர் பூர்வாங்க காலகட்டம் உள்ளது. ஏதோ கோளாறு வரப் போகிறது என்பதற்கான குறியீடுகள் தெரிகின்றன என்று அவர்கள் உணர்வார்கள். அவர்கள் உடல் வலிக்கும். எப்பொழுதும்

வேலை பார்த்தது போல் வேலை பார்க்க முடியவில்லையே என்பார்கள். ஒருவிதத்தில் பார்த்தால், நிறுத்தி ஒய்வெடுங்கள் என்று சொல்லும் இயற்கையின் வழி ஆக இருக்கும். உடல்நலம் எப்போதும் நன்றாகவே இருக்கிறது என்று நினைப்பவர்களுக்கு உண்மையிலேயே நோய்வாய்ப்படும் வரையில் ஓய்வெடுக்கவே தெரியாது.

கடுமையாக உழைத்து நீங்கள் “சக்தி இழந்து போகும்” நிலை வரும்போது, உங்களுக்கு தற்காலிகமாக ஓய்வு என்பது சுகமின்மை மூலம் தரப்படுகிறது. அதனால் உங்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்நாட்களை முழுவதும் வாழ்ந்து, பிறந்த நோக்கத்தை நிறை வேற்றுவீர்கள். நோயின் காரணமாக உங்கள் வாழ்க்கை நீட்டிக்கப்படுகிறது. நீங்கள் நோய்வாய்ப்படாமல் இருந்தால், நீங்கள் “சக்தி இழந்துபோய்” உங்கள் காலம் முடிவதற்கு முன்னரே இந்த உலகத்தை விட்டுப் போயிருப்பீர்கள். இதைத் தவிர்ப்பதற்காக, உங்கள் உடல்நலம் குறைகிறது. கட்டாயமாக உடல்நலத்தைத் திரும்பப்பெறும் கட்டத்திற்கு அனுப்பப் படுகிறீர்கள்.

உடல்நலம் திரும்பப் பெறுவது என்பதின் முக்கியத்துவம் என்ன? இது வெறும் உடலுக்கான ஓய்வு காலம் அல்ல. உள்நோக்கி சிந்திப்பதற்கும், தியானம் செய்வதற்கும் தரப்பட்ட காலம் அது. வெளி உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளில் ஊன்றிப்போய் அவற்றின் விளைவுகளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால், உள்நோக்குவதை மறந்துவிடுகிறீர்கள்.

உங்களுக்கு எளிதில் புரிந்து கொள்வதற்கு, ஒரு நிறுவனத்தின் விற்பனைப் பிரிவில் வேலை செய்யும் ஒருவரின் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். வியாபாரம் நன்றாகப் பெருகும்போது, அவர் புதிய வாடிக்கையாளர்களைக் கொண்டு வருகிறார். அந்த நேரத்தில், தன்னைப்பற்றி நினைத்துப் பார்ப்பாரா? அல்லது தன் குடும்பத்தைப் பற்றியும் அல்லது மற்றவர்களைப் பற்றியும் நினைப்பதற்கு அவருடைய மனதில் இடம் இருக்குமா?

அநேகமாக இல்லை என்றே பதில் வரும். அவரைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு நிலைமையும் வரும்போது அதை எப்படிக் கடப்பது என்பதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பார்.

ஒரு மாதத்திற்கு பதினைந்து கார்கள் விற்பனைசெய்ய வேண்டும் என்று தனக்கு ஓர் இலக்கை நிர்ணயித்து, அப்படி செய்ய

முடிந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவார். தன்னுடைய செயல்பாட்டில் திருப்தி அடைந்து அடுத்த மாதம் பதினெட்டு கார்கள் என்ற இலக்கை நிர்ணயிக்கலாம். இருந்தாலும் இத்தகைய மனிதர்கள், முடிவுகளில் மட்டுமே கவனம் செலுத்துபவர்கள். அவர்களுடைய மனம் எப்போதும் வெளிநோக்கியே இருப்பதால் காலப்போக்கில் பின்னடைவைச் சந்திப்பார்கள். அதற்குக் காரணம், அவர்கள் வாடிக்கையாளர்கள் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் உண்மையிலேயே தாங்கள் வாங்கியதினால் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்களா என்பதையே மறந்துவிடுகிறார்கள்.

எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருக்கும் வரையில் மற்றவர்கள் உணர்வுகளைப்பற்றி கவலைப்படுவதை மறந்து, தங்களுடைய திருப்தியிலும் மகிழ்ச்சியிலும் மட்டுமே ஆழ்ந்திருப்பார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் மற்றவர்களின் உணர்ச்சிகளை மதிக்க மறந்துவிடுகிறார்கள். உண்மையான பொருளில், ஒரு நல்ல விற்பனை என்பது, விற்பனை முடிந்த பிறகும் தொடர்ந்து மகிழ்ச்சியைத் தருவது என்பதாகும். மாறாக, ஒரு விற்பனை செய்பவர், விற்ற பொருளுக்கு பதிலாக தன்னுடைய எண்ணிக்கையிலும் முடிவுகளிலும் மட்டுமே கவனம் செலுத்தினால், வாடிக்கையாளர்கள் வாங்கியதற்காக வருந்தி, அதிருப்தி அடைவார்கள் என்பதை அவர் உணர மாட்டார். இத்தகைய மனிதர்கள் போட்டி நிறைந்த சமுதாயத்தில் முன்னேறப் போராடுவார்கள். எனவே மற்றவர்களைப் பற்றி கவலைப்படமாட்டார்கள். எல்லாவற்றையும் பலன் என்பதை வைத்தே எடை போடுவதால், தவறான உறுதி மனோபாவத்துடன் வாழ்கிறார்கள். பலர் வெற்றியை நோக்கிப் போவதுபோல் நம்பிக்கொண்டு பொய்யான வாழ்க்கை வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் பின்னடைவைச் சந்தித்தால் ஒழிய, அவர்கள் உயர்நிலையை அடைய முடியாது. பின்னடைவு என்பது தங்கள் வேலையிலோ அல்லது நோயின் உருவத்திலோ வரலாம்.

இயற்கை ஒருவருக்கு மறுசிந்தனை செய்வதற்கு வாய்ப்புகள் தரும். அப்படி நடக்கும்போது நீங்கள் ஆழமாக உள்நோக்கி சிந்திப்பீர்கள். அந்த நேரம் உங்கள் ஆத்மாவுக்கு மிக முக்கியமானதாகும். ஒருமுறை கூட மறுசிந்தனை செய்யாதவர்கள், அல்லது தங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளாதவர்கள் ஒரு போதும் உண்மையான தலைவர்கள்

ஆகமுடியாது.

3. ஆன்மிக வளர்ச்சிக்கு சோதனைகள் தேவை

விற்பனை செய்பவர் உதாரணத்திற்கு மீண்டும் வருவோம். மற்றவர்களைப் பற்றி கொஞ்சம்கூட கவலைப்படாமல் இருந்தாலும், அவருடைய விற்பனையின் சாதனை மேன்மேலும் உயர்ந்து, இறுதியில் அவருடைய நிறுவனத்தில் தலைசிறந்த விற்பனையாளர் என்று பெயரெடுத்து, விற்பனை மேலாளர் என்ற பதவி உயர்வு அவருக்குப் பரிசாக வழங்கப்படுகிறது. இதுவரையில் அவர் தன்னுடைய வேகத்தில் வேலை செய்து, விற்பனை முடிவுகளின் அடிப்படையில் மட்டும் மதிப்பீடு செய்யப்பட்டார். இப்போது அவர், விற்பனை மேலாளர் ஆகிவிட்டதால், அவரிடம் கீழே வேலை செய்பவர்களுக்கு என்ன ஆகும்?

அவர் ஊழியர்களை தன்னுடைய முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக முயற்சி செய்வார். அவர் தரும் அறிவுரைகள் விற்பனை இலக்குகள் பற்றியே இருக்கும், ஒவ்வொருவரும் மாதத்திற்கு எத்தனை கார்களை முயன்று விற்க முடியும் என்பதாகும். அவர்களால் இலக்குகளை அடைய முடியாவிட்டால், அவர்களை வேலை செய்யத் திறமை அற்றவர்கள் என்றும், நிறுவனத்திற்கு பாரம் என்றும் நோக்குவார். ஆனால் அவர்கள் வெற்றி பெற்றால், அவர்களை நல்ல தொழிலாளிகள் என்று போற்றுவார். அவருடைய தொழிலாளர்களை மதிப்பீடு செய்வதற்கு இது ஒன்றே அளவை ஆகும்.

அவர்களின் விற்பனைக் குறியீடுகளைப் பார்த்து, படிப்படியாக மேன்மேலும் ஏமாற்றமடைவார். ஏனென்றால், அவரால் மாதத்திற்கு பதினைந்து கார்கள் விற்பனை செய்ய முடிந்தது. ஆனால், அவருடைய ஊழியர்களுக்கு ஐந்து மட்டுமே விற்பனை செய்யும் திறமை இருக்கிறது. ஒரு நல்ல மேலாளர், தன் கீழே பணிபுரியும் ஊழியர்களைத் தனியே அழைத்து எப்படி அதிக கோரிக்கைகளைப் பெறுவது என்று சொல்லித் தருவார். ஆனால் இத்தகைய மேலாளர் தானே விற்பனையை முடிக்க நினைப்பார். கீழே பணிபுரிபவர்களைத்தவிர்த்து விட்டு மற்ற நிறுவனங்களையோ அல்லது வாடிக்கையாளர்களையோ தொடர்பு கொண்டு நேரடியாக வியாபாரத்தை முடிப்பார். கீழே பணி புரிபவர்கள் மேன்மேலும் தங்கள் வேலையில்

வெறுப்படைந்து, “நீங்களே விற்பனை செய்ய விடும்பினால், ஒரு திறமையான விற்பனையாளராக உங்களை வரவேற்கிறோம்” என்று சொல்வார்கள். இதன் பயனாக, துணை ஊழியர்கள் திறமையான விற்பனையாளர்களாக உருவாக மாட்டார்கள்.

இந்த மேலாளர் இவ்வாறு நடந்து கொள்வதற்குக் காரணம் அவர் எப்போதும் தன்னுடைய வெற்றியில் மட்டுமே ஆர்வமாக இருந்தார். அவர் கற்றது அவ்வளவே ஆகும். மனிதனின் மனோதத்துவத்தை அவர் ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை. அநேகமாக அவர் தன்னுடைய வேலையை சுயநலத்துடன் சாதிக்கும் ஆர்வத்தில் வேலை செய்திருக்கலாம். உண்மையில், விற்பனைப் பிரிவில் நன்றாக வேலை செய்பவர்கள் தற்பெருமையுடனும் சுய ஆராய்ச்சி செய்யும் திறமை இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

இத்தகைய மனிதர்கள், தங்களை எல்லோரும் விரும்புவதாகவும், வெளிப்படையாகவும் இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு மற்றவர்கள் விஷயத்தில் நுழைந்து வியாபாரம் செய்வதில் மகிழ்ச்சி அடைவார்கள். ஆனால் உண்மையில், இத்தகைய மனிதர் அலுவலகத்தை விட்டுப் போனவுடன் அனைவரும் விடுதலை கிடைத்ததற்காக ஒரு பெருமூச்சு விடுவார்கள். இத்தகைய மனிதர்களுக்கு அவர்கள் எவ்வளவு சுயநலத்துடன் இருக்கிறார்கள் என்பது தெரியாது. அனைவரும் நண்பர்களே என்று நினைத்து வியாபாரம் செய்வார்கள் இது பொதுவாக எப்போதும் நடக்கும் கதைதான்

கீழே பணிபுரிபவர்களில் எச்சரிக்கை உணர்வு உள்ளவர்கள் மற்றும் உணர்வு மிக்கவர்கள் இத்தகைய மேலாளரைப்போல் வெட்கம் கெட்டு நடக்க மாட்டார்கள். அவர்களால் மேலாளரின் உதாரணத்தையும் அறிவுரைகளையும் பின்பற்ற முடியாது. அவர்கள் தங்களுடைய அனுபவத்தினால் கிடைத்த பலத்தின் அடிப்படையில் சாமர்த்தியத்தைப் பயன்படுத்துவார்கள். உதாரணமாக, ஒரு பொழுதுபோக்கை உரையாடுவதற்கு ஒரு தலைப்பாகப் பயன் படுத்தி, வாடிக்கையாளர்களிடம் நெருக்கமாகி, விற்பனையை அதிகரிக்க நட்பைப் பயன்படுத்துவார்கள். இருப்பினும் விற்பனை மேலாளர் இத்தகைய அணுகுமுறை பார்ப்பதற்கு மிகவும் ஏமாற்றமளிப்பதாக நினைப்பார்.

இத்தகைய மேலாளருக்கு ஒரு கட்டத்தில் ஆத்மாவுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். அவர்கள் குணமடைவதற்கு அவகாசம்

தேவை. அவர்களுக்கு துரதிருஷ்டம் அல்லது கொடுமை அனுபவித்தால் ஒழிய, மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாது. வழக்கமாக தாங்கள் நிறுவனத்திற்கு இன்றியமையாதவர்கள் என்றும் அவர்கள் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது என்றும் நினைப்பார்கள். ஆனால் அவர்கள் உடல்நலம் குன்றி இருக்கும்போது அவர்கள் இல்லாமலேயே எல்லாம் ஒழுங்காகவே நடக்கிறது என்று அறிந்தவுடன் அதிர்ச்சி அடைவார்கள். மிகப்பெரிய அதிர்ச்சி எப்போது நிகழும் என்றால் அவருடைய சக ஊழியர்கள் மருத்துவமனைக்கு வந்து பார்த்துவிட்டு, “எல்லாம் அலுவலகத்தில் நன்றாகவே இருக்கிறது. நீங்கள் தயவு செய்து வேலையைப்பற்றி கவலைப்படாதீர்கள்” என்று கூறும் இந்த ஆறுதல் வார்த்தைகள் அவர்களுக்கு மிகவும் வருத்தத்தையே தரும். ஏனென்றால் அவர்களுடைய சக ஊழியர்கள் அவர்களிடம் விரைவில் வேலைக்கு வருமாறும், அப்போதுதான் எல்லாம் ஒழுங்காக நடக்கும் என்று கெஞ்சுவார்கள் என்று எதிர்பார்ப்பார்கள்.

இத்தகைய அனுபவம் உண்மையை உடைத்தெறிகிறது. இத்தகைய மனிதர்கள் கோமாளிகளைப் போன்றவர்கள். பளிச்சிடும் ஒளிவிளக்கின் கீழ் தம்மை மறந்து நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் பார்வையாளர்கள் அனைவரும் காணாமல் போய்விட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. இப்பேர்ப்பட்ட மனிதர்கள் ஏதாவது கடும் சோதனையை அனுபவிக்க வேண்டும். அது பின்னால் நோக்கிச் செல்லும் போக்கு அல்ல. அது அவர்களுக்கு ஓர் அனுபவமாகவும் தங்கள் உயர்ச்சியை மேம்படுத்துவதற்கும் அவசியமானது ஆகும்.

4. கடும் சோதனையிலிருந்து அனைத்தையும் கற்றுக் கொள்ளுங்கள்

திறமைசாலிகள் ஒரு புதிய வேலையைத் தொடங்கும்போது கடுமையாக உழைத்து தாங்கள் எவ்வளவு திறமையாக வேலையைச் செய்யமுடியும் என்பதை நிரூபிக்க முயல்கிறார்கள். இந்த நடத்தை எங்கள் மன்றத்தில் சொல்லித் தரும் “வழங்கும் அன்பு” என்பதற்கு எதிரானதாகும். அதை “ஏங்கும் அன்பு” என்று சொல்லலாம். ஏனென்றால் அது வெறும் பாராட்டுக்கு ஏங்குவதாகும். இவ்வாறு நடந்துகொள்பவர்கள்

மற்றவர்களின் மெச்சுதலைப் பெற ஆர்வமுடன் இருப்பார்கள். அவ்வாறு கிடைக்காவிட்டால், மேலும் தொடர்ந்து முயற்சி செய்வார்கள். வேடிக்கை என்னவென்றால், எவ்வளவுக்கெவ்வளவு முயற்சி செய்கிறார்களோ, சுற்றி உள்ளவர்கள் அந்த அளவுகூட திரும்பிப் பார்க்க மாட்டார்கள். இதனைப் புரிந்துகொள்வது கடினம்தான். நீங்கள் எவ்வளவு கடுமையாக வேலை செய்கிறீர்களோ, அதைவிடக் குறைவாகவே உங்களுக்கு பாராட்டு கிடைத்திருக்கும் என்பதை அனுபவத்தில் கண்டிருப்பீர்கள்.

இத்தகைய அதிக ஆர்வம் நிறைந்த மனிதர்கள் உண்மையில் பிறரிடமிருந்து அன்பை எடுத்துக் கொள்கிறார்கள் என்பது தெரியவரும். புகழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் ஏங்கும் மக்கள், கடுமையாகமுயற்சி செய்யும்போது பிறருக்கு பாராட்டைத் தந்தால், தங்களிடமிருந்து ஏதோ குறைந்துவிடுவது போலவும், எதையோ பிறர் எடுத்துக்கொள்வது போலவும் தோன்றும். மற்றவர்களைப் பாராட்டினால் எதையோ இழப்பது போலவும் தோன்றும்.

உங்களைச் சுற்றி உள்ளவர்களில் பாராட்டைத் தேடி அலைபவர்கள் யார் என்பதை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். உங்கள் உறவினர் அல்லது சக ஊழியர் இவ்வாறு செய்யும் வேலைக்கு அங்கீகாரத்தையும் பாராட்டையும் உள்ளுக்குள்ளேயே எதிர்பார்க்கிறார்களா? உண்மை என்னவென்றால் இவர்களைப் பாராட்டுவது என்பது மிகக் கடினம். எனவே அவர்கள் மேலும் கடுமையாக முயற்சி செய்கிறார்கள். இந்த நச்சுச்சூழல் எந்த அளவுக்குப்போய்விடுகிறது என்றால், மற்றவர்கள் இவர்களை விளம்பரப் பிரியர் என்று பட்டம் சூட்டிவிடுவர். இங்குதான் இத்தகைய இரண்டுங் கெட்டான் நிலை உருவாகிறது. இத்தகைய மனிதர்கள் எவ்வளவு கடுமையாக முயற்சி செய்தபோதும், தங்களை எவரும் தட்டிக்கொடுத்துப் பாராட்ட வில்லையே என்று ஏமாற்றமடைவார்கள். இந்த உலகம் அநீதி நிறைந்தது, மற்றவர்களைப் பாராட்டாத மக்கள் நிறைந்தது என்று வருத்தப்படுவார்கள்.

உண்மை என்னவென்றால் உங்களுடைய அங்கீகாரத்துக்கு நீங்கள் போராடிக் கொண்டிருக்கும்போது, மற்றவர்களின் நல்ல குணங்கள் உங்களுக்குத் தென்படாது. உங்கள் முயற்சிக்கு பிறரிடம் அங்கீகாரத்தைப் பெறுவதில் மூழ்கி இருக்கும்போது,

மற்றவர்கள் உங்களுக்கு ஆதரவு தருவதற்கே இருக்கிறார்கள் என்ற மாயையில் இருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், தங்கள் வெற்றியிலேயே குறியாய் இருப்பவர்கள், பிறருக்கு நிச்சயமாக மகிழ்ச்சியைத் தரமுடியாது. மக்களுக்கு சுரணை அதிகம் இத்தகைய மனிதர்களுடன் இருந்தால் மகிழ்ச்சி இருக்காது என்று தெரிந்தால், மெல்ல அவர்கள் ஒதுங்கிப் போய்விடுவார்கள். பிறகு அவர்களைப்பற்றி விமர்சனம் செய்யத் தொடங்கி, பாராட்டை எதிர்பார்ப்பவரைப்பற்றி கொச்சையாக பேசத் தொடங்குவார்கள். இவ்வாறு அவர் எதிர்பார்த்ததற்கு நேர் எதிர்மாறாக நிலைமை படிப்படியாக மோசமாகப் போகும்.

எனவே வேலையில் ஒரு பின்னடைவு ஏற்பட்டாலும், நீங்கள் எதிர்பார்த்தது நடக்காவிட்டாலும், அதை எதிர்மறையாக எடுத்துக்கொள்ளாதீர்கள். மாறாக, உங்கள் ஆன்மாவை வலுப்படுத்துவதற்கும், மற்றவர்களை நன்றாகப் புரிந்து கொள்வதற்கும் தரப்பட்ட வாய்ப்பு என்றே எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் இந்த அளவு தன்மையமானவராக இருந்ததனால், உங்கள் நிறுவனம் நீங்கள் இல்லை என்றால் இயங்காது என்று நினைத்தீர்கள். ஆனால், நீங்கள் வராமலிருந்தாலும், எல்லா வேலைகளும் அருமையாக நடந்து வருகிறது என்பதே உண்மை. துரதிருஷ்ட வசமாக உலகம் இப்படித்தான் இயங்குகிறது.

வியாபாரத்தில் ஒருவர் மாறிப்போனால் அவருடைய இடத்திற்கு வேறு ஒருவர் இருப்பார். தலைவர் என்பவர்கூட இன்றியமையாதவர் என்று கருதப்பட்டாலும் விரைவில் அவர் இடத்தை நிரப்ப யாராவது ஒருவர் வருவார். வேறு விதமாகச் சொன்னால், அலுவலகத்தில் வேலை என்பது ஒரு தனி மனிதரால் செய்யப்படுவது அல்ல. அனைத்து ஊழியர்களின் கூட்டு முயற்சியே ஆகும். மற்றவர்கள் உழைப்பின் அடிப்படையில் மட்டுமே உங்கள் திறமையை வெளிப்படுத்த முடியும். இதனை நீங்கள் மறக்கவே கூடாது.

எனவே நீங்கள் ஏதாவது சிக்கலிலோ அல்லது துன்பத்திலோ சிக்கி இருக்கும்போது, கடந்த சில ஆண்டுகளில், அல்லது பத்து ஆண்டுகளில் நீங்கள் எப்படி வாழ்ந்தீர்கள் என்பதைத் திரும்பிப் பாருங்கள். உங்கள் வாழ்க்கை நிலைதடுமாறாமல் பார்த்துக் கொண்டீர்களா அல்லது உங்களுக்கான பாராட்டு களை மட்டுமே நினைத்து, மற்றவர்கள் செய்த வேலைகளுக்கு நீங்கள் மதிப்பு தர மறந்தீர்களா? நீங்கள் இதைப்பற்றி

சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களை இந்த கோணத்தில் ஆராயவேண்டியது மிக முக்கியம். உங்களுக்கு வாழ்க்கையில் பல வாய்ப்புகள் கிடைத்தன. தடைகளைத் தாண்டி வந்தீர்கள் இவ்வாறு வாழ்க்கையில் பல இன்னல்களை வெற்றி கண்டவர்கள், தடைகளைத் தங்கள் பலமாக்கிக் கொண்டனர். ஆனால் துயரங்களில் போராடாமல் அவற்றில் சிக்கிக்கொண்டவர்கள் இருட்டில் தடுமாறினர். உங்களுக்கு எந்த வருத்தம் வந்தாலும் அது நெடுநாட்கள் நீடிக்காது. எனவே அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அது தரும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

5. சாக்குபோக்கு வாழ்க்கை வாழாதீர்கள்

துயரம் உங்களைச் சூழும்போது இத்தகைய சூழலில் நீங்கள் மட்டுமே சிக்கிக் கொள்கிறீர்கள் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். நோயினால் அவதிப்படுபவர்களுக்கும், தங்கள் உயர்ந்த நோக்கத்திற்குப் பின்னடைவு, தோல்வி அடைபவர்களுக்கும் இது பொருந்தும். ஏதோ அவர்கள் மட்டுமே இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்று நினைக்க வேண்டாம்.

துன்பகாலம் உங்களுக்கு வரும்போது கண்களையும் இதயத்தையும் திறந்து வைத்துக்கொண்டு சுற்றி இருப்பவர்களைப் பாருங்கள். வெற்றி பெற்றவர்கள் அனைவரும் எப்போதும் அதிர்ஷ்டக்காரர்கள் என்று நினைக்க வேண்டாம். அவர்களுக்குள் நிறைய பேர் கடுமையாக உழைத்து தங்களுக்கு வந்த துன்பத்தை எதிர்கொண்டு அதனையே வெற்றிக்கு உந்து பலகையாக மாற்றிக் கொண்டார்கள்.

உங்களைப் போலவே துன்பத்தில் உழல்பவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். நோய்களில் பலவிதமான நோய்கள் உண்டு. உங்கள் நிலைமை எதுவாக இருந்தாலும், இத்தகைய நோயில் அவதிப்படுபவர் நீங்கள் மட்டுமல்ல, உங்களைப்போல் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட் (1882-1945) என்னும் புகழ்பெற்ற அமெரிக்க குடியரசுத் தலைவர் தள்ளு நாற்காலியிலேயே

வாழ்ந்தார். தள்ளு நாற்காலியை நம்பி இருப்பவர்கள், சாதாரணமாக நடமாடுவதும் சமுதாயத்தில் சுறுசுறுப்பாக பங்கேற்பதும் கடினம். இருப்பினும் இத்தலைவர் இத்தகைய ஊனம் இருந்தும் தலைவரின் கடமைகளைச் சிறப்பாகச் செய்தார். அவர் ஒரு மாமனிதர் ஆவார். ஏனென்றால், அவர் சாக்குபோக்கு வாழ்க்கை வாழாமல், எல்லா வேலைகளையும் நன்றாகச் செய்தார். தன்னுடைய ஊனத்தை வெற்றி கொள்ள அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

மேலும் ஓர் உதாரணம். பெண்மணி ஒருவர், அமெரிக்காவில் மிக உயர்ந்த இடத்தை அடைந்தார். சிறு வயதில் கணவனை இழந்து தன்னுடைய பிள்ளைகளால் அவர் கைவிடப்பட்டு, நோய்வாய்ப்பட்டு வறுமையில் வாடினார். இத்தனை பரிதாபகரமான சூழ்நிலைகள் இருந்தும், அரசாங்கத்தில் மிக உயர்ந்த ஒரு பதவிக்கு உயர்ந்தார்.

இத்தகைய மனிதர்கள் இன்னல்களின் வாயிலாக வாழ்க்கையின் முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொண்டனர். தாங்கமுடியாத இன்னல்களில் உழன்று கொண்டிருந்தபோதும், சாதாரண மனிதர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத உயரத்திற்கு உயர்ந்தவர்களிடம் சில குணங்கள் உண்டு. அவற்றைப் படித்து நான் கண்டுபிடித்த சிலவற்றை விளக்க விரும்புகிறேன். முதலில் தங்கள் இன்னல்களுக்கு மற்றவர்கள் காரணம் என்று சொல்வதில்லை. மற்றவர்கள் மீது பழியைப் போடுவதில்லை அல்லது தங்கள் நிலைமையை நினைத்து ஒப்பாரி வைப்பதில்லை. ஏனென்றால் அதனால் ஒன்றும் பயன் இல்லை என்று அவர்களுக்குத் தெரியும். முதல் திறவுகோல் என்னவென்றால், உங்கள் இன்னல்களுக்கு மற்றவர்கள் மீது பழியைச் சுமத்தாதீர்கள்.

இரண்டாவது, அவர்கள் விதி என்ன தந்ததோ அதை ஏற்றுக்கொண்டார்கள். “ஒருவேளை அதுமட்டும் அவ்வாறு நடக்காமலிருந்தால்” என்று குறைபட்டுக் கொள்ளவில்லை. மாறாக, எத்தகைய இழப்போ அல்லது இன்னலோ வந்தாலும் அவற்றை ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொள்வதின் மூலம் இதுவே உண்மை நிலை என்று உணர்ந்து அவற்றை எப்படி சமாளிப்பது என்பதில் கவனம் செலுத்தினர். தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை வாழ்க்கையின் மெய்மையின் ஒரு பகுதியே என்று ஏற்றுக்கொள்ளும் துணிவும் மன உறுதியும் அவர்களிடம் இருந்தது.

மூன்றாவதாக, எத்தகைய இன்னல்கள் வந்தாலும், அவற்றில் ஏதாவது ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டனர். இந்தக் கடினமான பாடம் என்ன சொல்லித் தர முயல்கிறது என்று அலசிப்பார்த்து அதற்கு விடை தெரியும் வரையில் தேடினர். அவர்கள் கற்றுக்கொண்ட பாடம் விலை மதிக்க முடியாதது. அவர்கள் நீண்ட நாட்கள் வரையிலும் இதயத்தில் வைத்து போற்றத்தக்கதாக அமைந்தது.

நான்காவதாக, மற்றவர்கள் துணையை அவர்கள் நம்பி இருக்கவில்லை. தங்கள் ஊனங்கள் எதுவாயினும் தாங்கள் வகுத்த பாதையில் சுதந்திரமாக, ஆர்வத்துடன் தனியே சென்று, தமக்கான உதவியைத் தாமே தேடிக் கொண்டார்கள். விதியை ஏற்றுக்கொண்டாலும், அந்த நிலை அப்படியே நிலைத்திருக்க விட்டுவைக்க வில்லை. தங்களிடம் உள்ள வலிமையைப் பயன்படுத்தி கடினமான சூழ்நிலையிலிருந்து வெளிவர முயன்றனர். மிகச் சிறந்தவர்கள் இந்த வழியை மட்டுமே பின்பற்றி இருக்கிறார்கள்.

தன்னுடைய அவல நிலையை நினைத்து கழிவிரக்கத்தில் உழலுவோர் ஒருபோதும் உயர்நிலையை அடைய முடியாது. தன்னைத் தானே நொந்து கொள்ளலாம் என்னும் ஆசைக்கு எளிதில் இணங்கிவிடுகிறார்கள். மற்றவர்களிடம் அனுதாபத்திற்காகக் கையேந்தும்போது தொடர்ந்து பரிதாபத்திற்காக ஏங்கும் வாழ்க்கையில் விழுந்துவிடுகிறார்கள். எல்லாம் நன்றாகவே போய்க் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று ஒரு மோசமான நிலை உருவானது அல்லது எதிர்பாராத விதமாக உங்களுக்கு நோய் அல்லது ஊனம் ஏற்பட்டது என்று மற்றவர்களை எதிர்பார்ப்பது என்ற எண்ணம் வந்துவிட்டால், உங்கள் ஆத்மா தோல்விக்குத் தயார் என்று பொருள். மாறாக விதி செய்யும் சதியைத் துணிச்சலுடன் ஏற்றுக்கொண்டு வெற்றி கொள்ள உறுதி பூணுங்கள்.

6. நம்பிக்கையும் மன உறுதியும் ஒரு புதிய வழியைக் காட்டும்

விதியினால் ஏற்பட்ட தடங்கலைத் தாண்டிப்போக நீங்கள் மிகப் பெரிதாக ஏதோ செய்ய வேண்டும் என்று அர்த்தம் அல்ல. நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான ஒன்றில் தொடங்கி, ஒரு புதிய வழியை வகுக்க வேண்டும். எதைச் செய்வதற்கு உங்களிடம் தகுதி இருக்கிறது, தற்போது உள்ள என்னை செய்ய முடியும்

என்று உங்களையே கேட்டுப் பாருங்கள். இதுவரையில் நீங்கள் தெரிந்துகொண்ட திறமைகளை உங்களால் பயன்படுத்த முடியவில்லை என்றால், உங்களிடம் வேறு ஏதாவது திறமை இருக்கிறதா என்று ஆராயுங்கள்.

நீங்கள் இளமையாக இருந்தபோது உங்களுடைய பிள்ளைகள், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள் உங்களிடம் இருந்த எந்தத் திறமையைக் கண்டு வியந்தார்கள்? ஒருவேளை, உங்களிடம் சில திறமைகள் ஒளிந்து கொண்டிருக்கலாம். அவற்றை நீங்கள் உணராமல் இருக்கலாம். வளர்த்துக் கொள்ளாமல் விட்ட சில திறமைகளால் எதிர்காலத்திற்கான ஒரு பாதையை உங்களால் திறக்கமுடியும்.

கைகள் இல்லாமல் கால்களால் ஓவியம் வரையும் ஒரு மனிதரைப் பற்றிய ஆவணப்படம் ஒன்றைத் தொலைக்காட்சியில் பார்த்தது நினைவுக்கு வருகிறது. கால் விரல்களுக்கு இடையில் தூரிகை ஒன்றைப் பிடித்துக்கொண்டு மிகச் சிறந்த ஓவியங்களைத் தீட்டினார். நான் அசந்து போனேன். அவரால் கால்களால் எந்த வேலையையும் செய்ய முடியும் என்றும், நாம் கைகளை இழக்க நேரிட்டால், கால்களை அவற்றிற்கு மாற்றாக பயன்படுத்த முடியும் என்பதைச் செய்து காட்டினார். கடும் முயற்சியின் பலனாக செய்ய முடிந்த ஓர் உண்மை வாழ்க்கை நிகழ்ச்சி இது. நம்மில் பலர் கைகளை இழந்தால், வேறு ஏதேனும் முயற்சி செய்வதற்கு பதிலாக அவர்கள் வாழ்நாள் முழுவதும் பார்த்துக்கொள்ள எவராயினும் கிடைப்பார்களா என்று பார்ப்பார்கள். ஆனால் தொலைக்காட்சியில் பார்த்த மனிதர் சற்று மாறுபட்டவர். மற்றவர்களைச் சார்ந்திருக்க விரும்பவில்லை. இருக்கின்ற மற்ற உறுப்புகளுடன் தன்னுடைய வாழ்க்கையை மன உறுதியுடன் அமைத்துக் கொள்ள முடிந்தது. அவருக்கு ஓவியம் தீட்டப் பிடிக்கும். எனவே கால்களைப் பயன்படுத்தி பயிற்சி மேற்கொண்டார். ஆரம்பத்தில் அதிகம் சாதிக்க முடியாவிட்டாலும் மெல்ல மெல்ல எவ்வளவு பயிற்சி செய்தாரோ, அதற்கேற்ப சித்திரம் என்று துவங்கி மேலும் முயற்சி செய்து சிறந்த ஓவியங்களைத் தீட்ட முடிந்தது.

கைகள் இல்லாதவர் ஓவியர் ஆக முடிந்தது. கால்விரல்களுக்கிடையில் தூரிகையைப் பிடித்துக் கொண்டு வண்ணக்குப்பியிலிருந்து வண்ணக் கலவையை வெளியே எடுத்து அற்புதமான ஓவியத்தைத் தீட்ட இவரால் முடிந்தது என்றால், எந்தவித ஊனமும் இல்லாத ஒருவர் மனஉறுதியுடன்

உழைத்தால் எதையும் சாதிக்க முடியும். உங்கள் பெற்றோர் அல்லது காப்பாளர் தந்த உதவியால் உங்களுக்கு கல்விஅறிவு கிடைத்தது. நீங்கள் உடல் ஆரோக்கியமாக இருந்தால், மனம் வைத்தால் ஏன் எதையும் சாதிக்க முடியாது என்று சிந்தியுங்கள்!

தற்போது கல்விக்கூடங்கள் மக்கள் தங்கள் இலக்குகளை எட்டுவதற்கு ஏதுவாக பல்வேறு திறமைகளை வளர்த்துக்கொள்ள பாடத்திட்டங்களை வகுத்துள்ளன. "இப்போது என்னுடைய சூழ்நிலையில் என்னால் எதையும் செய்ய இயலாது" என்றும் "என்னிடம் திறமை ஏதும் இல்லை" என்றும் சமாதானம் சொல்கிறார்கள். உண்மையிலேயே ஏதாவது சாதிக்க விரும்பினால் அவர்கள் குறிக்கோளை அடையத் தேவையான தகுதிகளைப் பெற முடியும். எதையும் சாதிக்காததற்கு ஒரே காரணம், தேவையான முயற்சி செய்யவில்லை. தங்கள் இலக்குகளை அடைய அவர்களிடம் மன உறுதி இல்லை.

வியப்பைத் தருவது என்னவென்றால், ஊனங்களுடன் இருக்கும் மனிதர்கள் செய்யும் முயற்சிகள், தங்கள் குறிக்கோள்களை எட்டுவதற்கு கையாண்ட வழிகள் மூலமாக எத்தகைய இடர்ப்பாடுகளை வென்றிருக்கிறார்கள் என்பது தெரியவரும் ஊனமுற்றவர்கள் தங்களுக்கு எதிரான சூழ்நிலைகளிலும் முன்னேறியிருக்கிறார்கள் என்பதைக் கேட்கும்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? திறமையும் சக்தியும் நிரம்பி வழியும் நீங்கள் மேலும் கடுமையாக உழைக்க வேண்டும். இப்போது தருவதைவிட அதிகமாக மற்றவர்களுக்கு அன்பைத் தரவேண்டும். சந்தேகமில்லாமல் இதைச் செய்ய முடியும். எவ்வளவு வசதியான சூழ்நிலைகள் இருக்கிறதோ அந்த அளவுக்கு மற்றவர்களுக்கு சேவை செய்ய உங்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இது எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

7. வாகை சூடுவதற்கான வழிகளை வகுத்துக் கொள்ளுங்கள்

எனக்கு எவ்வளவு வசதிகள் நிறைந்த சூழ்நிலைகள் வாய்த்துள்ளதோ அந்த அளவுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்று நான் எப்போதும் நினைத்துக் கொள்வேன். நான் கடுமையாக வேலை செய்ய நினைத்தாலும் எவ்வளவு சாதிக்க முடியும் என்பதற்கு, ஒரு மனித உடலுக்கு ஓர் எல்லை

இருக்கிறது.

இந்த வரையறைகளை மனத்தில் கொண்டு வாகைசூடும் சிந்தனையைச் செயல்படுத்த முடியும். என்னுடைய உடல் சக்தியின் வரம்புகள் மேலும் அதிகமாக சாதிப்பதைத் தடுக்குமென்றால், நான் என்னுடைய புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்துவேன். அதனால்தான் அதிகமாக சாதிப்பதற்கு நான் புதிய வழிமுறைகளை எப்பொழுதும் வளர்த்துக்கொண்டே இருப்பேன். இதை நீங்கள் கூட கையாண்டு பார்க்கலாம். படைப்பாற்றல் அதாவது கண்டுபிடித்தல், மற்றும் புதிதாகக் கண்டுபிடித்தல் என்பவை வாகைசூடும் சிந்தனைக்கு முக்கிய அங்கங்களாகும். எங்கள் வாகைசூடும் சிந்தனை மன்றம் பல கண்டுபிடிப்புகள், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்டது. ஒரு முட்டுக்கட்டை அல்லது தடை ஏற்படும்போது நாங்கள் முரட்டுத்தனமாக முன்னேறுவதில்லை. எச்சரிக்கையாக அடுத்த கட்டத்தைப் பற்றி சிந்திப்போம்.

உடல் சக்தியின் எல்லைகளுக்கு உட்பட்டு என்றால் என்ன? வாகைசூடும் சிந்தனையைப் பயன்படுத்திப் பார்க்கும்போது, உங்கள் எல்லா செய்கைகளுக்கும் ஓர் எல்லை உண்டு. எனவே உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்துவது முக்கியம். உங்கள் வேலைகளில் வரையறைகள் ஏற்படும்போது உங்கள் வேலையில் ஒரு பகுதியை நீங்களே செய்ய வேண்டுமா என்று சிந்தியுங்கள். வேறு யாராவது உங்களுக்காக ஒரு பகுதி வேலையைச் செய்ய முடியுமா? இது ஒரு வழி. இன்னொரு வழி, உங்களுக்காக சில வேலைகளைச் செய்வதற்கு மற்றவர்களுக்கு பயிற்சி தரலாம். உங்களால் செய்ய முடியாத சில பகுதி வேலைகளை மற்றவர்கள் செய்வது வழக்கம். அவ்வாறு செய்யும்போது ஒட்டுமொத்த வளர்ச்சி ஏற்படும்.

பேனசானிக் நிறுவனத்தை உருவாக்கிய புகழ்பெற்ற ஜப்பானிய தொழில் மேதை கோனசுகே மட்சூஷிட்டா (1894-1989) இவ்வாறுதான் வேலை செய்தார். எல்லா வேலைகளையும் அவரால் செய்ய முடியாது. ஏனென்றால் அவர் உடல்நலம் நன்றாக இல்லை. வேறு வழி இல்லாமல் தன்னுடைய வேலையின் ஒரு பகுதியை மற்றவர்களுக்குத் தந்தார். அதன் விளைவு, மண்டல அமைப்பு தன்னாட்சி கொண்ட மேலாண்மை அமைப்பு 1980ஆம் ஆண்டு வாக்கில் உருவானது, உலகில் முதல் முறையாகும். ஒரு நிறுவனம் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு,

ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனியாக நிர்வாக அமைப்பு தரப்பட்டது. வியாபார நிர்வாக அமைப்பைப்பற்றி படிப்பவர்கள் இதனை விரும்பிப் படிக்கிறார்கள். ஒவ்வொரு மண்டலத்தில் உள்ள மேலாளருக்கும் பொறுப்பைப் பிரித்துத் தரப்படுவதால் பெரிய நிறுவனங்கள்கூட சிறப்பாக செயல்படுகின்றன.

எல்லாமே மேலே இருந்து கீழே செயல்புரியும் மேலாண்மை அமைப்பில், மேலே இருக்கும் அலுவலர் மட்டுமே எல்லா விதமான முடிவுகளையும் எடுப்பார். அதாவது எல்லா செயல்பாடுகளும் ஒரே ஒரு மனிதரின் திறமைக்கு உட்பட்டது. ஒரு காலகட்டத்தில் அந்த மனிதர், தன்னுடைய திறமையின் எல்லையை எட்டிவிட்டால், நிறுவனம் மேலும் பெருகித் தழைக்க முடியாது. வளர்ச்சி அத்துடன் நின்றுவிடும்.

ஆனால் மண்டல அமைப்பில் ஒவ்வொரு பிரிவின் தலைவரும் ஒரு சிறிய குழுமத்தின் தலைவரைப் போன்று செயல்படுவார். முழு நிறுவனமும் பல குழுமங்களின் கூட்டமைப்பு போன்று இருக்கும். தன்னால் தனியாகச் செய்ய முடியாததை மட்சூஷிட்டா இதன் மூலம் பல வியத்தகு விளைவுகளைச் செய்து காட்டினார்.

தன்னுடைய உடல் நலக்குறைவின் காரணமாக மட்சூஷிட்டா இந்த ஏற்பாட்டைச் செய்தார். ஆனால் இதை இன்று உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இது வாகை சூடும் சிந்தனைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். தனியே அவரால் எல்லாவற்றையும் செய்ய இயலவில்லை. எனவே அதையே ஓர் அனுகூலமாகவும் பயன்படுத்திக் கொண்டார். அதன் விளைவாக மற்றவர்களுக்கு மேலும் நன்றாக வேலை செய்வதற்கு ஒரு வாய்ப்பு கிட்டியது. இவ்வாறு மட்சூஷிட்டா ஒரு திறமையான தொழிலாளர் அணியை உருவாக்க முடிந்தது. எல்லா வேலைகளையும் ஒரு நிறுவனத்தின் தலைவரே செய்தால், அவருடைய ஊழியர்கள் தங்கள் திறமையை வளர்க்க முடியாது. மட்சூஷிட்டா தன்னுடைய தொழிலாளர்கள் தங்களுக்குத் தந்த பொறுப்புகளை நிறைவேற்றுவார்கள் என்று நம்பி வேலைகளைத் தந்தார். ஒவ்வொருவருக்கும் திறமை இருக்கிறது என்றும் அவர்களுக்கு முழு உரிமை தந்தால் அற்புதமாக ஏதேனும் அவர்களால் செய்து காட்ட முடியும் என்றும் நினைத்தார். இதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட ஒரு மாபெரும் நிறுவனம் உருவானது.

இதேபோல் கிளை அலுவலகங்களைத் திறந்தபோது நிகழ்ந்தது.

மட்சூஷிட்டா தலைமையகத்திற்கு 300 கிலோமீட்டர் தொலைவில் ஒரு கிளையை உருவாக்க முடிவு செய்தபோது அவரால் அதை நேரடியாக நிர்வகிக்க முடியவில்லை. 20 வயது இளைஞரை அழைத்துச் சொன்னார். “என்னால் அவ்வளவு தூரம் ரயில் பிடித்துவரமுடியாது. எனவே நான் இல்லாமலேயே நீ அதை சமாளிக்க வேண்டும்” என்றார். பிறகு அந்தப் புதிய அலுவலகத்தை நடத்த அந்த இளைஞரை அனுப்பி வைத்தார்.

ஊழியர்கள் மீது நம்பிக்கை வைத்து தாங்களாகவே ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கச் சொன்னால் அவர்கள் தலை சிறந்த ஊழியர்களாகத் திகழ்வார்கள் என்று மட்சூஷிட்டா தன்னுடைய அனுபவத்தில் தெரிந்து வைத்திருந்தார். இது உங்களுக்கு ஒரு முன்மாதிரி. இதைப் பின்பற்றுங்கள். ஆனால் உங்களுடைய குறைபாடுகள் எந்த விதத்திலும் நிறுவனத்தின் எந்த செயல்களையும் கட்டிப் போடக்கூடாது. குறைபாடுகள் என்பது புதிய சிந்தனைகளின் வறட்சியே ஆகும். மக்களிடம் வேலை செய்யும் திறமை குறைவாக உள்ளது என்பது சரியல்ல. ஆக்கபூர்வமான சிந்தனைகளும் படைப்புத் திறனும் குறைவாக உள்ளது என்பதே உண்மை.

இதைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். இப்போது நீங்கள் உச்சகட்டத்தில் இருக்கலாம். ஆனால் இந்த நிலை அவ்வாறே தொடர்ந்து நீடிக்காது. அவ்வாறு நீடிக்காவிட்டால், பழைய வழியிலேயே உழன்று கொண்டிருக்காமல், இத்தகைய பிரச்சினைகளை சமாளிக்க வேறு வழிகள் உள்ளதா என்று நிதானித்து யோசிக்க வேண்டும். உங்கள்ோ வேலைகளை விரிவாக்கும்போது, எல்லாவற்றையும் நீங்களே செய்ய முடியாது. நிச்சய மாக மற்றவர்கள் உதவி உங்களுக்குத் தேவை என்பது நடப்பில் இருக்கும் ஒன்று.

8. வரையறைகளைத் தாண்டிச் செல்லுங்கள்

உடன் வேலை செய்வதற்கு, உங்களுக்கு ஒரு நல்ல மனிதர் கிடைத்தால்தான் நல்லதொரு சிந்தனை செழித்து வளரும். உங்கள் வேலை ஒரு வண்டியில் மீன்களை வைத்து விற்பனை செய்வது என்றால் இந்த வேலையில் திருப்தி அடைந்து வாழ்நாள் முழுவதையும் மீன் விற்பனை செய்தே கழித்து விடலாம்.

ஆனால் உங்கள் வியாபாரத்தை சற்று ஆராய்ந்து பார்த்தால், இன்னும் பல வாடிக்கையாளர்களை உங்களிடம் வரச்செய்து

மீன்களை வாங்கச் செய்யலாம். மாலை 4 மணி முதல் 5 மணி வரை ஒரு குறிப்பிட்ட குடியிருப்பு பகுதிக்குச் சென்றால், பல வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள் என்று தெரிந்து கொண்டு நகரின் மற்ற பகுதியில் விற்பனை செய்வதைவிட இங்கு ஒரு ஒரு மணி நேரத்தில் ஐந்து மடங்கு விற்க முடியும் என்று தெரியும். ஒருமுறை ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட நேரத்தில் விற்பனை சாத்தியம் எவ்வளவு என்று தெரிந்து கொண்டால், அந்த நேரத்தில் அங்கு சென்று வியாபாரம் செய்வது இயற்கையே.

பலர் வீட்டுக்குத் திரும்பும்போது மளிகை சாமான்கள் வாங்க மறந்திருக்கலாம். அல்லது வேறு ஏதாவது ஒரு நேரத்தில் தேவை அதிகமாக இருக்கலாம் என்று நீங்கள் யோசித்துப் பார்க்கலாம். ஒரு இடத்தில் மீன் தேவை அதிகமாக இருக்கும் என்று கண்டுபிடித்தால், அந்த இடத்தில் ஒரு கடையைத் திறந்து மாலை நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மக்கள் மீன் வாங்க ஏற்பாடு செய்யலாம். குறிக்கோள் ஏதுமின்றி அங்குமிங்கும் விற்பனை செய்வதற்கு பதிலாக, இவ்வாறு செய்தால் விற்பனையை அதிகரிக்க முடியும்.

சில நாட்களுக்குப் பிறகு, உதவிக்கு ஓர் ஆளை வைத்துக்கொள்ளலாம். நீங்கள் இருவர் இருந்தால் ஒரே நேரத்தில் அதிகமாக விற்பனை செய்யலாம். மக்கள் அதிகமாகக் கூடும் குடியிருப்பு பகுதிக்குச் சென்றால் உங்களால் சமாளிக்க முடியாது. வாடிக்கையாளர்களைக் கவனிக்க வேண்டும். பணத்தை வசூலித்து சில்லறை தரவேண்டும். அவர்களை அதிக நேரம் காக்க வைத்தால், உங்கள் கடைக்கு வருவதைத் தவிர்த்து வேறு கடையில் மீன் வாங்குவார்கள் அல்லது சிறப்பு அங்காடிக்குச் சென்றுவிடுவார்கள். மாறாக உங்களுக்கு ஓர் உதவியாளர் இருந்தால், நீங்கள் வாடிக்கையாளர்களைக் கவனிக்க, அவர் பட்டியல் தயாரித்து பணத்தை வாங்கிக் கொள்ளலாம். இவ்வாறு வேலையைப் பங்கீடு செய்து கொள்வதன் மூலம் உங்கள் திறமையை இரட்டிப்பாக்கலாம்.

விற்பனை மேலும் அதிகரிக்கும்போது இன்னும் பலரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். ஒரு சரக்கு வண்டி மட்டுமே வைத்திருந்த காலம் மாறி இரண்டு, மூன்று என்று வாங்கலாம். காலப்போக்கில் ஒவ்வொரு சரக்கு வண்டிக்கும் நிறைய ஆட்களை நியமித்து வியாபாரத்தைப் பெருக்கி ஐந்து

சரக்கு வண்டிகள் வரை வாங்கலாம்.

தனியாக வியாபாரம் செய்யும்போது மீன் அங்காடியில் ஒவ்வொரு நாளும் மிகக் குறைவாகவே மீன் வாங்க முடியும். வியாபாரம் பெருகும்போது மொத்தமாகவும் குறைந்த விலையிலும் தரமான மீன்கள் வாங்கலாம். தனியாக இருக்கும்போது ஒரு நாளைக்கு 20 முதல் 30 விரால் மீன்கள் வாங்கி இருக்கலாம். வியாபாரம் விரிவடையும்போது 100, 200, ஏன் 500 வரையில் விற்பனை செய்பவரிடம் பேரம் பேசி, குறைந்த விலைக்கு வாங்க முடியும். மிகக் குறைந்த விலையில் உங்களால் வாங்க முடியும் என்பதால், குறைந்த விலையில் விற்பனை செய்து வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தலாம்.

ஒரு நிறுவனம் வளரும்போது, மேன்மேலும் தொழிலாளர்களுக்கு ஆதரவு தரமுடியும். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தி சேவையை மேம்படுத்த முடியும். எவ்வளவு பெரிதாக வளர்கிறதோ, எவ்வளவு மலிவான விலையில் வாடிக்கையாளர்கள் வாங்குகிறார்களோ அந்த அளவுக்கு பொருட்களின் தரமும் உயரும். இவ்வாறு அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள். இந்த ஆக்கபூர்வமான சுழற்சி ஏற்படும்போது அனைத்தும் நன்றாகவே வளரும்.

மிகச் சிறிய அளவில் தோன்றிய நிறுவனங்கள், 20 அல்லது 30 ஆண்டுகளில் அபார வளர்ச்சி அடைந்துள்ளன. ஓரிரு தொழிலாளிகளுடன் ஆரம்பித்த நிறுவனங்கள் வளர்ந்து ஆயிரக்கணக்கானவர்களை வேலைக்கு அமர்த்தி இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் வியாபாரத்தில் ஆக்கபூர்வமான சுழற்சியால் பயனடைந்துள்ளன என்பதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

மறைந்துள்ள வாய்ப்புகள் எங்கு இருக்கிறது என்று கண்டுபிடிப்பதிலேயே அனைத்தும் அடங்கி இருக்கிறது. வெவ்வேறு வாய்ப்புகளைப் பற்றி கற்பனை செய்து பார்க்காதவரையில் தாமே 30 அல்லது 40 ஆண்டுகள் மீன் விற்க நேரிடும். எந்த இடத்தில், எப்போது கடை ஆரம்பித்தால் நன்றாக இருக்கும், வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த என்ன செய்ய வேண்டும், எப்படி மேன்மேலும் அவர்களுக்கு சேவை புரியலாம் என்று ஆழ்ந்து சிந்திப்பவர்கள் ஆக்க பூர்வமான சுழற்சி என்பதன் மூலம் பலனடையலாம். இந்த வியாபாரங்களுக்கு எல்லாம் நன்றாகவே நடக்கும்.

இதனால்தான் ஒரேவிதமான வியாபாரத்தில் ஒரு நிறுவனம் நன்றாகவும் மற்றது மோசமாகவும் நடக்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் பாதை பிரிகிறது. விளைவு என்பது, உங்களால் சரியான வாய்ப்பைக் கண்டுபிடிக்க முடிகிறதா என்பதிலும், கெட்டிக்கார வழியை உருவாக்குவதையும் பொறுத்தது. வியாபாரத்தைப் பெருக்க முடியாதவர்களில் 80 முதல் 90 சதவிகிதம் பேர்கள் அவர்கள் குறைபாடுகள் காரணமாக வியாபார வேலைகளைக் குறுக்கிக் கொண்டதே காரணம். பல தலைமுறைகளாக பல வியாபார நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் சில பழைய நிலையில் அப்படியே இருந்தால் போதும் என்று விட்டுவிட்டனர். இத்தகைய போக்கு இருந்தால் வியாபாரம் பெருகாது.

காஃபி கடைகள், ரொட்டிக் கடைகள், சிற்றுண்டி சாலை போன்ற கடைகளில் ஏறக்குறைய ஒரே தரமான பொருட்களையே விற்கின்றனர். ஒரு சில கடைகள் நாடெங்கும் கிளைகள் பரப்பி விரிந்து வருகின்றன. ஆனால் ஒரு சில, சிறிய உள்ளூர்க் கடைகளாகவே இருக்கின்றன. இந்த வேறுபாடுகளுக்கு தெளிவான காரணங்கள் இருக்கின்றன. கிளைகளை அதிகமாக்கிவரும் கடைகள், ஆக்கபூர்வமான சிந்தனையைப் பயன்படுத்தி, ஒரு தனிமனிதன் செய்யமுடியாததைச் சாதித்திருக்கின்றன.

9. வெற்றியடைய இரண்டு ரகசியங்கள்

முன்பகுதியில் நான் சொல்ல முயன்றது இதுதான். தற்போது உங்களால் முன்னேற முடியாது என்று தெரியும். ஒருவேளை நீங்கள் தனியாகப் போராடிக் கொண்டு இருக்கிறீர்களா? ஒரு தனி மனிதன், தானே தனியாக சாதிப்பதற்கு எல்லை இருக்கிறது. நீங்கள் வெற்றி பெற விரும்பினால் உங்கள் பக்கத்தில் மற்றவர்களைத் துணைக்காகவும் உதவி புரிவதற்காகவும் வைத்துக் கொள்ள வேண்டும். விருப்பத்துடன் வேலை செய்பவர்கள் எவ்வளவு தேவையோ அவ்வளவு வைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக வெற்றி அடைவதற்கு, இரண்டு ரகசியங்கள் உள்ளன.

1) தேவையைக் கண்டுபிடியுங்கள்

முதல் ரகசியம் மக்களுக்கு என்ன தேவை என்பதைத் தேடிக்

கொண்டே இருக்க வேண்டும். எப்போதும் வானொலியின் அலைகள் தேடும் கருவி போல் தயாரான நிலையில் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதை ஆராய்ந்து கொண்டே இருக்க வேண்டும். எங்கெல்லாம் தேவை இருக்கின்றதோ அங்கு வியாபாரம் தொடங்குகின்றது. விரைவாக வளர்ந்த நிறுவனங்கள் அனைத்தும் தேவை எங்கே உள்ளது என்பதைக் கண்டறிந்து அதை நிறைவு செய்வதற்காக ஆரம்பிக்கப் பட்டதாகும்.

எங்கு தேவை இருக்கிறதோ, அங்கு செய்ய வேண்டிய வேலை இருக்கும். நீங்கள் கடுமையாக வேலை செய்தும் லாபம் கிடைக்கவில்லை என்றால், ஒருவேளை நீங்கள் வழங்கும் பொருட்களுக்குத் தேவை இல்லாமல் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு கல்வி நிலையம் நடத்துகிறீர்கள். ஆனால் அங்கு போதுமான மாணவர்கள் சேராத காரணத்தால் செலவுகளை ஈடுகட்ட முடியவில்லை. அப்படி என்றால், இத்தகைய கல்விக்குத் தேவை இல்லை. நீங்கள் மக்களுக்குத் தேவையானதைத் தரவில்லை என்று பொருள். எல்லாவிதமான வியாபாரங்களுக்கும் இது பொருந்தும். உங்களால் லாபம் ஈட்டமுடியா விட்டால் அநேகமாக மக்களுடைய தேவைகளுக்கு நீங்கள் தருவது வேண்டாமல் இருக்கலாம்.

பாரம்பரியமான ஜப்பானிய கேக் - இமாகாவா - யாகி என்று பெயர். அதன் உள்ளே இனிப்பு பீன்ஸ் கலவை அடைக்கப்பட்டிருக்கும். அண்மையில் ஒரு கேக் விற்கும் கடை, கேக் உள்ளே சாக்லெட் பாலும் முட்டையும் கலந்தவை போன்று புதிது புதிதாகக் கலவைகளை அடைத்து விற்க ஆரம்பித்தது. அதன் விளைவாக, அக்கடையின் வியாபாரம் பெருகி நல்ல லாபத்தை ஈட்டித் தந்தது. முதலில் விற்ற இனிப்பு பீன்ஸ் அடைத்த ஜப்பானிய கேக் வயதானவர்களையும் குழந்தைகளையும் மட்டுமே கவர்ந்தது. ஆனால் கடையின் முதலாளி பால், முட்டை, சாக்லெட் போன்றவற்றைக் கேக்கில் அடைத்து விற்க ஆரம்பித்ததும், எல்லா வயதினரும் வாங்க ஆரம்பித்தனர். அந்த கேக் கடை சிறப்பாக செயல்பட்டதற்குக் காரணம், பலவேறு மக்களின் தேவைகளைக் கண்டுபிடித்து அவற்றை பூர்த்தி செய்ததே ஆகும்.

ஒரு பொருளுக்குத் தேவை இருந்தால் அங்கு செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கும் என்பதை இந்த எடுத்துக்காட்டு விளக்குகிறது. நீங்கள் தனியாக வேலை செய்தாலும், ஒரு

குழுமத்திற்காக வேலை செய்தாலும் இது பொருந்தும். வீட்டில்கூட குடும்பத்திற்குத் தேவை என்ன என்பதை முயற்சி செய்து கண்டுபிடிக்கலாம். தேவை இருந்தால் செய்ய வேண்டிய பயனுள்ள வேலை இருக்கும். இப்படித்தான் நீங்கள் எப்போதும் தொடர்ந்து தேடிக் கொண்டே இருக்க வேண்டும்.

2) மேலும் வளர்ச்சி அடைவதைப்பற்றி சிந்தியுங்கள்

தற்போதுள்ள தேவையை ஓர் உந்துபலகையாகப் பயன்படுத்தி மேலும் வளர்ச்சி அடைய முடியுமா என்று சிந்தியுங்கள். எப்போதும் வியாபாரத்தைப் பெருக்கும் வழிகளைப்பற்றி சிந்தியுங்கள். இவ்வாறு செய்யும்போது இன்னும் பல வாய்ப்புகள் திறப்பதைக் கண்டு நீங்கள் வியந்து போவீர்கள்.

பால், முட்டை, சாக்லெட் ஆகிய கலவைகளை அடைத்து புதிதாக ஒரு கேக்கைக் கண்டுபிடித்த கடையின் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். ஆரம்பத்தில் கிடைத்த வெற்றிக்குப் பிறகு, கேக் கடை புதிதாக வேறு எந்த ஓர் உற்பத்திப் பொருளையும் உண்டாக்கவில்லை. தான் கண்ட வெற்றியில் திருப்தி அடைந்தார். புதிய பொருட்களைப்பற்றி சிந்திப்பதை நிறுத்தி விட்டார். அதன் விளைவு மேலும் வியாபாரத்தைப் பெருக்குவதற்கு ஓர் உச்சவரம்பு ஏற்பட்டது. கடைக்காரர், முன்னால் கிடைத்த வெற்றி என்னும் கூண்டில் தங்களை அடைத்துக்கொண்டு, தங்களின் முழு வியாபாரத் திறமையை வெளிக்கொணர முயலவில்லை. ஒருமுறை வெற்றி கண்டால் அதை உந்துபலகையாக அமைத்து மேலும் பெரிய வெற்றியை அடைய வேண்டும். அப்போதுதான் அடுத்த கட்டத்திற்கு எப்போதும் முன்னேற முடியும்.

10. பொருளாதார பலம் தடைகளை வெல்ல சக்தி தரும்

உங்களுடைய கவலை எல்லாம் மனை இயல் சார்ந்தது என்றே நினைக்கலாம். ஆனால் பொருளாதார உறுதிப்பாடு இருந்தால் 70 முதல் 80 சதவிகிதம் வரை கவலைகளுக்குத் தீர்வு காணலாம். இப்போது சம்பாதிப்பதைவிட 10 மடங்கு வருமானத்தை அதிகரித்தால், உங்கள் கவலைகள் பறந்து போகும். இது எவ்வளவு உண்மை என்பதைக் கண்டு வியந்து போவீர்கள்.

ஒரு குடும்பத்தினர் எப்போது பார்த்தாலும் களைப்புடன் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஏன் என்று

பார்த்தால், விடை மிக எளிதாகத் தோன்றும். ஒரு காரணம், அன்றாடம் நீண்ட நேரம் பயணம் செய்ய வேண்டியதாக இருக்கும். போதிய பணம் இல்லாத காரணத்தால், ஊருக்கு வெளியே வெகு தூரத்தில் ஒரு வீட்டை வாங்கியதால் நீண்ட தூரம் பயணம் செய்ய நேர்ந்தது. அதனால் களைப்படைந்தார்கள் என்பது வியப்புக்குரிய செய்தி அல்ல. அந்தக் குடும்பத்திற்கு கொஞ்சம் பணம் இருந்தால், பல தீர்வுகள் தோன்றும். அவர்கள் ஒரு கார் வாங்கலாம். அல்லது எவருக்காவது பணம் கொடுத்து காரில் கொண்டு போகச் சொல்லலாம். இத்தகைய பிரச்சினையைத் தீர்க்க பணம் மட்டுமே தேவை. பொருளாதாரக் குறைவு காரணமாக எப்போதும் குறைபட்டே மனம் வெதும்பிப் போவார்கள்.

மேலும், ஒரு குழந்தை அல்லது பெற்றோருக்கு உடல் நலக்குறைவு காரணமாக கடினமான நிலை ஏற்படலாம். வேறு ஒருவரை வேலைக்கு வைத்துக் கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். பெற்றோர்களுக்கு இன்னொரு கவலை என்னவென்றால் தங்கள் குழந்தை, நன்றாகப் படிப்பதில்லை அல்லது தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வி தரப்படுவதில்லை என்பது. அவர்களிடம் நிறைய பணம் இருந்தால் தலைசிறந்த பள்ளிக்கு அனுப்பலாம். அவ்வாறு செய்யாததால், குழந்தைகள் தங்கள் கல்வித் திறமையை அடைய முடியாமல் இருக்கலாம். பெற்றோர்களிடம் நிறைய பணம் இருந்தால், தங்கள் பிள்ளைகளை சிறந்த பள்ளிகளுக்கு அனுப்ப முடியும்.

இப்படிப் பார்த்தால் பல குடும்பப் பிரச்சினைகளுக்கு பொருளாதாரம் ஒரு காரணம் ஆகும். அண்மைக் காலங்களில் இது மேலும் உண்மை என்று ஆகிவிட்டது. கவலைப்படுவதற்கு பதிலாக உங்கள் இக்கட்டான நிலைக்கு பல்வேறு மாற்று வழிகளையும் தீர்வுகளையும் தேட வேண்டும். உங்கள் வேலையில் தேக்க நிலை ஏற்பட்டால் நாட்டின் பொருளாதாரம் சீராகும்போது மட்டுமே உங்கள் ஊதியம் உயரும் என்று எதிர்பார்க்கலாம். இருப்பதை வைத்துக்கொண்டு திருப்தி அடைய வேண்டும் அல்லது உங்கள் சூழ்நிலையை முயன்று சீர்படுத்த வேண்டும்.

ஒருக்கால் உங்களுக்குத் திருமணம் ஆகியிருந்து, உங்கள் ஊதியம் உயர வாய்ப்பில்லை என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் அல்லது உங்கள் துணைவர் ஏதாவது வேலை செய்து

ஓரளவு வருமானத்தைக் கூட்ட முடியும். நிலைமையைச் சமாளிக்க, உங்களிடம் மறைந்திருக்கும் ஏதாவது திறமையைப் பயன்படுத்தலாம். சிலர், தங்கள் ஓய்வு நேரத்தில் நூல்களை எழுதினார்கள். அவர்கள் எழுதியது விற்பனையாகி நிறைய பொருளைச் சேர்த்தது கண்டு வியந்து போனார்கள். சிலர் தம்மிடம் திறமைகள் இருப்பதே தெரியாமல் இருந்தனர். தங்களிடம் உள்ள திறமைகளைப் பயன்படுத்தி அதிக ஊதியத்தைப் பெற முடிந்தது. எதனால் வாழ்க்கையில் செழிப்பு வரும் என்று எவருக்கும் தெரியாது

எப்போதும் நீங்கள் உங்களைக் கேட்க வேண்டிய கேள்வி, ஒரு புதிய வழியைத் தோற்றுவிப்பதற்கு உங்களால் முடியுமா என்பதே. உங்கள் சோதனைகளைத் தாண்ட முடியாது என்று நினைக்காமல், முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமா, கெட்டிக்காரத்தனமான வழிகள் தெரியுமா என்று சிந்தியுங்கள். கவலை அலைகள் உங்களை இழுத்துக்கொண்டு போகாமலும், இருக்கும் அவல நிலையை நினைத்து குறைகூறிக் கொண்டும் இருக்காதீர்கள். மாறாக துன்ப நிலையை ஏற்றுக்கொண்டு, மேலும் முன்னேறுவதற்கு அதையே உந்துபலகையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

11. வாகை சூடும் சுயத்தைக் கண்டறியுங்கள்

உங்கள் திறமைகளுக்கு நீங்களே எல்லைக்கோடு வகுத்துக் கொள்கிறீர்களா? கடந்த காலம் உங்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறீர்களா? உங்களைப்பற்றி நிலையான எண்ணங்கள் அல்லது அனுமானங்களை நீங்களே அமைத்துக் கொண்டீர்களா? இது உண்மை என்றால், இத்தகைய குறுகிய எண்ணங்களுக்கு ஏற்பவே உங்கள் முழு வாழ்க்கையையும் வாழ நேரிடும்.

தங்கள்மீது வரம்பை விதித்துக் கொள்பவர்கள், இப்போது இருப்பதைவிட அதிகமாக வளரமுடியாது. இப்போது இருக்கும் நிலையைவிட மேலும் நன்றாக மேம்பட உங்களிடம் திறமை இருக்கிறது என்று நம்புவது மிக முக்கியம். நான் திரும்பத் திரும்பச் சொன்னதுபோல, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனஉறுதி மிகவும் அவசியம். “நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதுவாகவே ஆகிறீர்கள்” என்பது நிலையான "உண்மை. இப்போது முதல், மனவள சக்தியை மேன்மேலும் பயன்படுத்த வேண்டியது முக்கியம்.

மனவள சக்தியின் ஒரு பரிமாணத்தைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். பொருளாதார உறுதிநிலை குறித்து நான் பேசி இருக்கிறேன். பணம் இல்லாத காரணத்தால் ஒரு பிரச்சினை எழுகிறது என்றால், அதை முறியடிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பலரை வாட்டும் இன்னொரு பிரச்சினை கல்வி கற்பதில் சாதிக்கவில்லை அல்லது கல்வி கற்றது குறைவாகவே உள்ளது என்னும் தாழ்வு மனப்பான்மை ஆகும்.

ஒரு வேளை இப்போதுகூட இத்தகைய எண்ணங்கள் உங்களை உறுத்தலாம். பல ஆண்டுகளுக்கு முன்னால் நல்ல பள்ளிக்கு அல்லது கல்லூரிக்குப் போக முடியவில்லையே என்பது மனதை சங்கடப்படுத்தலாம். நீங்கள் ஒருக்கால் அத்தகைய நினைவின் நிழலிலேயே வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். இன்னும் பலர் முப்பது, நாற்பது ஆண்டுக் காலமாக தங்களின் சாதாரண கல்வி பின்னணியை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் இருபது அல்லது முப்பது ஆண்டுக் காலத்திற்குப் பிறகும் இத்தகைய தாழ்வு மனப் பான்மை இருக்கிறது என்றால், மற்றவர் உங்கள் கல்வி பின்னணியைப் பற்றி தாழ்வாக நினைப்பது இயற்கையே. ஏனென்றால் நீங்களே அவ்வாறுதான் நினைக்கின்றிரீர்கள்.

உலகத்தில் பலர் பள்ளிப்படிப்பு படித்த பிறகு, மேலே முறையான கல்வி ஏதும் படிக்காமலேயே தங்கள் வாழ்க்கையை வெற்றிகரமாக்கி இருக்கிறார்கள். அவர்கள் கீழ்க்கண்டவாறு தங்களிடம் ஏதும் சொல்லிக் கொள்ளவில்லை. “நான் உயர்நிலைப் பள்ளியில் படிக்க எனக்கு திறமை இல்லை. எனவே என்னால் தாழ்ந்த வேலைகளை மட்டுமே செய்யமுடியும்.’’ ஒரு ஜப்பானிய பெரிய நிறுவனத்தில் ஒருவர் உயர் நிலைப் பள்ளியில் படிக்கவில்லை. இருப்பினும் இறுதியில் அவர் அந்த நிறுவனத்தில் எல்லா நிதிக் கணக்குகளுக்கும் பொறுப்பான துணைத் தலைவர் பதவிக்கு உயர்ந்தார். முறையான கல்வி கற்காவிட்டாலும், இந்த அளவுக்கு உயர்ந்தார். தன்னுடைய குறைந்த அறிவு காரணமாக மற்றவர்களைவிட இரண்டு அல்லது மூன்று மடங்காக உழைத்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

கல்லூரிப் படிப்பு படிக்கவில்லை என்ற காரணத்திற்காக தாழ்வு மனப்பான்மை உடையவர்கள் பலர் இருக்கிறார்கள். இன்று கூட அறிவுக் கூர்மை இல்லையே என்று ஏங்குபவர் பலர் இருக்கிறார்கள். இருந்தாலும் நீங்கள் இன்று தோற்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு உங்களுக்கு நடந்தது ஒரு சாக்கு

என்றால், யாரும் உங்களை நியாயமாக நடத்தவில்லை என்று குறைகூற முடியாது. அதற்குப் பிறகு, உங்களால் என்ன செய்ய முடிந்தது, எதைச் சாதித்திருக்கிறீர்கள் என்பதே முக்கியம்.

பலர் சராசரியாக பல்கலைக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் படிக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் நான்கு ஆண்டுகளில் கற்றுக் கொள்வது மிகக் குறைவே. ஒருவேளை உங்களுக்கு கற்பது கடினமாக இருப்பின், வேறொருவர் நான்கு ஆண்டுகளில் கற்றுக்கொண்டதை நீங்கள் பத்து ஆண்டுகளில் கற்று தேர்ச்சி திறம் பெறலாம். பத்து ஆண்டுகளில் கற்க முடியாததை இருபது ஆண்டுகளில் முயற்சிக்கலாம். உங்களுக்கு கற்பது எவ்வளவுதான் கடினமானதாக இருந்தாலும், நீங்கள் தொடர்ந்து இருபது ஆண்டுகள் முயற்சி செய்தால், எந்தப் பாடத்தையும் கற்று தேர்ச்சி திறம் பெறலாம். எது முக்கியம் என்றால் படிப்பைப் படித்து முடித்துவிட்டு எப்படி வாழ்கிறீர்கள், உங்கள்மீது நம்பிக்கை பிறக்கும் அளவுக்கு பலன்கள் கிடைத்ததா என்று பார்க்க வேண்டும். பெரும்பாலான மக்கள், படிப்பு குறைவாக இருக்கிறது என்பதை ஒரு சாக்காகக் கூறுகிறார்கள். இருந்தாலும் அவர்கள் பலவீனம், குறைவான படிப்பு அல்ல. அவர்களுடைய சிந்தனை கடந்த காலத்திலேயே சிக்கிக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

உங்கள் படிப்பு போதாது என்று உணர்ந்தால், அதை ஈடுசெய்ய முயற்சி செய்திருக்கவேண்டும். அதற்காக நேரத்தைச் செலவிட வேண்டும். மற்றவர்களைவிட மூன்று மடங்கு நேரத்தைச் செலவிட்டால் உங்கள் குறிக்கோளை எட்ட முடியும். ஒருவர் ஒன்றை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் சாதித்திருக்கிறார் என்றால், அதை பத்து ஆண்டுகளில் உங்களால் சாதிக்க முடியாதா என்று சிந்திக்க வேண்டும். இதை அடைவதற்குத் தடையாக இருப்பது உங்கள் முயற்சி குறைவும் நம்பிக்கையின்மையும் ஆகும்

எல்லோருக்கும் ஒருவிதமான தாழ்வு மனப்பான்மை இருக்கும். உங்கள் குறைபாடுகளையே நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தால், நீங்களும் தாழ்வு மனப்பான்மையில் உழன்று கொண்டிருப்பதாக மற்றவர்கள் நினைப்பார்கள். போதுமான முயற்சி செய்து உங்கள் தாழ்வு மனப்பான்மை உணர்வுகளை உடைத்தெறிந்தால் மட்டுமே, அதனை அறவே ஒழிக்க முடியும். இனிமேல் இத்தகைய உணர்வுகளை ஒரு சாக்காகப்

பயன்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

முறையாகக் கல்வி கற்காதவர்களிடம் பரந்த நோக்கும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் குணமும் இருக்காது. ஏன் என்று நீங்கள் சிந்திக்கலாம். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் ஒரு குறிப்பிட்ட சிறிய வேலையைப் பார்க்கிறார்கள் அல்லது அது ஒன்றைப் பற்றிய அனுபவத்தையே பெறுகிறார்கள். பெரும்பாலானவர்கள், அவர்களுக்குத் தெரிந்த ஒரு குறுகிய வேலையைப் பற்றியே நினைக்கிறார்கள். பொதுக்கல்வியைப் பெறாத காரணத்தால், விரிந்த கோணத்தில் பார்க்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். எப்படி அடிமரம் இல்லாமல் மரத்தின் கிளைகள் வளரமுடியாதோ, அதேபோல் தரமான கல்வி பயில முடியாததால், பரந்து விரிந்த பார்வை அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதுவே அவர்கள் பலவீனம் ஆகும்.

உங்களுடைய பலவீனம் அறிவுக்கூர்மை பற்றியது என்றால், உங்கள் திறமைகள் குறைவாக உள்ளன என்று நினைத்து குறைபட்டுக் கொள்ளாதீர்கள். அதற்கு பதிலாக, கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். பரந்த நோக்கு மற்றும் பல்வேறு தலைப்புகளைப் பற்றிய அறிவைப் பெருக்குங்கள். இவற்றைச் செய்ய முடிந்தால், தாழ்வு மனப்பான்மையை நினைத்து அவதிப்படத் தேவையில்லை.

எங்கள் இன்ஸ்டிடியூட் ஃபார் ரிசர்ச் இன் ஹ்யூமன் ஹேப்பினஸ் அமைப்பில், சமத்துவ கருத்தரங்குகள் மூலம் உண்மை அறிதல் குறித்து கற்பதற்கு வாய்ப்புகள் தருகிறோம். பிறகு மூன்று மட்டங்களில் தேர்வுகள் நடத்துகிறோம். இவற்றின் முடிவுகள் ஒருவரின் கல்விப் பின்னணியை பிரதிபலிப்பதில்லை. பலர் பள்ளியில் நன்றாகப் படித்திருக்கலாம். ஆனால் காலப்போக்கில் மந்தமாகி இருக்கலாம். ஆனால் சிலர் முதலில் கெட்டிக்காராக இல்லாவிட்டாலும், பிற்காலத்தில் புத்தி நுட்பம் மிக்கவர்களாகவும் மாறி இருக்கிறார்கள். படிப்பிற்குப் பிறகு 10 அல்லது 20 ஆண்டுகளுக்குள் எப்படி மாறினார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. பள்ளிப் படிப்பு முடித்த பிறகு எப்படி அவர்கள் தங்களைத் தயார் செய்து கொண்டார்கள் என்பதை அவர்கள் சாதனைகளைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

உங்களுக்கு நீங்களே வேலி போட்டுக் கொள்ளாமல், நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதுவாகவே ஆவீர்கள் என்று உண்மையாகவே நம்புகிறேன். இதை உங்கள் வாழ்க்கையில் ஒருங்கிணைத்துக் கொண்டு தேவையான முயற்சிகள் மூலம்

எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும். அடி மேல் அடி எடுத்து வைத்து ஏணியில் படிப்படியாக ஏறுவது போல, மெல்ல முன்னேறுங்கள் இவ்வாறு தொடர்ந்து செய்தால் உங்களுக்கு ஒரு வழி திறக்கும். அங்கு எப்போதும் வெற்றி வாகை சூடும் உங்கள் சுயத்தை நீங்கள் காண முடியும்.

பகுதி
2

உங்கள் பார்வையைப் புரட்சிகரமாக மாற்றுதல்

2

உங்கள் பார்வையைப் புரட்சிகரமாக மாற்றுதல்

1. புதிய கருத்துக்களை உருவாக்குதலின் முக்கியத்துவம்

நாம் எப்படி சிந்திக்கிறோம் என்பதின் முக்கியத்துவத்தைப்பற்றி நான் இந்தப் பகுதியில் பேச விரும்புகிறேன். நீங்கள் மற்ற ஆன்மிக நூல்களைப் படித்திருக்கலாம். அவை பெரும்பாலும் நன்மை - தீமை என்னும் இருமை மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கும். நல்ல உள்ளம், தீய உள்ளம், நல்ல எண்ணங்கள், தீய எண்ணங்கள், நல்ல செயல்கள், தீய செயல்கள் போன்றவை ஆகும். இத்தகைய இருமையின் வலிமை குறித்து எல்லா மதங்களும் குறிப்பிடுகின்றன. மனிதர்களை நல்லவர்கள் கெட்டவர்கள் என்று பிரித்து, அவர்கள் இறந்தபிறகு சொர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ போவார்கள் என்பார்.

மக்கள், குறிப்பாக ஆன்மிகத்தில் நாட்டம் உள்ளவர்கள் எளிதில் நல்லது, கெட்டது இவற்றிற்கிடையில் உள்ள வேறுபாட்டை உணர்ந்து இருமை என்னும் கோட்பாட்டின்படி சிந்திக்கிறார்கள். அதன் விளைவு, எல்லாவற்றையும் கறுப்பு - வெள்ளை என்று பிரித்துப் பார்க்கின்றனர். சுற்றி இருப்பவர்களை இவ்வாறு பிரித்துப் பார்க்கும்வரையில் பாதுகாப்பாக இருப்பதாக நினைக்கமாட்டார்கள். மக்கள் மட்டுமின்றி, சூழ்நிலைகளையும் நல்லது கெட்டது என்றே நினைத்துப் பார்ப்பார்கள். வருந்தத்தக்கது என்னவென்றால், இவ்வாறு உலகத்தை நோக்கும்போது மறைசக்தி உடையவற்றைக்கூட புறக்கணிக்க நேரிடும். இது ஓர் இழப்புதான்.

வேற்று கிரகத்திலிருந்து சில வாசிகள் பூமிக்கு பறக்கும்

தட்டுகளில் வருவதாகக் கற்பனை செய்து கொள்வோம். ஒரு நாட்டில் மழைக்காலத்தில் வந்து இறங்குவதாக வைத்துக் கொள்வோம். விண்வெளிக் கப்பலிலிருந்து வெளியே வந்து இவ்வாறு நினைத்துப் பார்ப்பார்கள். “நாம் இவ்வளவு தூரம் இந்த கிரகத்திற்கு வந்திருக்கிறோம். மழையைத் தவிர எதையும் காணோம். இங்கு பார்ப்பதற்கு ஏதும் இல்லை. எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவில் இந்த இடத்தை விட்டு வெளியேறி விடுவோம்” என்று இந்த கிரகத்தைப் பார்த்து ஏமாற்றமடைந்து சிறிது கூட சிந்திக்காமல், வெளியேறிவிடுகிறார்கள். இந்த பூமியில் மறைந்துள்ள சக்தி என்ன என்பதையும், அதற்காக அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பன போன்ற சாத்தியக் கூறுகளுக்கு இடம் தராமலேயே சென்றுவிடுகிறார்கள்.

சில சமயங்களில் பூமியில் மழை பெய்கிறது என்பது உண்மை என்றாலும், பல நாட்கள் வெயில் காய்கிறது அழகாக இருக்கிறது. கேள்வி என்னவென்றால் வேற்று கிரகவாசிகளுக்கு இதைப் பற்றி தெரியுமா என்பதுதான். அருமையான வசந்த காலத்தைப் பார்த்திருந்தால், இந்த கிரகம் அவ்வளவு மோசமானது அல்ல என்றும், இது வாழ்வதற்கு நல்ல இடம்தான் என்று புரிந்து கொண்டிருப்பார்கள். ஒருநாள் கொட்டும் மழை பெய்யும்போது வந்ததால், இந்த கிரகம் நல்ல இடம் அல்ல என்று நினைத்திருப்பார்கள். அத்துடன் வேறு சாத்தியக் கூறுகளுக்கு இடமே இருக்காது.

ஏற்கனவே முடிவு செய்த கருத்துப்படி பூமியில் எதுவும் கிடையாது என்று நினைத்து அவர்கள் விண்வெளியில் பயணம் செய்து இறங்குவதற்கு வேறு இடத்தை நோக்கிப் போயிருப்பார்கள். இதற்கு அதிகம் முயற்சி தேவை. பூமியில் மேலும் ஒரு மாதம் தங்கியிருந்தால், மழைக்காலம் முடிந்திருக்கும். அதற்கும் காத்திராமல், தொடர்ந்து விண்வெளியில் பல ஆண்டுகள் பயணம் செய்ய வேண்டியிருக்கும். இத்தகைய மனோநிலை தேவையில்லாத கவலையைத் தரும்.

வேற்று கிரகவாசிகளை ஓர் எடுத்துக்காட்டாகச் சொன்னேன். ஆனால், நீங்களும் அவ்வாறே செய்கிறீர்கள். உங்களுக்குத் திருமணம் ஆகி இருந்தால், வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்திருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கலாம் என்று எப்போதாவது நினைத்ததுண்டா? உண்மையாக பதில்

சொல்லுங்கள். திருமண மானவர்களில் 50 சதவிகிதத்தினர் “என்னுடைய மனைவி வேறு ஒரு பெண்ணாக இருந்தால்” அல்லது “நான் வேறு ஒரு கணவரைத் தேர்ந்தெடுத்திருந்தால்” என்று நினைக்கிறார்கள். நான் 50 சதவிகிதம் என்று சொன்னாலும் 90 சதவிகிதத்திற்கு அதிகம் தம்பதிகள் இப்படி நினைத்து இருப்பார்கள்.

இவ்வாறு நினைக்கக்கூடாது என்று அவர்களுக்குத் தெரியும். இருப்பினும் அவர்கள் உள்மனதில், அவர்கள் துணையை மாற்றிக்கொள்ள முடியுமென்றால், அல்லது எத்தகைய பிணைப்பில் ஈடுபடப் போகிறோம் என்று உணர்ந்திருந்தால், அவர்கள் முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்க முடியும். இத்தகைய நினைவுகளுடன் பல பத்தாண்டுகள் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் இதனால் எந்தப் பயனும் இல்லை. அவர்களுடைய சிந்தனைகள் மழைக்காலத்தில் பூமிக்கு வந்த வேற்று கிரகவாசிகள் வந்தது போல இருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் எது முக்கியம் என்றால் உங்கள் நோக்கை மாற்றுங்கள். அதாவது புதிய சிந்தனை ஒன்றை ஏற்றுக்கொள்ளுங்கள். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வேறு விதமாகப் பார்க்க முடியுமா என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். தற்போது இருக்கும் சூழ்நிலையைச் செம்மையாக்குவதற்கு உங்களால் வழி காண முடியுமா என்று முயற்சி செய்யுங்கள். இவ்வாறு வழி காண்பதற்கு பயிற்சி செய்யுங்கள்.

2. மூன்றாவது வழி ஒன்றைக் கண்டுபிடியுங்கள்

“உங்கள் கண்ணோட்டத்தைப் புரட்சிகரமாக்குதல்" என்னும் கருத்து மிகக் கடினமாகத் தோன்றும். உண்மையில் வேலைகளை வேறு ஒரு விதமாகச் செய்தல் என்று பொருள் கொள்ளலாம். இத்தகைய திட்டம் பலதரப்பு மக்களுக்கும் பொருந்தும்.
நான் எப்படி இதைப் பயன்படுத்துகிறேன் என்று சொல்கிறேன். கடந்த சில ஆண்டுகளாக பெரிய கூட்டத்தினர் முன்பு பேசுவதற்கான வாய்ப்புகள் ஏராளமாகப் பெருகிவிட்டன. அதே சமயத்தில் நான் பல புத்தகங்கள் எழுதி வந்தேன். எழுத்தாளர்கள் தாங்கள் எழுதும் இடத்தைவிட்டு பேசுவதற்காக எழுந்துபோகும்போது எழுதுவதற்கு சிரமப் பட்டிருக்கிறார்கள்.

எழுதுவதற்குப் போதுமான நேரம் கிடைக்காது என்பது பொதுவாக எல்லா எழுத்தாளர்களுக்கும் பொருந்தும். இதற்காக அவர்கள் தனியாக மலைப்பகுதிக்கோ அல்லது மற்றவர்கள் காணாத இடத்திற்கோ போய் ஒளிந்து கொள்வார்கள். அப்போது மட்டுமே அவர்களால் வேலை செய்ய முடியும். சமுதாயக் கடமைகளைக் குறைத்துக்கொண்டால் ஒழிய அவர்களால் எழுத முடியாது.

இது மற்றவர்களைப் போலவே எனக்கும் பொருந்தும். சொற்பொழிவுகள் நிகழ்த்துவதா அல்லது உட்கார்ந்து எழுதுவதா என்ற இரண்டும் கெட்டான் நிலை எனக்கும் வந்தது. இந்த நிலையையே மாற்றி சிந்திக்கும் வழி இருந்தது. இரண்டு வேலைகளும் ஒன்றுக்கொன்று முரணானவையா அல்லது ஒன்றோடு ஒன்று இணக்கமானதா என்று என்னையே கேட்டுக்கொண்டேன். அப்போது இரண்டையும் சேர்த்து நிறைவேற்றுவதற்கு ஒரு வழி தெரிந்தது.

நான் எப்படி சமாளித்தேன் என்பதைச் சொன்னால் புரிந்து கொள்வீர்கள். நான் தொடர் சொற்பொழிவுகளைத் தொகுத்து அவ்வப்போது ஒரு புத்தகமாக வெளியிடுவதுண்டு. வாகை சூடும் சிந்தனை என்னும் இந்த நூல், நான் ஆற்றிய நான்கு சொற்பொழிவுகளை அடிப்படையாகக் கொண்டது. இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு ஒரு முறை, சராசரியாக ஒரு மணி இருபது நிமிடங்கள் பேசுவதுண்டு. அதன்பிறகு, இந்தச் சொற்பொழிவுகளைச் சேகரித்து, ஒரு புத்தக மாகத் தயாரிப்பேன். இந்த முறையைப் பயன்படுத்தி, எழுதுவதற்கென்று தனியாக ஓர் அறையில் அடைந்து கிடக்காமல், புத்தகங்களை வெளியிட முடிந்தது. இக்கட்டான நிலைமையைச் சமாளிக்க இது ஒரு வழி ஆகும்.

எல்லா எழுத்தாளர்களும் நூல்களை எழுத இந்த வழியைக் கையாள்கிறார்களா என்று நீங்கள் நினைத்தால் இல்லை என்றே சொல்வேன். காரணம் எழுதும் மொழியும் பேசும் மொழியும் ஒன்றல்ல. எனவே பேசுவதை அப்படியே குறிப்பெடுத்து காகிதத்தில் அச்சேற்றமுடியாது. எழுத்தாளர்கள் ஒருகுறிப்பிட்ட பாணியைப் பின்பற்றுவார்கள். சார்பு சொல், இணைக்கும் சொற்கள், முடிக்கும் வாக்கியங்கள் இவைகள் மீது குறியாக இருப்பார்கள். இவற்றில் மட்டுமே அவர்கள் ஆழ்ந்திருக்கும் வரை அவர்களால் பேசும் சொற்களைக் காகிதத்தில் மாற்றி கொண்டுவர முடியாது. ஆதலால் அவர்கள்

பேச்சுக்களைத் தொகுத்து நூலாக எழுத முடியாது.

எழுதும் பாணியைச் சற்று விலக்கி வைத்துவிட்டு பேசும் மொழியைப் பின்பற்றினால் என்ன என்று சிந்தியுங்கள். வாசகர்கள் படித்து ஏதாவது தெரிந்து கொள்ள முடியும் என்றால் புத்தகம் இலக்கிய நடையில் ஏன் எழுதப்பட வேண்டும் என்பதற்கு ஒரு காரணமும் இல்லை. புத்கத்தின் கருத்துக்கள் எளிதாகப் படிக்கும் நடையில் எழுதப்பட்டால், அது போதுமானது. சிறிது பழக்கப்படுத்திக் கொண்டால், நல்ல நூலை இவ்வாறு எழுத முடியும். மக்கள் ஏன் அவ்வாறு நினைக்கிறார்கள் என்றால், அவர்கள் எப்போதும் இலக்கிய நடையையே விடாமல் பிடித்துக் கொண்டிருப்பதால்தான். அதை விட்டுவிட்டால், மேடைப் பேச்சும் நூல் எழுதுவதும் நிச்சயமாக ஒத்துப் போகும்.

ஆனால் அதற்கு ஓரளவு கெட்டிக்காரத்தனம் தேவை. ஒரு குறிப்பிட்ட சொற்பொழிவு என்பது புத்தகத்தில் ஒரு பிரிவாக அமையவேண்டுமானால், ஒன்றரைமணிநேரம் பேசுவதற்கான கருத்து செறிவு இருக்க வேண்டும். அதை எப்படி உறுதி செய்கிறேன் என்பதை விளக்குகிறேன். என்னுடைய பயிற்சி காரணமாக, ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது, ஒவ்வொரு பக்கத்திலும் முக்கியமான பகுதிகளை சிவப்பு மையினால் அடிக்கோடிட்டு அவற்றை அப்படியே மனப்பாடம் செய்துவிடுவேன். புத்தகத்தின் பெரும்பகுதி எனக்கு நினைவிருக்காது என்றாலும், புத்தகத்தின் சாரம் மட்டும் என் மனதில் பதிந்து அதை நான் நினைக்கும் நேரத்தில் நினைவுகூர முடியும். இப்படித்தான் என் ஞாபக சக்தி வேலை செய்கிறது.

இவ்வாறு என்னைப் பழக்கிக்கொண்டுவிட்டதால், நான் பேசும்போதே மனத்தில் சிவப்புக் கோடுகளை போட்டுக் கொள்வேன். அதாவது என் பேச்சுக்களை புத்தகமாக்கினால், புத்தகத்தில் எந்தப் பகுதியை வாசகர்கள் சிவப்பு மையால் கோடிட விரும்புவார்கள் என்பதை என்னால் சொல்ல முடியும். இவ்வாறு ஒரு பக்கத்தில் இரண்டு வரிகள் இருந்தால், அந்தப் புத்தகம் படிக்கத் தக்கது என்று பொருள். சுருங்கச் சொன்னால், ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு வரிகள் நினைவில் வைக்கத் தக்கவை என்றால், அது நல்ல புத்தகமாகும். வாசகர்கள் தங்கள் நேரத்தை வீணாக்கவில்லை என்று உணர்வார்கள். இந்தத் திறமையைப் பயிற்சி செய்வதன் மூலம் விரிவாக்கிக் கொள்ளலாம்.

இப்படித்தான் வாழ்க்கையில் என்னுடைய நோக்கை

புரட்சிகரமாக மாற்றிக் கொண்டேன். நீங்கள் என்னுடைய நிலையில் இல்லை என்றாலும், எனக்குக் கிடைத்த வாய்ப்புகள் உங்களுக்குக் கிட்டவில்லை என்றாலும், இந்தத் தத்துவத்தை நீங்கள்கூட பயன்படுத்தலாம். உங்கள் இதயத்தைத் தொட்டுப் பார்த்தால், ஒன்றுக்கு ஒன்று முரணான இரண்டுவித துடிப்புகளை உணர முடிகிறதா?

உங்களுக்கு அ அல்லது ஆ என்னும் இரண்டு சமமான வாய்ப்புகள் இருக்கின்றன. அ என்பதைத் தேர்ந்தெடுத்தால், ஆ என்னும் வாய்ப்பை விலக்க நேரிடும். இருப்பினும் ஆ என்பதைத் தேர்ந்தெடுத்தால் அ என்பதை விட்டுவிட நேரிடும். எல்லோரும் இத்தகைய இரண்டுங்கெட்டான் நிலைக்கு தள்ளப்பட்டு தவிப்பதுண்டு. எடுத்துக்காட்டாக, நீங்கள் எங்கள் நிறுவனத்தில் நடக்கும் ஒரு கருத்தரங்கத்துக்குப் போனால் உங்கள் துணைவரை தனியே விட்டுப் போக நேரிடும். அதனால் மன வேற்றுமை ஏற்படும். போகாமல் இருப்பது என்று முடிவெடுத்தால், உங்கள் துணைவருடன் இணக்கம் நன்றாக இருக்கும். ஆனால் போகவேண்டும் என்று விரும்பியதால், நீங்கள் ஏமாற்றமடைவீர்கள். இத்தகைய நிலைமையில் நீங்கள் மாட்டிக்கொள்வதுண்டு. இந்த எடுத்துக்காட்டை எடுத்துக்கொண்டால், உங்கள் துணைவரை கருத்தரங்குக்கு அழைத்துப் போகலாம். அல்லது இந்த சங்கடத்தை சமாளிக்க வேறு ஏதாவது வழியைத் தேடலாம்.

ஒன்றுக்கொன்று முரணான இரண்டு ஆசைகள் அல்லது தேவைகளினால் அவதிப்படும்போது இது அல்லது அது என்று ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்தே ஆக வேண்டும் என்னும் நிலைக்கு ஆளாகிவிடாதீர்கள். இரண்டு முரண்பாடான முடிவுகளையும் ஒன்றாக்குவது அல்லது பிரச்சினையை அறவே ஒழிப்பதற்கான மூன்றாவது வழியைக் கண்டுபிடிப்பது எப்படி என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். பிரச்சினைகளைத் தீர்க்க, புதுப்புது வழிகளைப்பற்றி தொடர்ந்து சிந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் புதிய வழிகளைக் கண்டுபிடிக்க தொடர்ந்து முயற்சி செய்தால், உங்களுக்கு ஒரு பாதை நிச்சயமாகத் திறக்கும்.

இக்கட்டான நிலையிலிருந்து மீள்வதற்கு எவ்வளவு முயல்கிறீர்களோ அவ்வளவுக்கு புது வழிகள் கிடைக்கும். இத்தகைய மனப் பயிற்சி முக்கியம். இவ்வாறு சிந்திப்பதை ஒரு

பழக்கமாக ஆக்கிக்கொண்டால், புது வழிகள் பிறப்பதற்கான வாய்ப்புகள் திடீரென்று அதிகரிக்கும். செய்து முடிக்கும் திறமையையும் நீங்கள் பெறலாம்.

இத்தகைய திறமை இருந்தால், எப்போது பிரச்சினை ஏற்பட்டாலும், "இப்போது இந்தப் பிரச்சினை இந்த இடத்தில் இருக்கிறது. இரண்டு முரண்பாடான வழிகள் உள்ளன. நான் இந்த சிக்கலை இப்படி அணுகினால் எல்லாம் சரியாகிவிடும். அது சரியாக இல்லை என்றால், நான் இன்னொரு வழியைப் பயன்படுத்துவேன்" என்று என்னால் இப்படி சொல்லமுடியும். இவ்வாறு உங்களால் ஒரு தீர்வை ஒரு சில வினாடிகளில் தரமுடியும் என்றால் பிறகு பிரச்சினையே இருக்காது. தீர்வுகள் பற்றிய எதிர்பார்ப்பு மட்டுமே இருக்கும். முதல் தீர்வு சரியாக வேலை செய்யாவிட்டால், அடுத்தது இரண்டாவது தீர்வு, அடுத்து மூன்றாவது தீர்வைப் பயன்படுத்தலாம். இவைகள் கைகளில் இருக்கும்போது நீங்கள் சிறிதும் கவலைப்படத் தேவையில்லை.

இத்தகைய மனப்பயிற்சி செய்தால் நல்லது அல்லது கெட்ட விளைவைத் தேர்ந்தெடுப்பது என்ற கோணத்தில் மட்டும் பிரச்சினைகளைப் பார்க்க மாட்டீர்கள். உங்கள் சுற்றுப்புறத்திலும், கூட இருப்பவர்கள் உறவிலும் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சினையையும் உங்களால் ஒரு மாறுபட்ட வழியில் தீர்க்க முடியும் என்பதை உணர்வீர்கள். இது ஒரு சுவையான அனுபவம் ஆகும்.

3. தீர்மானமான முடிவெடுக்க நேர் எதிராக சிந்தியுங்கள்

மனப்பயிற்சி என்னும்போது, வேலையில் திறமை என்பதைப்பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும். நீங்கள் எவ்வளவு கடுமையாக வேலை செய்தபோதும் சில சமயங்களில் எல்லா வேலைகளையும் முடிக்க முடியாது என்று நினைப்பதுண்டு. இவ்வாறு சிந்திப்பவர்கள் ஒரு பழக்கத்திற்கு அடிமையாகி, அதன் காரணமாக அவர்களின் வேலையில் திறமை என்பது மிகவும் குறைந்து விடுகிறது.

இத்தகைய மனிதரால் கவலையின்றி உட்கார்ந்து வாழ்க்கையை அனுபவிப்பது எப்படி என்று தெரியாது. ஒரு கோடைக்கால விடுமுறைக்கும் போக மாட்டார். உலகின் பல பகுதிகளில் இது ஏற்றுக் கொள்ளப்படலாம். விடுமுறைகளில் கூட வேலை

பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். ஒருநாள் விடுமுறை எடுத்தால், வேறு யாராவது அந்த வேலையைச் செய்ய நேரிடும், அது சரி அல்ல என்று நினைக்கிறார்கள். இத்தகைய மனப்பான்மை உடையவர்கள் விடுமுறையே எடுக்காமல் இருப்பது வியப்பைத் தராது. மற்றவர்களைப் பார்த்து விடுமுறை எடுத்துக் கொள்ளுங்கள் என்பார்கள். ஆனால் அவர்களால் மட்டும் முடியவே முடியாது என்று நினைப்பார்கள். மெல்ல மெல்ல இத்தகைய உணர்வு அவர்கள் மனதைக் குடைந்து ஒருவிதமான சுய தண்டனையாக மாறிவிடும். மற்றவர் வேலைகளை செய்யத் தயாராக இருக்கும் இத்தகைய மனிதர்கள் தங்களுடைய வேலையில் திறமை குறைந்தவர்களாக ஆகிவிடுவார்கள்.

இந்தச் சூழ்நிலையில் நீங்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு போனால், என்ன ஆகும் என்பதை நினைத்துப் பாருங்கள். மூன்று நாட்கள் விடுமுறை என்பதே அதிகபட்சம் என்று நினைக்கும் நிறுவனங்களில் இதைவிட அதிகமாக விடுமுறை எடுத்துக்கொண்டால், அது ஒரு பெரிய பிரச்சினை ஆகிவிடும் என்று தெரிந்தும், ஒரு முழு வாரம் போய்வர நினைக்கிறார்கள். உண்மையிலேயே ஒரு வாரம் போய்விட்டால் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலை மலை போல் குவியும். அதன் விளைவாக உங்களுடைய சக ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எவ்வளவு சங்கடமாக இருக்கும் என்ற எண்ணம்தான் முதலில் உங்கள் மனதில் உதிக்கும்.

அடுத்து மற்றவர்கள் உங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள்? நீங்கள் விடு முறையில் போகாமல் இருப்பதற்கு இதுவே முக்கிய காரணமாக இருக்கலாம். நீங்கள் சோம்பேற்றி என்றோ அல்லது உங்களைப்பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருப்பவர் என்று மற்றவர்கள் நினைக்க விரும்ப மாட்டீர்கள். மற்றவர்கள் தங்கள் வேலை தவிர உங்கள் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியிருக்கிறது என்று உங்கள்மீது ரகசியமாக புகார் கூறுவார்கள் என்று கற்பனைசெய்து, நீங்கள் விடுமுறை வேண்டாம் என்று தீர்மானிப்பீர்கள். இத்தகைய மனிதர்களில் பலர் விடுமுறையில் செல்லாததற்கு இதுவே காரணம் என்று நான் கருதுகிறேன். முடிவில் பெரும்பான்மைக்கு இணங்கி இரண்டு நாட்கள் விடுமுறை போதும் என்று திருப்தி அடைகிறார்கள்.

ஆனால் இன்னொரு விதமாக நினைத்துப் பார்க்கலாம். இத்தகைய நிலையில் நீங்கள் இருந்தால், சக ஊழியர்களுக்கு அதிக தொல்லை தராமல் எப்படி விடுமுறையில் போவது,

அதனை எப்படி அனுபவிப்பது என்று உங்களையே கேட்டுப் பாருங்கள். உண்மையில் அவ்வாறு செய்யமுடியும் என்று தெரிய வரும். எடுத்துக்காட்டாக நீங்கள் ஆகஸ்டு மாதத்தில் விடுமுறையில் செல்ல விரும்பினால், அதற்கு முன்பாக உங்கள் பொறுப்பில் உள்ள அத்தனை வேலைகளையும் முடிக்க திட்டமிடுங்கள். நீங்கள் முயற்சி செய்தால் நிச்சயம் செய்ய முடியும். இனிமேல் எந்த வேலையும் கிடையாது என்னும் அளவுக்கு முயற்சி செய்யுங்கள். முடித்துவிட்டு மற்றவர்களைப் பார்த்து கேளுங்கள். “வேலையா? எனக்கு எதுவுமே இல்லை. இந்த ஆண்டுக்கான அத்தனை வேலைகளையும் செய்து முடித்துவிட்டேன்”.

இதை அடைவதற்கு அடுத்த மாதம் மிகவும் திறமையாக வேலை செய்ய வேண்டும். ஆகஸ்டு மாதம் வரையிலான வேலைகளை முடிப்பது போதும் என்றாலும் அதற்கு முன்பு வேலை செய்து உங்கள் மேசையைச் சுத்தமாக வைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே நீங்கள் வேலைகளைச் செய்தாலும், விடுமுறையிலிருந்து திரும்பிய பிறகும் உங்களுடைய பொறாமைக்கார சக ஊழியர்களின் குற்றங்காணுதல் தொடரும். ஆதலால், செப்டம்பர் மாத வேலையையும் சேர்த்து முடிக்க முயல வேண்டும். அதாவது நீங்கள் முன்பாகவே மிக அதிகமாக வேலை செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்ய முடிந்தால், அன்றாடம் நீங்கள் நிறைய வேலை செய்தும், பல மாதங்களுக்குப் போதுமான வேலை இருக்கிறதே என்று நீங்கள் நினைத்தால், அது தவறானது. உங்களை அறியாமலேயே கடினமாக வேலை செய்தால் இனி வேலை ஏதும் இருக்காதே என்று நினைத்து சில வேலைகளை முடிக்காமல் வைத்திருப்பீர்கள். ஒவ்வொரு நாளைக்கும் போதுமான வேலை இருக்காதே என்று நினைத்து சராசரியாகக் கணக்கிட்டு, நாள் முழுவதும் போதுமானதாகப் பிரித்து வைப்பீர்கள். முழு மனதுடன் செயல்பட்டால், குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே எல்லா வேலையையும் முடித்துவிட முடியும்.

சிலருக்கு ஓய்வெடுக்கச் செல்கிறோமே என்ற குற்ற உணர்வு இருக்கும். ஆனால் இத்தகைய குற்ற உணர்வுகளை இன்னும் நன்றாக வேலை செய்வதற்கு ஊக்க சக்தியாகப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் திரும்பி வரும்போது உங்கள் சக ஊழியர்களால் ஒதுக்கி வைக்கப்படுவீர்கள் என்று நினைத்து மேலும் கடுமையாக உழைப்பீர்கள். ஆண்டு இறுதிக்கான

வேலைகள் மட்டுமின்றி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரையிலான வேலைகளையும் நீங்கள் முடித்து விடுவீர்கள். ஒருவாறாக இவ்வாறு முடித்துவிட்டால், மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன சொல்வார்கள் என்ற பயமே இருக்காது. உங்கள் நோக்கத்தைப் பொறுத்து எதை நீங்கள் தடை என்று நினைத்தீர்களோ அதையே உந்துபலகையாக மாற்றி மேலும் பல பெரிய சாதனைகளைப் புரியத் தூண்டும்.

விடுமுறையில் செல்வதால் எழும் இன்னொரு சிக்கல் என்னவென்றால் நீங்கள் இல்லாதபோது, உங்கள் சக ஊழியர்கள் உங்கள் வேலையைச் செய்ய சிரமப்படுவார்கள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உங்கள் வேலையில் என்னென்ன செய்யவேண்டும் என்பதை அவர்களுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று பொருட்படுத்தாமலேயே உங்கள் வேலையை நீங்களே உங்கள் பாணியில் செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் இல்லை என்றால், நீங்கள் எப்படி வேலை செய்கிறீர்கள் என்பதை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். உங்களுக்கு வரும் அழைப்புகளை வேறு ஒருவர் ஏற்று உங்கள் வேலையைச் செய்யவேண்டுமானால், நீங்கள் இருப்பது போலவே நினைத்து அதேபோல் செய்து முடிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதற்கு எதை, எப்படி செய்வது என்பதைப்பற்றி தெளிவாகவும் சுருக்கமாகவும் புரிந்து கொள்ள ஒரு கையேடு தயாரிக்க வேண்டும். அதில் “இந்த நிலைமையை இப்படி சமாளியுங்கள்” என்று குறிப்பிட வேண்டும். இதைக் கொண்டு மற்றவர்கள் உங்களுக்கு பதிலாக ஒரு பார்வையில், என்ன செய்ய வேண்டும் என்று தெரிய வேண்டும். நீங்கள் ஓய்வெடுக்கப் போவதற்கு முன்பு, எல்லா பிரச்சினைகளையும் பட்டியலிட்டு, “தற்போது இந்த பிரச்சினைகள் உள்ளன. அவற்றிற்கு இவ்வாறு முடிவு காண வேண்டும். இன்னாரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தால், கீழ்க்கண்டவாறு பதில் சொல்லவும்.” இவ்வாறு தயார் செய்தால், அனைத்தும் தெளிவாக இருக்கும். நீங்கள் விடுமுறையில் போகலாம்.

இதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், எந்தவித தயாரிப்புகளும் இல்லாமல், “நாளை முதல் நான் போகிறேன். பிறகு பார்க்கலாம்” என்று கூறிவிட்டு நீங்கள் விடுமுறையில் சென்றால், உங்களுடைய சக ஊழியர்கள் கோபப்படுவார்கள்

என்று எதிர்பார்க்கலாம். உங்களுடைய வாடிக்கையாளரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் ஒரு பிரச்சினைக்கு உடனே விளக்கம் கேட்க, அதைப் பற்றி முன்னரே சக ஊழியர்களிடம் விளக்காமல் சென்றிருந்தால், அவர்கள் உங்கள்மீது பிற்காலத்தில் விரோதம் கொள்வதற்காக அவர்களைக் குறை கூறமுடியாது. அவர்கள் உங்களை நம்பமாட்டார்கள். குறை உங்களிடமே உள்ளது.

ஏதோ ஒன்று உங்கள் வேலைக்கு கெடுதலானது அல்லது உங்கள் பதவிக்குப் பொருந்தாதது என்று நினைத்திருப்பீர்கள். ஆனால் அதையே உங்கள் திறமையை மேம்படுத்துவதற்கும் உங்கள் தரத்தை உயர்த்துவதற்கும் பயன்படுத்தலாம். நீங்கள் எந்த வேலை செய்தாலும் இது எப்போதும் பொருந்தும். ஒரு கடையில் நாள்முழுவதும் தொடர்ந்து வாடிக்கையாளர்களுடன் இருக்க நேர்ந்தால், நீங்கள் எவ்வளவு உழைக்க வேண்டி இருக்கிறது என்று மற்றவர்களிடம் புகார் கூறுவீர்கள். ஆனால் சற்று ஆழ்ந்து சிந்தித்தால், ஓயாமல் ஓடுவது என்பது ஒரு சுழற்சிபோல இருக்கும். ஒரு நாளைக்கு பன்னிரெண்டு மணி நேரம் கால் கடுக்க ஓடவேண்டியுள்ளதே என்று நினைக்கலாம். நியாயமாகப் பார்த்தால், வேலை இல்லாத நேரத்தை எவ்வளவு மகிழ்ச்சியுடன் கழிக்கிறீர்கள் என்பதை உணர்வீர்கள். வேலை சற்று மந்தமாக இருக்கும்போது அந்த நேரத்தை உங்கள் திறமையைப் பயன்படுத்தி வேறு ஏதாவது செய்ய வேண்டும்.

சிற்றுண்டி சாலை அல்லது ஓட்டலில் வேலை செய்பவர்கள் நாள் முழுவதும் வேலையாக இருப்பதாக நினைக்கலாம். ஆனால் மதியம் அல்லது இரண்டு மணி வரை வேலை இருக்கலாம். அடுத்து கடுமையான வேலை நேரம் மாலை ஐந்து மணி வரையில் துவங்காது. நடுவில் ஒருமந்தம் தென்படும். அவர்கள் வேலையை ஒழுங்கு படுத்தினால் பிற்பகலில் இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம். ஆனால் இதை அவர்களிடம் சொன்னால், மாலை நேர கூட்டத்தைச் சமாளிக்க தங்களைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்பார்கள். அதேபோல், மதிய சாப்பாட்டு நேரத்திற்காக காலை நேரங்களில் வேலையாக இருப்பதாகச் சொல்வார்கள். உண்மையில் இதைப்பற்றி நினைத்துக்கூட பார்க்க மாட்டார்கள். அவர்கள் எப்படி வேலை செய்கிறார்களோ அதுதான் ஒரே வழி என்பார்கள். ஒரு நேரத்தில் அதிகமாக வேலை செய்தாலும் பிற்பகலில் போதிய ஓய்வு நேரம் கிடைக்கும்.

இதைப்போன்று பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. கடினமான நிலைமைகளைச் சமாளிக்கும் வழிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். அவ்வாறு செய்யும்போது உங்கள் கவலைகளிலிருந்து ஒவ்வொன்றாக விடுதலை பெறமுடியும்.

4. தோல்வியை உந்துபலகையாக்குங்கள்

உங்கள் வாழ்க்கையில் முடிவெடுக்க வேண்டிய தருணங்கள் பல வரும். முன்னால் போவதா, பின்னால் போவதா, வலப்புறம் உள்ள பாதையா அல்லது இடப்புறம் உள்ள பாதையில் போவதா என்று. இத்தகைய நேரங்களில் உண்டு அல்லது இல்லை என்று மட்டும் முடிவெடுப்பவர்கள் நிச்சயம் நம்பிக்கையின்மை என்னும் சுழலில் மாட்டிக்கொள்வார்கள், அடிக்கடி சோர்ந்து போவார்கள். முடிவெடுப்பதில் ஆம் அல்லது இல்லை என்ற முடிவு மட்டுமின்றி மூன்றாவது விருப்பம் ஒன்றையும் முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். இது மிகவும் முக்கியம். இவ்வாறு தேர்வு செய்வோரின் வாழ்க்கையும், தேர்வு செய்யாதவர்களின் வாழ்க்கையும் மிகவும் மாறுபட்டதாக இருக்கும்.

பேஸ்பால் என்னும் பந்து விளையாட்டில் “ஆட்டம் ஆடுவதில் சராசரி” என்பது வாழ்க்கைக்கு முற்றிலும் பொருந்தாது என்றாலும், மூன்றாவது விருப்பத்தை எப்போதும் தேடுபவர்கள் “ஆட்டத்தின் சராசரி” முப்பதுசதவிகிதமாவது இருக்கும் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். முப்பது முதல் நாற்பது சதவிகிதம் வெற்றி பெறுவோர், அதாவது தோற்பதைவிட அதிகமாக வெற்றி பெறுபவர்கள் மூன்றாவது விருப்பம் என்னும் முறையில் சிந்திப்பவர்கள், நூறு சதவிகிதம் வெற்றி பெறாவிட்டாலும் மேலும் முப்பது முதல் நாற்பது சதவிகிதம் முறை அதிகமாக வெல்வார்கள்.

நீங்கள் எதிர்பார்ப்பது போல் இறுதி முடிவுகள் அமையாவிட்டாலும் உங்களின் அடுத்த கட்டத்திற்கு இத்தகைய எண்ணங்கள் உறுதுணையாக இருக்கும். நீங்கள் அந்த நேரத்தில் தோல்வி அடைந்தாலும் உங்களுக்கு கீழ்க்கண்டவாறு நீங்களே ஆறுதல் கூறலாம். “சரியான வழியைக் கண்டுபிடிக்க என்னுடைய கண்ணோட்டத்தைப் புரட்சிகரமாக ஆக்கினாலும். நான் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை.” இருந்தாலும் எல்லாவிதமான சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து பார்த்தது முற்றிலும் வீண் என்று கூறமுடியாது. ஓர்

ஆண்டில் அல்லது இரண்டு ஆண்டுகளில் அல்லது ஐந்து ஆண்டுகளில் மாறுபட்ட பிரச்சினை ஏற்பட்டாலும் வேறு ஒரு சூழ்நிலையில் உங்களால் தீர்வு காண முடியும். இந்த முயற்சியின் நல்ல விளைவு என்னவென்றால் ஒருமுறை உங்கள் சிந்தனைகளை தெளிவாக்கிக் கொண்டால், அடுத்த முறை இந்த வழிகளை நன்றாகப் பயன்படுத்த முடியும்.

“பார்வையை புரட்சிகரமாக மாற்றுதல்” என்பதை இன்னொரு கோணத்திலிருந்து விளக்கலாம். அதாவது எந்தச் சூழ்நிலையையும் தோல்வியையும்கூட உங்களுக்கு சாதகமாக மாற்றுதல் என்று பொருள். என்ன நடந்தாலும் அதை உங்களுக்கு ஏற்ற வாய்ப்பாக மாற்றி அடுத்த கட்டத்தில் அடி எடுத்து வைப்பது என்னும் மனநிலை ஆகும். நீங்கள் தோல்வி அடைந்தால், அதை மாற்றி உறுதியான வெற்றியாக மாற்றும் கருவியாக மாற்றிக்கொள்ளுங்கள். பார்வையை முற்றிலும் மாற்றுதல் என்பது செயல்படுத்துவதில் ஒரு பகுதி ஆகும். உங்கள் கைவசம உள்ள வளங்கள் அனைத்தையும் எப்படிப் பயன்படுத்துவது என்று சிந்தியுங்கள். ஒன்றும் வீணாவதில்லை. வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வையும் நிலைமையையும் எப்படி பயன்படுத்திக் கொள்வது என்று சிந்தியுங்கள்.

இது மக்களுக்கும் பொருந்தும். சிலரை உங்களுக்குப் பிடிக்கும். சிலரைப் பிடிக்காது. பிடித்தவர்களுடன் இருந்தால் மகிழ்ச்சியும், குதூகலமும் கிடைக்கும். அதற்கு பதிலாக நீங்கள் வெறுக்கும் ஒருவரைச் சந்தித்தால், அவரை உங்கள் ஆசிரியராக நினைத்துக் கொள்ளுங்கள். அவருடைய குணநலன்களை விரிவாக ஆராய்ந்து பார்த்து உங்களுக்கு ஏன் பிடிக்கவில்லை என்று தெரிந்து கொள்ளலாம். மனிதனின் இயல்புகளைப் பற்றி தெரிந்து கொள்ள உங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி சொல்லுங்கள். அவர்கள் ஏன் இத்தனை தவறுகளைச் செய்கிறார்கள், ஏன் அவர்கள் குணநலன் உங்களுக்கு வெறுப்பைத் தருகிறது, ஏன் அவர்கள் மோசமான செயல்களைச் செய்கிறார்கள், ஏன் எல்லாவற்றையும் நம்பிக்கை இல்லாமல் பார்க்கிறார்கள் என்பதைப்பற்றி முயற்சி செய்து தெரிந்து கொள்ளுங்கள். அவர்களுடைய ஆளுமை பற்றிய ஒவ்வொரு பகுதியையும் தெரிந்து கொண்டால், அவற்றிலிருந்து நீங்கள் நிறைய தெரிந்து கொள்ள முடியும்.

அவர்களிடம் நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடங்கள் உங்கள் சேமிப்பு ஆகும். இப்படி சேமிப்பதை வங்கியில் போட்டு

வைக்கும் பணத்தைப்போல் நினைக்காதீர்கள். நீங்கள் கற்று உறுதி செய்துகொண்ட பாடங்கள், உங்கள் அனுபவங்கள் வாயிலாகவும் மற்றவர்களைக் கூர்ந்து கவனித்து தாம் தெரிந்து கொண்ட பாடங்கள் உங்களுடைய ‘வைப்பு நிதி’ என்று நினைத்து, பிற்காலத்தில் தேவைப்படும்போது எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய வைப்பு நிதி வைத்திருப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். இத்தகைய மனோநிலையின் முக்கியத்துவத்தை என்னால் வலியுறுத்தாமல் இருக்க முடியாது.

5. இறைவன் உருவாக்கிய உலகத்தில் வீணானது என்பதே கிடையாது

பார்வையை புரட்சிகரமாக மாற்றுதல் என்பது ஒரு தனி மனிதனுக்கு மட்டுமல்ல என்பதைக் கூற விரும்புகிறேன். இக் கருத்து தன்னை உணர்தல் என்னும் கருத்துக்கு தொடர்புடையது என்றாலும் உங்களுடைய உயரிய நோக்கங்களை அடைவதற்காகவோ அல்லது உங்கள் வாழ்க்கையை இனிதாக்குவதற்காகவோ ஏற்பட்டது அல்ல. இதை ஆரம்பத்திலேயே நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த சிந்தனை “பயன்படாத எதையும் இறைவன் உலகத்தில் படைக்கவில்லை” என்ற கருத்தின் அடிப்படை ஆகும். உலகத்தில் வாழும் மனிதர்கள் புலம்புகிறார்கள், குறை கூறுகிறார்கள், நிறைய ஆசைகளுடன் இருக்கிறார்கள். இந்த உலகம் வாழ்வதற்குக் கடினமானது என்று நினைக்கிறார்கள். தாங்கள் சந்திக்கும் எவரையும் நம்ப முடியாது என்று உணர்கிறார்கள். இருந்தாலும், பார்வையை முற்றிலும் மாற்றுதல் என்னும் சிந்தனை இத்தகைய எதிர்மறை எண்ணங்கள் உண்மை அல்ல என்னும் அடிப்படையில் உருவானது. இதை நீங்கள் ஏற்றுக்கொண்டாலொழிய உங்கள் பார்வையை முற்றிலும் மாற்றிக்கொள்ள முடியாது.

இறைவன் இந்த உலகை நல்ல நோக்கத்துடன் படைத்தார். தூய்மையான, அழகான, அற்புதமான உலகம் இருக்கவேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் உலகைப் படைத்தார். இல்லையென்றால், தோற்றுவித்து இருக்க மாட்டார். உலகத்தில் மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் கண்களில் தீயது என்பதையும் எதிர்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் இது இறைவனின் நோக்கம் அல்ல.

எங்கள் நிறுவனத்தின் நூல்களில் உலகம் தானாகத் தோன்றவில்லை, இது இறைவனின் படைப்பு என்று படிப்பீர்கள். இது இறைவனின் தூய எண்ணத்தில் உருவானது என்று. அப்படி என்றால், இங்கு வாழும் நீங்கள் ஏன் சுகமின்மையும் துயரமும் அனுபவிக்க வேண்டும்? ஒருவேளை நல்ல நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டதாக இருக்காது என்று நம்பாமல் இருக்கலாம். இறைவன் இந்த . உலகம் அருமையானதாக, இனிமையானதாக படைத்திருப்பார் என்பதை நீங்கள் நம்பாமல் இருக்கலாம். இந்த உண்மையைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம் அல்லது உங்கள் கண்ணோட்டம் தவறாக இருப்பதால் நீங்கள் அவதிப்படுகிறீர்கள்.

இந்தக் கோணத்தில் உலகத்தைப் பார்த்தால், உங்கள் சிந்தனை மாறிவிடும். இது வரையில் உலகத்தை எடைபோடுவதிலும் மற்றவர்களைக் குற்றம் காண்பதிலும் உள்ள நிலையில் நீங்கள் இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தீர்கள் என்று உணர்வீர்கள் விதியை நொந்து கொண்டும் எல்லாவற்றையும் எடைபோட்டு நல்லது அல்லது கெட்டது என்று பிரித்துக்கொண்டு உலகத்தில் உங்களுக்கு நல்லதைவிட கெட்டதே அதிகம் இருப்பதாக நினைத்திருக்கலாம். அதன் விளைவு, உலகம் இருண்டது, தீமையே தரும் இடம் என்று நம்பி இருக்கலாம். இருந்தாலும், புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் செல்லுங்கள். இந்த உலகம் இறைவன் தோற்றுவித்தது. இறைவன் உருவாக்கிய இந்த உலகம் அருமையானது என்று நம்புவது அனைத்திற்கும் ஆரம்பமாகும். நீங்கள் இவ்வாறு சிந்திக்காமல்தடுத்தது, நீங்கள் கோணலான பார்வையுடன், தவறாகப் புரிந்து கொண்டதே ஆகும்.

ஒருமுறை இவ்வாறு சிந்திக்க முடிந்தால் வாழ்க்கையை நீங்கள் நோக்கிய விதம் மற்றும் உங்கள் கண்ணோட்டம் ஆகியவை தவறாக இருக்குமோ என்று கேட்கத் தொடங்குவீர்கள். மற்ற மனிதர்கள் நல்லவர்கள் அல்ல அல்லது உலகில் நம்பிக்கை வைக்கமுடியாத மக்கள் நிறைய இருக்கிறார்கள் என்று நினைத்தது தவறு என்று உணர்வீர்கள். உலகம் நல்லது என்னும் அடித்தளத்தில் உருவாக்கப்பட்டது என்றால் உங்களைச் சுற்றி உள்ளவர்களைக் குறைகூறுவது தவறானது என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

முக்கியமான சிக்கல் என்னவென்றால், நீங்கள் வாழும்

உலகத்தையும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதுதான். உலகில் உள்ள அனைத்தும் உங்களுடைய ஊட்டத்திற்கும் உங்கள் ஆத்மாவைத் தூய்மைப் படுத்துவதற்கும் தரப்பட்டுள்ளது. ஒருமுறை இவ்வாறு சிந்தித்தால், உலகத்தில் எதுவும் வீணானது அல்ல என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

6. உங்கள் கர்மவினை என்பதை ஆக்கபூர்வமான மனோபாவத்துடன் எதிர் கொள்ளுங்கள்

இறைவன் நீங்கள் வாழும் உலகை உண்டாக்கினார் என்ற முதல் காரணம் அடுத்த காரணத்திற்கு அடிவகுக்கிறது. நீங்கள் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கும் மறு பிறவி என்னும் கோட்பாடாகும். மனிதர்கள் அனைவரும் இந்த உலகில் அவர்களுடைய ஆன்மிக வளர்ச்சிக்காக மீண்டும் பிறப்பார்கள் என்னும் கருத்தை ஏற்றுக்கொண்டால், தற்போது உள்ள நிலைமை ஒரு கடும் சோதனை போல உள்ளது என்ற நினைப்பு மாறிவிடும். வாழ்க்கை என்றென்றும் நிலையானது என்றும், மீண்டும் மீண்டும் உலகில் நீங்கள் பிறப்பீர்கள் என்பது உங்கள் சிந்தனையில் அடிப்படையாக்கிக் கொண்டால், உங்கள் மனோபாவம் முற்றிலும் வெற்றாக இருக்கும்,

நீங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், இந்தப் பிறப்பில் எத்தகைய சவால்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பதை விளக்கிக் காட்டும். வாழ்க்கை என்பது சிக்கல்களுக்கு முடிவு காணும் பயிற்சி நூலைப் போன்றது. தற்போது உங்களுக்கு வேதனையைத் தருவது, அதிலும் குறிப்பாக தாங்க முடியாத வேதனை தருவது, உங்களுக்கு தரப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவதாகும். சோகம் என்னும் சுழலில் நீங்கள் சிக்கிக் கொண்டதாக உணர்ந்தாலும், உங்கள் வாழ்க்கையின் முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றை எதிர்கொள்கிறீர்கள். உங்கள் ஆன்மிக வளர்ச்சியைத் தீர்மானிக்கும் நேரத்தில் இருக்கிறீர்கள் என்று பொருள். இது ஓர் எழுச்சியூட்டும் நேரம் ஆகும்.

கடைசியில் குத்துச்சண்டை நடக்கும் களத்தில் குதித்துவிட்டீர்கள். இது வரையில் பயிற்சி செய்வதிலும் கற்பனையில் உதித்த எதிரியுடன் சண்டை போடுவதிலும் நேரத்தைச் செலவிட்டீர்கள். அந்தக் காலம் முடிந்து இப்போது

போட்டி ஆரம்பமாகப் போகிறது. நடுவர் சிவப்பு மூலையிலிருந்து சண்டை போடுபவரைத் துவங்குங்கள் என்ற குரல் கொடுத்தவுடன் மேலாடையை எடுத்து எறிந்துவிட்டு, சண்டைக் களத்தில் நீங்கள் நுழைய வேண்டும். நுழைந்தவுடன் கீழ்க்கண்டவாறு உங்களுக்குள் நினைத்துக் கொள்வீர்கள். “நான் அவசரமாக கழிப்பறைக்குப் போக வேண்டும். ” ஆனால் அதற்கு காலம் கடந்து விட்டது. உங்களை அழைத்தவுடன் களத்திற்குள் குதித்து எதிரியிடம் நின்று சண்டை போட்டே தீரவேண்டும்.

தற்போது நீங்கள் ஏதாவது சிக்கலில் மாட்டி இருந்தால் ஒரு மாதம், இரண்டு மாதங்கள் ஏன் ஆறு மாதங்கள்கூட இந்தப் போட்டிக்காக பயிற்சி எடுத்துக் கொண்டு இறுதியாக இப்போது களத்துக்குள் குதித்துள்ளீர்கள் என்று நினைத்துக் கொள்ளவேண்டும். இந்தத் தருணத்திற்காகவே நீங்கள் இந்த உலகத்தில் பிறந்தீர்கள். இங்கு பிறப்பதற்கு முன்பு பல ஆண்டுகள் ஏன், பல நூற்றாண்டுகள் இந்தத் தருணத்திற்காக வேறு ஓர் உலகத்தில்கூட உங்களைத் தயார் செய்து கொண்டு இருந்திருக்கலாம். போதுமான வலிமை உங்களிடம் இருக்கிறது என்று தெரிந்த பிறகே இந்த உலகுக்கு வந்து இந்த சவாலை ஏற்றுள்ளீர்கள் இந்த நேரத்திற்காக பல நூற்றாண்டுகள், சில சமயங்களில் அதற்கும் அதிகமாகவும் உங்களைத் தயார் செய்து கொண்டிருப்பீர்கள். இந்தப் போட்டிக்காக நிறைய நேரம் பயிற்சி செய்திருப்பீர்கள்.

களத்தில் குதித்தவுடன் சாக்குபோக்கு சொல்வதற்கான காலம் கடந்து விட்டது. ஒருமுறை இறங்கியவுடன் என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் எதிரில் போட்டியாளர் நிற்கிறார். மற்ற எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். எதிரில் நிற்பவர் ஒரு மனிதர் என்றால் அவர் உங்களைத் தாக்கக்கூடும். எதிராளி ஒரு மனிதன் இல்லை என்று வைத்துக்கொள்வோம். தீர்வு காணமுடியாத பிரச்சினையாக நீங்கள் காண்பது ஒருவேளை கானல் நீராகக்கூட இருக்கலாம். உங்கள் கர்மவினை காரணமாக உங்கள் முன்னே ஒரு பிரச்சினை யாகவோ அல்லது கவலையாகவோ தோன்றலாம். களத்தில் நீங்கள் சண்டை போட்டுக்கொண்டிருப்பது வேறு ஒரு மனிதன் அல்ல. உங்களுக்கும் உங்கள் கர்மவினைக்கும் நடக்கும் போர் ஆகும். எப்பாடு பட்டாவது நீங்கள் இந்தப் போட்டியில் வென்றே ஆக வேண்டும். அதுவே இப்பிறப்பின் நோக்கமாகும்.

இதுவே “பார்வையைப் புரட்சிகரமாக மாற்றுதல்” என்பதை இன்னொரு கோணத்திலிருந்து விளக்குவதாகும். துணிவு மற்றும் ஆர்வம் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும் பார்வை ஆகும். களத்தின்மீது ஏறும் போது துணிவு வராமல் இருக்காது. ஏனென்றால் இந்தச் சண்டைக்கு பல ஆண்டுகளாகப் பயிற்சி செய்து கொண்டிருந்தீர்கள். முக்கியமான கட்டம் வரும்போது எதற்காக இன்னும் சாக்குபோக்கு சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? “என்னால் முடியாது, ஏனென்றால் நான் நிரம்ப கெட்டிக்காரன் அல்ல” என்றும் “என்னுடைய சூழ்நிலைகளே காரணம்” என்றும் “அது என்னுடைய சகோதரனின் தவறு” என்றும் “என்னால் வெற்றி பெற முடியாது, ஏனெனில் நான் ஒரு ஏழை” என்றும் சொல்கிறீர்கள்.

நீங்கள் போட்டி வளையத்தில் இறங்கி சிவப்பு மூலையிலிருந்து வெளியேறி எதிரியின் கை உறைகளை நீலப் பகுதியில் தொட்டுவிட்டு ஒருவரை ஒருவர் உற்று நோக்குகிறீர்கள். இப்போது சாக்குபோக்கு சொல்வது ஒருவன் கீழ்க்கண்டவாறு உளறுவதற்கு சமமாகும். “உண்மையைச் சொல்லப்போனால், நான் அண்மையில் எந்தப் பயிற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. என் கால்கள் விறைப்பாகவும் நேற்று முதல் எனக்கு முதுகு வலியும் இருக்கிறது. என் தோள்கள் வீங்கிவிட்டன. என்னால் நடக்கக்கூட முடியவில்லை. நன்றாகப் பாருங்கள். எனக்கு வலுப்பெற்ற தசைகளும் இல்லை. எனக்கு சண்டை போடும் துணிவு இல்லை. நான் பயிற்சி செய்யாமைக்கு என் பயிற்சியாளரே காரணம். சற்று நினைத்துப் பார்த்தால், இந்தப் போட்டியில் வெற்றி பெற்றாலும் தோல்வி அடைந்தாலும் எனக்கு கவலை இல்லை. எப்படி இருந்தாலும் நான் தோற்கப் போகிறேன் என்று எல்லோரும் நினைக்கிறார்கள்.” இவ்வாறு உங்கள் எதிராளியிடமிருந்து பேச்சைக் கேட்டால், அவன் பலமில்லாதவன் என்று புரிந்து கொண்டு முகத்தில் ஓங்கி ஒரு குத்து விடுவீர்கள்.

இத்தகைய போக்கு நல்லதல்ல. ஒருமுறை வளையத்தில் இறங்கிவிட்டால், உங்களுடைய பலவீனங்களை மறைத்துக்கொண்டு திறமையைக் காண்பிக்க வேண்டும். உங்கள் கர்ம வினையை நேருக்கு நேர் சந்திக்கும்போது, துணிவுடன் போரிட வேண்டும். உங்களுக்கு சாதகமான நிலை இல்லை என்றாலும் அதை வெளியே காட்டிக்கொள்ளாதீர்கள். உங்களுடைய போட்டியாளருக்கு ஒரு வாய்ப்பு இருப்பது தெரிய

வேண்டாம். உங்கள் எடை 150பவுண்டு மட்டுமே இருந்தாலும், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அதைவிட அதிகமாக எடை இருப்பதுபோல் காட்டிக்கொள்ள வேண்டும். எதிராளியை நீங்கள் கீழே வீழ்த்தப் போகிறீர்கள் என்ற பயத்தை உண்டாக்க வேண்டும். எப்போதும் ஆக்கபூர்வமாகவே சிந்திக்க வேண்டும்.

7. உங்களை வேறுவிதமாக மக்கள் எடை போடுகிறார்கள்

பலருக்கு தங்கள் உடலைப்பற்றி தாழ்வு மனப்பான்மை இருக்கும். மிகச் சிலரே தங்களுக்கு சிறந்த உடல்வாகு இருப்பதாக நினைக்கிறார்கள். உண்மையில் குறையில்லாத உடல், பலருக்கு இருப்பதில்லை. எனவே உங்கள் குறைபாடுகளைப் பற்றி கவலைப்படுவதில் ஒரு பயனுமில்லை.

உங்களுக்கு கவலை தரும் செய்திகளை நீங்கள் பட்டியலிட்டால் எத்தனை கவலைகளை உங்களால் காட்ட முடியும்? உங்களுடைய கவலை உடல்வாகு மற்றும் குணநலன் குறித்து இருக்கலாம். அநேகமாக அதிகபட்சமாக இருபது அல்லது முப்பது கவலைகளுக்கு மேல் இருக்க முடியாது. நூறு அல்லது இருநூறு கவலைகளைக் காட்டுவதற்கு நீங்கள் ஒரு பெரிய மேதையாக இருக்க வேண்டும். உடல்வாகைப் பற்றி நூறு கவலைகள் இன்னும் ஒரு நூறு, மனம் மற்றும் ஆன்மிகம் தொடர்பான குறைபாடுகளை உங்களால் நினைத்துப் பார்க்க முடியும் என்றால் பாராட்ட வேண்டும். இருப்பினும் உண்மையிலேயே நீங்கள் அவற்றைப் பற்றி கவலைப்படுகிறீர்களா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு பாதகமானவை என்று எவற்றை நினைக்கிறீர்களோ, உண்மையில் அதற்கு நேர் எதிர்மாறாக இருக்கும். இதை நீங்கள் சற்று ஆழ்ந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன் நீங்கள் எதைப்பற்றி கவலைப்படுகிறீர்களோ அவற்றில் ஏதாவது உங்களுக்கு சாதகமாக இருந்ததா? உங்களால் சாதகமான பகுதியைப் பார்க்க முடிந்தால், முயற்சி செய்து அதை விரிவாக்கிக் கொள்ளுங்கள்.

8. நூற்றி இருபது ஆண்டுகள் வாழத் திட்டமிடுங்கள்

மக்களில் பலர் புத்திசாலியாக இல்லையே, கெட்டிக்காரர்களாக

இல்லையே என்று கவலைப்படுகிறார்கள். தங்களுக்கு படிப்பு குறைவு என்றவுடன், எதற்கும் தகுதி அற்றவர்கள் என்றும், தங்களை மாற்றிக்கொள்ள முடியாது என்றும் முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். சில நேரங்களில் அவர்களுடைய எல்லை எது என்று சொல்லித்தர வேண்டும். ஆனாலும் அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்ள வேண்டியது “ஆகவேதான் முயற்சி செய்வது நல்லது.” உங்களுக்கு அறிவுக்கூர்மை குறைவாக இருக்கிறது என்றால், நீங்கள் தொடர்ந்து படிக்கலாம். அதுவே அனுபவிக்கத் தக்க முயற்சி ஆகும். நீங்கள் எவ்வளவு காலம் படிக்க நேர்ந்தாலும் புதிய புத்தகங்களுக்கு குறைவே இருக்காது. இது பிரச்சினையை எதிர்கொள்ள ஒரு வழி ஆகும்.

நான் ஏற்கெனவே நூறு நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறேன். சிலர் வேகமாகப் படித்து விரைவாக கருத்துக்களை உடனே புரிந்து கொள்வார்கள். வேறு ஒரு கோணத்தில் பார்த்தால், அவர்களுக்காக நான் வருத்தப்படுவேன். ஏனென்றால், அவர்கள் மகிழ்ச்சி குறுகிய காலத்துக்கு மட்டுமே. அதற்கு மாறாக சிலர் எல்லா நூல்களையும் பத்து ஆண்டுக் காலத்தில் படிக்க திட்டமிடுவார்கள். நீண்ட கால திட்டம் போடுபவர்கள் பேறு பெற்றவர்கள். ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் படிப்பதைவிட அதிகமான நூல்கள் வெளியிடப்படுவதால், அவர்கள் கால அட்டவணை பின் தள்ளப்பட்டு நீட்டிக்கப்படுகிறது. மலைபோல் குவிந்திருக்கும் நூல்களைப் படித்து முடிப்பதற்கென்றே நீண்ட காலம் உயிர் வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை. அதாவது முன்பே இறப்பவர்களைவிட பாக்கியசாலிகள்.

ஐம்பது அல்லது அறுபது வயதை அடைந்து அவர்கள் மேற்கொண்ட வாழ்க்கை மெல்லத் தேயும் நிலையில் உள்ளவர்கள் தங்கள் வாழ்நாள் எவ்வளவு என்பதைப்பற்றி ஒருமுறை சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இன்னும் ஐந்து, ஆறு ஆண்டுகள் மட்டுமே உள்ளது என்று நீங்கள் நினைக்க மாட்டீர்கள் அல்லவா? அப்படி நினைப்பது கொடுமையானது. தங்கள் வாழ்நாளைப் பற்றி பலர் நம்பிக்கையின்மையுடன் இருக்கிறார்கள். இன்னும் பத்து ஆண்டுகள் மட்டுமே வாழப் போகிறோம் என்றால் புதிய எதையும் தொடங்குவதில் பயனில்லை என்று எண்ணுகிறார்கள்.

இருப்பினும் உங்கள் வாழ்நாளை நீட்ட நினைக்குமாறு

கேட்டுக்கொள்கிறேன். நூற்றிருபது ஆண்டுகள் வாழ்வதற்கான திட்டங்களை நீங்கள் தீட்ட வேண்டும். குறிப்பாக இது நடுத்தர வயதினருக்குப் பொருந்தும். இப்படிச் செய்தால் என்ன செய்யவேண்டும் என்பது தெளிவாகத் தெரியும். எடுத்துக்காட்டாக, இப்போது அவர்களுக்கு அறுபது வயது என்றால், அவர்களுக்கு இன்னும் ஆயுட்காலம் அறுபது ஆண்டுகள் உள்ளன, அதற்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பதற்கு திட்டம் தீட்ட வேண்டும்.

வாழ்க்கையில் எந்தக் குறிக்கோளும் இல்லாமல் வாழ்வதா? இன்னும் அறுபது ஆண்டுகள் வாழ்ந்தால் ஒரு குழந்தை புதிதாக ஒரு வாழ்க்கையைத் தொடங்குவதற்கு சமம் ஆகும். இன்னும் பத்து ஆண்டுகளில் அவர்கள் இளைஞர்கள் ஆகி அதன்பிறகு வயதுவந்தவர்கள் ஆவார்கள். தொண்ணூறுவயதை எட்டும்போது வாழ்க்கையில் வசந்தத்தை அனுபவிப்பார்கள். பிறகு நூறு வயதில் அதையே தொடர்வார்கள். இன்னும் என்னென்னவோ இனி மேலும் நடக்க இருக்கிறது. எனவே அவற்றைப்பற்றி இப்போதே நினைக்கத் தொடங்க வேண்டும். துரதிருஷ்டவசமாக அவர்கள் ஆன்மிக இளம் வயதில் இறக்க நேர்ந்தால், அதாவது தொண்ணூறு வயதில் இறந்தால், வருத்தப்பட என்ன இருக்கிறது? ஒன்றுமே இல்லை.

நீண்டகாலம் வாழப்போவதில்லை என்று நினைப்பவர்கள் தங்கள் பார்வையை முற்றிலும் மாற்றிக்கொண்டு நூற்று இருபது ஆண்டுகள் வாழ்வதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டும். அறுபதுகளில் வாழும் மனிதர்கள் இவ்வாறு நினைத்தால் இன்னும் அவர்களுக்கு அறுபது ஆண்டுகள் இருக்கின்றன என்று பொருள். தங்கள் திட்டத்தில் ஏதும் மாற்றம் இல்லை என்றால், இந்த உலகில் என்னுடைய வாழ்க்கை இன்னும் பத்து ஆண்டுகள் அதிகம் இருப்பதால் தொடர்ந்து படித்துக்கொண்டே இருக்கலாம். அவர்கள் அதிர்ஷ்டசாலிகள். என்னுடைய பேச்சுக்கள் மற்றும் இறைவனைப் பற்றிய புத்தகங்கள் அனைத்தையும் இவ்வுலகை விட்டுப் போவதற்கு முன்பு படித்து முடித்துவிடலாம்.

தற்போது உங்கள் வயதை நினைத்துப் பார்த்து அதன்பிறகு, இதைவிட நீண்ட ஆயுளுக்காகத் திட்டமிடுங்கள். இவ்வாறே நீங்கள் உங்கள் எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

9. முயற்சியினால் வாழ்நாளைக் கூட்ட முடியும்

முயற்சியினால் உங்கள் வாழ்நாளைக் கூட்ட முடியும் என்பது உண்மை. ஒருவரின் ஆயுட்காலம் என்பது குறிப்பிட்டது மட்டுமே என்று சொல்வார்கள். ஆனால் இது நூறு சதவிகிதம் உண்மை அல்ல. உங்கள் வாழ்நாளில் புதிய கட்டங்களுக்காக எத்தனையோ திருப்புமுனைகள் உண்டு. ஓரளவுக்கு இவை முன்னரே முடிவு செய்யப்பட்டவை. எத்தனையோ திருப்பு முனைகள் ஏற்பட்டிருக்கலாம் - எடுத்துக்காட்டாக, ஐம்பத்து ஐந்தில், எழுபதில், எழுபத்தி ஐந்தில், எண்பது வயதில் மற்றும் பல. ஆனால் இவை எல்லாம் வானிலை முன்னறிவிப்பில் கூறுவதைப் போல நடக்கலாம் என்பதின் அடிப்படையே ஆகும். எண்பது சதவிகிதம் அல்லது ஐம்பது சதவிகிதம் உறுதியாக அறுபது சதவிகிதம் நடக்கலாம். ஆனால் நிலையானது அல்ல. இந்தத்திருப்புமுனைகளில் உங்களுடைய சிந்தனைகளில் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடிந்தால், உங்கள் ஆயுட் காலத்தை நீட்டித்துவிட முடியும்.

நீங்கள் ஏன் இந்த உலகத்தில் இருக்கவேண்டும் என்பதற்குக் காரணம் காட்ட முடியும் என்றால், உங்கள் வாழ்நாளை நீட்டிக்கலாம். இல்லையென்றால், நீங்கள் போயே ஆகவேண்டும் என்பதற்கு நம்பும்படியான காரணம் காண்பிக்க முடியும் என்றால், இந்த பூமியில் இருப்பதற்கு அனுமதிக்கப்படும். எனவே நீங்கள் மேலும் நீண்ட நாட்கள் தொடர்ந்து வாழ்வதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும். பொதுவான காரணம், இன்னும் நிறைய முடிக்க வேண்டிய வேலைகள் இருக்கின்றன, அதற்கான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்பதாகும்.

இளமைக் காலத்தில் இருப்பவர்களுக்கு என்னுடைய அறிவுரைகள் தேவை என்று நினைக்கிறேன். ஆனால் எது முக்கியம் என்று நான் குறிப்பிட வேண்டுமானால், நீங்கள் விரும்பும் நூற்று இருபது ஆண்டுகள் வாழ்நாள் ஆகும். இந்த வயது வரை நீங்கள் வாழ வேண்டும் என்று முடிவெடுத்தால், உங்களிடம் உள்ள பல கவலைகள் காணாமற் போய்விடும். நீங்கள் எதை மட்டும் செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்துவிடும். சிறிது சிறிதாக அவற்றை முடிப்பதற்கு முயற்சி செய்வீர்கள். உங்கள் வாழ்க்கை முடியும் நிலையில் இருந்தாலும் அல்லது நீங்கள் பாதிவழியில் இருந்தாலும் நீங்கள் தொடர்ந்து முன்னேற முயல வேண்டும்.

நீங்கள் இன்னமும் இருபது வயது பிராயத்தில் இருந்தால், நீங்கள் நிறைய வேலை செய்ய வேண்டியிருக்கும். உங்களுக்கு நூறு ஆண்டுகள் இருக்கின்றன என்றால், உங்களிடம் எஞ்சியுள்ள ஆண்டுகளை நிரப்புவதற்கு நிறைய திட்டமிட வேண்டியிருக்கும். நூறாண்டு காலம் என்பது ஒரே ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிகம். எனவே இளைஞர்கள் பல்வேறு பாதைகளில் செல்ல பல திட்டங்களை தங்கள் வாழ்நாளில் தயாரிக்க வேண்டும். நூறாண்டு வாழ்நாளை அனுபவிக்க பலவிதமான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

வாழ்க்கை ஒரு வாண வேடிக்கை போன்றது. ஒரே வாணவேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தால் அலுத்துப் போகும். இரண்டு, மூன்று, நான்கு தயாரித்து அதற்கு இடையில் ஒரு ராக்கெட் வெடி இருந்தால் அற்புதமாக இருக்கும். எதிர்காலத்திற்காக பல திட்டங்களைத் தயாரிப்பது முக்கியம். காலப் போக்கில் முப்பது, நாற்பது, அல்லது அறுபது வயது வரும்போது உங்கள் வாழ்வு பூத்துக் குலுங்க ஆரம்பிக்கும். அதனால் நீங்கள் பலவிதமான விதைகளை விதைக்க வேண்டி வரும்.

இவ்வாறு செய்தால், உங்கள் அறிவையும் புரிதலையும் பலப்படுத்திக் கொண்டு மேலும் உங்களை உயர்த்திக் கொள்வீர்கள். உடனே பயன்படுத்தக்கூடிய தகவல்களை மட்டும் திரட்டி வைத்தால் அது உங்களை உயர்த்தாது. ஏனெனில் வாழ்க்கையில் வழியில் வருவதை எல்லாம், அறிவுக் களஞ்சியமாகச் சேமித்து வைக்க முடியாது. ஆன்மாவைச் செம்மைப்படுத்துதல் என்பது தொடர்ந்து கற்றுக் கொள்வதாகும். வருங்காலத்தில் உங்கள் வாழ்க்கைக்கு உதவினாலும் இல்லாவிட்டாலும் அதுவே உறுதியாக உங்களை வளப்படுத்துவதாகும். இத்தகைய செழுமையைப் பெற ஒரு மாபெரும் வாழ்க்கைத் திட்டம் முக்கியம்.

உங்கள் படிப்பு, அனுபவம், அறிவு மற்றும் கற்றுக்கொண்டது ஆகியவை உங்களுடைய வாழ்நாளில் நேரடியாகப் பயன்படாவிட்டாலும் எதுவும் வீணாவதில்லை. அடுத்த உலகுக்குத் திரும்பும்போது என்ன எடுத்துக்கொண்டு போகப் போகிறீர்கள் என்பதை என்னால் கூறமுடியும். உங்கள் வாழ்நாளில் கற்றுக் கொண்டவை அனைத்தும் முருக்கும். ஏனென்றால், நீங்கள் அனைத்தையும் உள்வாங்கிக்

கொண்டீர்கள். நீங்கள் உயிருடன் இருக்கும்போது உங்களுக்குப் பயன்படாமல் இருக்கலாம். ஆனால் தொலைநோக்கில் பார்த்தால், ஒரு வாழ்க்கையில் இவ்வளவு கற்றுக் கொண்டோம் என்ற திருப்தி இருக்கும்.

பகுதி
3

வாழ்க்கையும் வெற்றியும்

3

வாழ்க்கையும் வெற்றியும்

1. ஒரு தத்துவம் எப்போது ஒளியைப் பரப்புகிறது?

நான் மூன்றாம் பகுதியை "வாழ்க்கையும் வெற்றியும்" என்று பெயர் சூட்டி இருக்கிறேன். வாகை சூடும் சிந்தனை என்னும் இந்த நூலில் ஒரு முக்கிய கருத்து என்னவென்றால், இது தெளிவாக இல்லாத கோட்பாடு அல்ல. ஏனென்றால், வாழ்க்கையில் தொடர்ந்து வெற்றி பெற இது ஒரு பயன்படுத்தக் கூடிய கையேடு என்பதாகும்.

நீங்கள் ஒரு கடினமான சிக்கலை எதிர்கொள்ளும்போது நடைமுறைக்குரியதாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்துகொள்ள விரும்புவீர்கள். பலர் இத்தகைய கேள்விகளுக்கு விடை கேட்பீர்கள் - "நான் என்ன செய்ய வேண்டும்?" "நான் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது?" பிரச்சினைகள் தீர்ந்ததும், உங்கள் பெரும்பாலான கவலைகள் மறைந்துவிடும். உங்கள் வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்குப் போய்விடுவீர்கள் வாழ்க்கையில் தொடர்ந்து நம்பிக்கையுடன் முன்னேறுவீர்கள்.

இந்தக் காரணத்திற்காகவே தத்துவம் அல்லது நடைமுறையில் உண்மை என்னும் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை நான் குறைத்து எடைபோடமாட்டேன். இந்நூலின்மையக்கருத்தானது, அன்றாட நடைமுறை விஷயங்களைப் பற்றியதானாலும், மக்களுக்கு மகிழ்ச்சி மற்றும் வீடு பெறுதலும் கிடைக்குமானால், அந்த அளவுக்கு மிக நல்லதுதான். சித்தாந்த அடிப்படையில் செயல்படுதல் மட்டுமே என்பது என் நோக்கம் அல்ல. ஒரு சித்தாந்தம் பல தரப்பு மக்களைக் காப்பாற்றுவதற்கு வழிகாட்ட முடிந்தால் அதுவே ஒளிரும் என்று நான் நம்புகிறேன்.

வாழ்க்கையில் வெற்றிபெறத் தேவையான, குறைந்த எண்ணிக்கையிலாவது தடங்கல்களைத் தாண்டும் வழிகளைக் கற்று, நீங்கள் வல்லவர் ஆவதற்கு நூலின் இந்த பகுதியில் நான் யோசனை கூற விரும்புகிறேன். அடியிற்கண்ட தலைப்புகளைத் தந்து உள்ளேன். “உடல் நலத்துடன் வாழ்வது எப்படி?”, “செல்வத்தை உருவாக்குவது”, “வீடும் துணைவரும்”, “உங்கள் விதியை மாற்றும் சவால்கள்”, “ஆன்மிகம் என்னும் தொன்மை மரபு” என்பதைப்பற்றி படிப்படியாக விளக்குவேன்.

இந்த மையக்கருத்துக்கள் மூலம் வாழ்க்கையில் வெற்றிக்கான அனைத்தையும் தெரிந்து கொள்ளமுடியாது. இருப்பினும் அடிப்படையான பிரச்சினைகளை வெல்வதற்கான கட்டத்தை அடைய இவை சாத்தியமாக்கும். நான் தரும் எடுத்துக்காட்டுக்களில் உள்ள கோட்பாடுகளை எந்த அளவுக்கு நடைமுறையில் செயல்படுத்தப் போகிறீர்கள்? அவற்றை ஒரு முக்கிய தூணாக நிறுத்தி அதைச் சுற்றி உங்கள் அனுபவங்களை உருவாக்கப் போகிறீர்களா என்பது எல்லாம் உங்களைப் பொறுத்ததே.

2. உடல்நலத்துடன் வாழ்வது எப்படி?

1) உடல்நிலை மனதைக் கட்டுப்படுத்துகிறது

உடல்நலத்துடன் வாழ்வது எப்படி என்பதைப்பற்றி கூறத் துவங்குகிறேன். வாழ்க்கையில் வெற்றி என்று சிந்திக்கும்போது உடல்நலம் என்னும் தலைப்பைத் தவிர்க்க முடியாது.

நான் நூற்றுக்கும் மேலான நூல்கள் எழுதியுள்ளேன். மனம் சம்பந்தமான பிரச்சினைகளை, பல்வேறு கோணங்களில் அலசி உள்ளேன். தனி மனிதன் என்பதைத் தாண்டி மாபெரும் பிரபஞ்சத்தின் மனம் வரையில் விவாதித்துள்ளேன். இவ்வாறு நிறைய பெரிய மையக் கருத்துகள் இருந்தாலும், இவை அனைத்தும் தனி மனிதனிடமிருந்தே தொடங்குகிறது.

அடிப்படையில் எல்லா மனிதர்களுக்கும் ஆன்மிக உணர்வு உண்டு. அதே சமயத்தில் நாம் இப்போது மூன்று பரிமாணங்கள் கொண்ட உலகத்தில் (இந்த உலகத்தில்) இருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது. நாம் அனைவரும் உண்மையான உலகத்தைச் (வேறுஉலகத்தைச்) சார்ந்தவர்கள் என்பதாலும் அதுவே நம் உண்மையான நிலை என்றாலும், நாம் இங்கு

வாழ்வதற்காக, பொருத்தமான உருவத்துடன் இருக்க வேண்டியுள்ளது.

இதைச் சொல்லும்போது இந்த பூதவுடலின் வாயிலாகவே நம்மை வெளிப்படுத்த வேண்டும். ஆவிகள்கூட இந்த உலகத்தில் இருக்கும்போது ஏதாவது ஒரு மனித உடலையே பயன்படுத்த வேண்டியுள்ளது. அவற்றின் பிரகாசமான ஒளி மூலம் எதையும் தெரிவிக்க முடியாது. நமக்கு ஒளியைத் தந்தாலும் வாய் மூலம் பேச வேண்டும். கண்கள் மூலம் வேண்ட வேண்டும். மூளையைப் பயன்படுத்தி நினைத்ததை எழுத முடியும். ஆகவே அவர்களையும் உடல் உருவம் என்பது கட்டிப் போடுகிறது. எங்கள் இன்ஸ்டிடியூட் ஃபார் ரிசர்ச் இன் ஹ்யூமன் ஹேப்பினஸ் நிறுவனத்தின் போதனைகள்கூட மனித உடல் என்பதை மறுப்பதில்லை. பொருள் என்று ஏதும் இல்லை என்ற காரணத்துக்காக மனித உடலைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று நாங்கள் சொல்வதில்லை. முப்பரிமாண உலகத்தைப் பற்றியும், பூமியில் வாழும் மனிதர்கள் எப்படி வாழவேண்டும் என்பதைப் பற்றியும், மனித உடல் தொடர்புள்ள விஷயங்களை நாம் புறக்கணிக்க முடியாது என்றும், சொல்லித் தருகிறோம்.

குறிப்பாக மனத்தைப்பற்றி பேசும்போது நம் அனைவரையும் பாதிக்கும் ஆன்மிக அனுபவங்கள் பற்றி அலட்சியம் செய்ய முடியாது. எதிர்மறையான ஆன்மிக அனுபவங்களை எப்படி வெற்றி காண்பது என்பது, ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கிய பிரச்சினை ஆகும். ஆழ்ந்த தியானம் என்பது ஒரு பலன் தரும் யுக்தி ஆகும். ஆழ்ந்த தியானத்தைத் தொடங்குவதற்கு தரும் முன்பு மனம் என்பது தனியாக இயங்குவது அல்ல, வேறு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நிபந்தனைகளுள் ஒன்று, மனித உடல் என்பது. அதன்மீது உங்களுக்கு முழுமையான கட்டுப்பாடு இல்லை என்றால், மனத்தின்மீது அழுத்தத்தை ஏற்படுத்தி, தவறான சைகளில் இழுத்துச் சென்றுவிடும்.

2) மனித உடலைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்

உங்கள் உடல் என்பது நீங்கள் நன்றாக ஓட்டக் கற்றுக்கொண்ட மிதிவண்டி போன்றது. முதன்முதலில்

மிதிவண்டிமீது ஏறி உட்கார்ந்தபோது எப்படி இருந்தது என்று நினைவிருக்கிறதா? இப்படி விசித்திரமான கருவியை, எப்படி ஓட்டப் போகிறோம் என்று குழம்பியிருப்பீர்கள்.

நீங்கள் குழந்தையாக இருக்கும்போது பயிற்சிக்கான சிறு சக்கரங்கள் இணைக்கப்பட்ட மிதிவண்டியை ஓட்டியிருப்பீர்கள். பின்சக்கரத்தின் இரு பக்கத்திலும் பொருத்தப்பட்ட இச்சக்கரங்கள் மிதிவண்டியை ஒரு நிலையில் வைத்திருந்து உங்களுக்கு ஓட்டுவதற்கு உதவியாக இருந்திருக்கும். இச் சக்கரங்கள் பொருத்திய மிதிவண்டி மிகவும் நிலையாக இருப்பதுபோல் தோன்றும். ஆனால் இந்தப் பயிற்சி சக்கரங்களை எடுத்துவிட்டால், முன்னும் பின்னும் உள்ள இரண்டு சக்கரங்கள் கொண்ட இந்த மிதிவண்டி, நிலை குலைந்து ஓட்டுவதற்கே மிகவும் கடினமாகத் தோன்றும். எப்படி சமநிலையுடன் ஓட்டுவது என்பதே தெரியாது. சமநிலையில் இருப்பது என்பதே கடினமானது.

அதே நேரத்தில் மிதிவண்டியை மிதித்து முன்னே செல்லவேண்டும். இடப் புறமும், வலப்புறமும் பார்க்கவேண்டும். ஒரு சந்திப்பு வரும்போது எந்தப் பக்கம் போகவேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். மேடு வரும்போது சக்தியைப் பயன்படுத்தி மேலே போகவேண்டும். அடுத்த பக்கம் கீழே இறங்கும் போது தடை சாதனத்தைப் பயன்படுத்தி வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு பார்த்தால் மிதிவண்டியை நிலை யில்லாத அபாயகரமான கருவி என்று நீங்கள் நினைத்திருந்தால் ஆச்சரியப்படத் தேவையில்லை. இருந்தாலும் அன்றாடம் அதைப் பயன்படுத்தப் பழகிக் கொண்டால், உங்கள் உடலின் ஒரு விரிவாக்கம் போல், சிறிதும் கஷ்டப்படாமல் சவாரி செய்ய முடியும். மனித உடல்களும் அப்படித்தான். ஆரம்பத்தில் கட்டுக்குள் கொண்டு வருவது கடினம். ஆன்மாவிற்குள் அடைந்து கிடப்பதுபோல் தோன்றும். இருப்பினும் உடலைக் கட்டுப்படுத்த கற்றுக்கொண்டால், அடைந்து கிடக்கும் உணர்வு மெல்ல மறைந்துவிடும். நீங்கள் எவ்வகையிலும் அசைய முடியும் என்பதைக் கண்டு பிடித்துவிடுவீர்கள். உடல் உங்களின் ஒரு பகுதி ஆகிவிடும்.

இதில் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், மிதிவண்டியைப்போல் எப்படி சவாரி செய்வது என்று தெரிந்துகொண்டால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் உங்களால் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டால், பெரிய ஆபத்தாக முடியும். இது எப்படி என்றால், ஒரு குழந்தை பெரியவர்கள் மிதி வண்டியை சவாரி செய்ய நினைத்தால், நிலை தடுமாறி அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆபத்தில் முடியும். தடை சாதனம் பிடிக்காமல் போனாலோ அல்லது கைப்பிடி சாதனம் வளைந்திருந்தாலோ மிகவும் ஆபத்து. உடலும் அப்பேர்ப்பட்டதே ஆகும்.

நான் என்ன சொல்ல முயல்கிறேன் என்றால் உடல் நலத்தை யார் பேணி வைத்திருக்கிறார்களோ, அவர்கள் வாழ்க்கையில் வெற்றியின் முதல் அடியை எடுத்து வைத்துவிட்டார்கள் என்று கூறலாம். அதற்கு இரண்டு வழிகள் கிடையாது. உங்களால் தனிப்பட்ட முறையில் உங்கள் உடல்நலத்தைப் பேண முடியும். உடல்நலம் பேணுவது என்பது மிதிவண்டியைப் பாதுகாப்பதைப் போல். கைப்பிடி சாதனம் வளைந்திருக்கிறதா, தடை செய்யும் சாதனம் நன்றாகப் பிடிக்கவில்லையா, சக்கரத்தில் காற்று இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். நீங்கள் எச்சரிக்கையாக இருந்தால், பலவித விபத்துக்களைத் தவிர்க்க முடியும். மிதிவண்டியில் டயர் ஓட்டையாகி இருந்து “அதனால் என்ன? பரவாயில்லை, எல்லாம் சரியாகிவிடும்” என்று கவனிக்காமல் விட்டுவிட்டால், அவசியம் ஏற்படும்போது பயன்படுத்த முடியாது. தடை சாதனம் என்பதும் அதைப் போன்றதே. நீங்கள் நினைக்கலாம் “நிறைய கார்கள் இங்கு இல்லை. எனவே நான் சமாளித்துவிடுவேன்” என்று. ஆனால், திடீரென்று ஒரு கார் உங்கள் எதிரில் வந்தால் என்ன செய்ய முடியும்? உடலும் அதுபோலத்தான் இருக்கும்.

3) உடலைப் பாதுகாப்பது என்பது ஒரு தனி மனிதனைப் பொறுத்தது

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தால், உடல் நன்றாக உழைத்து இலக்கை அடைவதற்கு வேலை செய்யும். நீங்கள் உடலைப் பேணாமல் விட்டுவிட்டால், நீங்கள் பிறர்மீது பழிசுமத்த முடியாது. நீங்கள் மட்டுமே அதைப் பாதுகாக்க வேண்டும். உடலைப் பாதுகாப்பது என்பது உங்கள் தனிப்பட்ட வேலை ஆகும்.

ஜப்பானிய தற்காப்பு படையைச் சேர்ந்த முன்னாள் அதிகாரி ஒருவர் எப்படி அவருடைய வீரர்கள் விமானத்திலிருந்து

இறங்கும் குடை (பாரசூட்) பயிற்சி பெற்றார்கள் என்று விளக்கினார். முதலில் ஐம்பது அடி உயரத்திலிருந்து குதிக்கும் பயிற்சியும், அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான அடிகள் உயரம் கொண்ட கோபுரத்திலிருந்தும் அடுத்து கடல்மட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான அடி உயரத்தில் பறக்கும் விமானத்திலிருந்தும் குதிக்கும்போதும் ஒரு குறிப்பிட்ட உயரம் இறங்கும்போது, பாரசூட் குடைகள் திறந்துகொண்டன. ஒவ்வொரு வீரரும் தன்னுடைய குடையை சரிவரப் பராமரிக்க வேண்டும். அது திறக்காமல் போனால் அவன் உயிர் இழக்க நேரிடும். எனவே அந்த வேலையை வேறு எவரிடமும் ஒப்படைக்க முடியாது. சரியாகப் பராமரிக்க தவறியதால் குடை திறக்கவில்லை என்றால், அவன் யார் மீதும் பழி சுமத்த முடியாது. குடை திறக்காததற்கு வேறு யாராவது காரணம் என்றால், வீரர்கள் யார் மீதும் குறைகூற முடியாது.

இந்தக் குடை சம்பந்தமான உதாரணம் சற்று வித்தியாசமானது என்றாலும் நீங்களும் அதைப்போன்ற நிலையில் இருக்கிறீர்கள். குடை உதாரணத்தை மேலும் விவரித்தால், உங்கள் ஆன்மா என்பது வீரரைப் போலவும் உங்கள் உடல் குடையைப் போன்றும் தோன்றும். குடை கிழிந்து போனாலோ, அல்லது திறக்க முடியாமல் போனாலோ, அது ஒரு பேரிழப்பாகும். அதேபோல், உடல் காயம்பட்டாலோ, அல்லது குறைபாட்டுடன் இருந்தாலோ, அவை எதிர்பார்த்தது என்றாலும் இல்லாவிட்டாலும், ஆன்மாவுக்கு அதைத் தாண்டிவருவது கடும் சோதனை ஆகும். குறைந்த பட்சம், உங்கள் உடலை ஆபத்திலிருந்து பாதுகாத்து வைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்களை எதிர் மறையாக பாதிக்கும். அதற்கு பழியை நீங்களே ஏற்க வேண்டும். நீங்கள் ஆத்மாவின் எந்தப் பகுதியிலிருந்து பிறந்து இருந்தாலும் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. மீண்டும் உயிர்த்து வந்த ஒளியின் தேவதைகள்கூட உடல்நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளாவிட்டால், நோய்வாய்ப்பட்டு விடும். இது உலகின் மாற்ற முடியாத விதி ஆகும். டயரில் ஆணி ஏறிக்கொண்டால், ஓட்டை விழுந்துவிடும். அதேபோல், உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து, ஓய்வு மற்றும் கவனிப்பு தராவிட்டால், உடலும் வேலை செய்யாது.

தொழில் ரீதியாக ஆடும் ஆட்டக்காரர் உருளை மட்டைப்பந்து (பேஸ்பால்) என்னும் விளையாட்டில் தொடக்க ஆட்டக்காரராக

அன்றாடம் ஆடினால் எவ்வளவுதான் பயிற்சி பெற்றவராக இருந்தாலும் ஒரு ஆண்டுக்கு மேல் தாங்க மாட்டார். ஏனென்றால் தங்கள் விளையாடும் வாழ்க்கையைத் தொடர விரும்பினால் இரண்டு ஆட்டங்களுக்கு இடையில் குறைந்தது நான்கு நாட்களாவது ஓய்வு தேவை. உருளை மட்டைப் பந்தைப்பற்றி பேசும்போது அனைவருக்கும் புரியும். ஆனால் தனி மனிதனைப் பற்றி நம்மில் பலருக்கு இது தெரியாது.

உங்களால் எவ்வளவு வேலை செய்ய முடியும், எவ்வளவு ஓய்வு தேவை, உடலை நல்ல நிலையில் பராமரிக்க நீங்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வது மிகவும் கடினம். இது பள்ளியில் நீங்கள் படிப்பது அல்ல. மனதைப் போலவே உடலைப் பாதுகாப்பது என்பது தனி மனிதன் கைகளில் இருக்கிறது. சில நேரங்களில் உங்கள் குடும்பத்தினர் உடலை உறுதியாக வைப்பதில் உதவி செய்யலாம். ஆனால் அடிப்படையில் மற்றவர்கள் துணை இல்லாமல், நீங்களே இதைச் செய்ய வேண்டும்.

4) உடலுக்கும் மனதுக்கும் உள்ள உறவு

வயது ஏற ஏற மக்கள் குறைகூறத் தொடங்குகிறார்கள். ஐம்பது அல்லது அறுபது வயது நிரம்பியவர்கள் இதுவரையில் நடந்தது குறித்தும், இனி வருங்காலத்தில் என்ன நடக்கும் என்பது பற்றியும் கவலைப்படுவது ஒரு சாதாரண நிகழ்ச்சியே ஆகும். இது ஒரு மனம் தொடர்பான பிரச்சினை என்று நினைக்கலாம். அப்படி என்றால் வயது அதிகமாகும்போது மட்டும் அவர்களை ஏன் பாதிக்கிறது? இதற்கு முக்கிய காரணம், முன்பு இருந்ததைவிட இப்போது அவர்கள் உடல்கள் தளர்ந்துவிட்டன.

வயது ஏறும்போது கால்கள் பலம் குன்றுகின்றன. முன்பு இருந்ததுபோல் அவர்களால் சுற்றி வர முடிவதில்லை. முன்கோபமும் முணுமுணுப்பும் தொடர்ந்து அதிகமாவதால், சுற்றி உள்ளவர்களுக்குக் கூட இவர்களுடன் வாழ்வது மேன்மேலும் கடினமாகிவிடுகிறது. இறுதியில் குடும்பத்திலேயே பல பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. அடிப்படைக் காரணம் மிகவும் சாதாரணமானது. ஓய்வு பெற்றபிறகு தங்கள் உடலுக்கு பயிற்சி தரத் தவறிவிட்டார்கள். அது மனதளவில் பிரச்சினையை உண்டாக்கி விட்டது. இது ஒரு மனிதனின் பிரச்சினை மட்டுமல்ல. இது முழு குடும்பத்துடன்

தொடர்புடையது என்பதால் நிலைமை மோசமாகிவிடும். அடிப்படையில், ஓய்வுக்குப் பிறகு தங்கள் உடலுக்கு மிகக் குறைவான வாய்ப்பு மட்டுமே கிடைத்ததால், இதை அவர்கள் வேறு வழிகளில் ஈடுகட்ட ஒன்றுமே செய்ய வில்லை.

இளைஞர்களுக்குக்கூட உடல் சம்பந்தமான பிரச்சினைகள் வருவதுண்டு. சிலர் நிறைய சாப்பிடுகிறார்கள். சிலர் மிகவும் மெலிந்துபோய் நோயாளிபோல் தோற்றமளிக்கிறார்கள். இரண்டிற்கும் காரணம் எப்படி சமச்சீர் வாழ்வு வாழ்வது என்பதை மறந்துவிட்டார்கள். இன்னும் சிலருக்கு கேக் என்றால் உயிர். அன்றாடம் இரண்டாவது கேக் சாப்பிடுவதில் மட்டுமே உண்மையான மகிழ்ச்சி இருப்பதாக நினைக்கிறார்கள். குண்டாவதைத் தவிர்க்க மற்ற உணவுகளைத் தவிர்த்து விடுகிறார்கள். அதன் விளைவாக அவர்கள் உடல்நலம் குன்றிவிடுவதில் வியப்பொன்றுமில்லை. இருந்தும் அவர்கள் தங்கள் நடத்தையைத் தொடர்கிறார்கள்.

அவர்கள் எப்படி உணர்கின்றார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் மீண்டும் தங்களை மீட்டுக்கொள்ள முயல்வார்கள் என்று நம்புகிறேன். உடல்நலத்தைக் கெடுத்து தாங்களே நோயுற்றபோதும், அடுத்து வரும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு. கேக் மட்டும் சாப்பிட்டு உயிர்வாழ முடியாது. இன்னும் சத்தான உணவு தேவை. பற்கள் கெட்டுப் போகும் அளவுக்கு சாக்லேட் சாப்பிடும் மக்களுக்கும் இது பொருந்தும். இது மற்றவர்கள் தவறு அல்ல. அவர்கள் கடவுளைக் குறைகூற முடியாது. பற்கள் விழுவதற்குக் காரணமானவர் ஒருவர் மட்டுமே. அவரே நிறைய சாக்லெட் சாப்பிட்டவர் ஆவார்.

எனவே நீங்கள் பொறுப்பேற்று உங்கள் உடலைப் பேண வேண்டும். குறிப்பாக பயிற்சியும் இதில் அடங்கும். அதிக பயிற்சி வேண்டும் என்று எவரும் உங்களுக்கு சொல்லப் போவதில்லை. அதை எப்படி செய்ய வேண்டும் என்று எவரும் சொல்லித்தர மாட்டார்கள். உங்கள் உடல் மிகவும் மதிப்புள்ளது என்று உணர்ந்து பாதுகாக்க வேண்டும். உங்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப எந்தவிதமான பயிற்சி பொருத்தமானதோ, அவற்றைச் செய்ய வேண்டும். உடல் வலிமை பெற்றால், அந்த அளவுக்கு மனமும் உறுதி பெறும். உடல் உரமாக இருந்தால், ஆக்கபூர்வமாக இருப்பீர்கள். உடல் பலமிழந்தால் எல்லாவற்றிலும் தொடர்ந்து நம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள்.

உங்கள் உடல்நலம் நன்றாக இருக்கும்போது ஆக்கபூர்வமான சிந்தனையில் ஈடுபடுங்கள். நன்றாக இல்லை என்று தெரிந்தால், ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுங்கள். வெற்றிக்களிப்பில் இருக்கும் போதும் மகிழ்ச்சியில் ஓடிக் கொண்டிருக்கும் போதும் தியானம் செய்வது கடினம். அத்தகைய தருணங்களில் ஆக்கபூர்வமான சிந்தனையில் ஒருமுனைப்போடு இருங்கள். மாறாக சிறிது மனம் சோர்வடையும்போது நீங்கள் செய்ததைப் பற்றி அசைபோடுங்கள். அப்போது இரண்டு வித வழிமுறைகளிலும் வல்லுநர் ஆகிவிடுவீர்கள். உங்கள் உடல்நலத்தைப் பாதுகாப்பதுடன் இவற்றைப்பற்றி நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

3. செல்வத்தை உருவாக்குதல்

1) ஆன்மிகம் சார்ந்த விருப்பத்தினால் எழும் பிரச்சனைகள்

நான் அடுத்து பேசப்போகும் மையக் கருத்து செல்வத்தை உருவாக்குதல் என்பதாகும். ஆன்மிகம் சார்ந்த விருப்பம் உள்ளவர்கள் பலர், பணம் என்பதை எதிர்மறையான கோணத்தில் பார்த்து, செல்வத்தைச் சேர்ப்பது தவறு என்றும் நினைக்கிறார்கள். புத்த மதத்தையும் கிருஸ்துவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் இது பொருந்தும்.

சிந்திக்க வேண்டியது என்னவென்றால், ஒருவருடைய ஏழ்மையின் நிலை என்பது, எந்த அளவுக்கு செல்வம் சேர்ப்பது தவறு என்று நினைக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. செல்வத்தைக் குவித்தால், உறுதியாக மோட்சத்துக்குப் போகமுடியாது என்று நம்புபவர்கள், ஒருநாளும் பணக்காரர்கள் ஆகப்போவதில்லை. அதுமட்டுமே நம்பிக்கை என்றால் பெரிய பிரச்சினை இல்லை. ஆனால் பணக்காரர்களைப் பார்த்து பொறாமைப்பட்டாலும் அவர்களை விமர்சனம் செய்தாலும் அவர்கள் தங்கள் இதயத்தில் நரகத்தை உருவாக்குகிறார்கள் என்று பொருள். சுய கட்டுப்பாடு உருவாக்கும் இணக்கமின்மைக்கு இது ஓர் உதாரணம் ஆகும்.

பணத்தின்மீதோ அல்லது மற்ற ஆடம்பரப் பொருட்கள் மீதோ பற்று இல்லை என்றால் அது ஒரு நற்குணம் ஆகும். ஆனால் செல்வந்தர்களைப் பார்த்து அவர்களின் செல்வம் நரகத்தில் தள்ளிவிடும் என்று கூறினால் உங்கள் மனத்தை இருண்ட புகை

மறைக்கும். உங்களுக்குள் ஒரு நரகத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். இது விசித்திரமாக இருந்தாலும், இவ்வாறே நடக்கிறது. ஒருமுறை மற்றவர்களைக் குறைகாணும் மனோபாவத்தில் மாட்டிக் கொண்டால், நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இன்னொரு உதாரணம் எதிர்பாலார் பிரச்சினையினால் உருவாவது. ஆன்மிக நாட்டம் கொண்டவர்கள், பணம் மற்றும் ஆண்-பெண் உறவு ஆகியவற்றைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்டுள்ளார்கள். திருமணம் செய்துகொண்டால் மோட்சம் கிட்டாது என்று ஒருசாராரும், இப்படி நடக்கும் என்று நம்ப விரும்பும் மற்றொரு சாராரும் உள்ளனர். இவர்களுள் பெரும்பாலானோர் எவர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இத்தகைய மனிதர்கள் இருக்கின்றனர்.

2) மகிழ்ச்சிக்கு செல்வம் ஒரு வழி

செல்வத்தினால் எழும் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு, செல்வம் எதற்காக இருக்கிறது என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். செல்வம் என்பது பணம் மற்றும் மற்ற சொத்துக்கள் என்பதைக் குறிப்பிடுகின்றது. ஆனால், அவை எதற்காக இருக்கின்றன?

உண்மையான உலகில் இருக்கும் வளமையை விளக்குவதற்காக செல்வம் இருக்கிறது. உண்மையான உலகம் என்பது ஏழ்மையானது அல்ல. செல்வம் பல உருவங்களைக் கொண்டது. தூய்மையான உள்ளத்திற்கு எது வேண்டினாலும் கிடைக்கும் என்பது விதி ஆகும். உண்மையான உலகத்தில் வாழ்பவர்கள் தூய்மையில் வாழ்வதால், அவர்கள் வளமாக இருக்கிறார்கள். செல்வம் என்பதை உண்மையான உலகத்தில் எவ்வாறு விளக்கப்படுகிறதோ, முப்பரிமாண உலகத்தில் இல்லை. எனவே பணம் என்னும் சொல்லை பதிலுக்கு விளக்குவதற்குப் பயன்படுத்துகிறார்கள். செல்வம் என்பதே பணம் அல்ல. இருப்பினும் பணம் என்பது ஒரு சௌகரியமான வெளிப்படுத்தும் முறை ஆகும்.

பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் கேள்வி. செல்வத்தைப் பொறுத்தமட்டில் நன்மை-தீமை என்பது பயன்படுத்துபவர்களின் நோக்கங்களையும் எண்ணங்களையும் பொறுத்தது. எடுத்துக்காட்டாக, ஒரு கூடத்தைக் கட்ட

வேண்டுமானால், அதற்கு பணம் தேவை. கூடத்தைக் கட்டி மக்களுக்குப் பயன்படும் மாநாடுகளையும் கூட்டங்களையும் நடத்தினால், பணம் நல்ல வழியில் செலவிட்டதாகும். அவர்களுக்கு தேவை இல்லாதபோது, பிறருக்கு வாடகைக்குக் கொடுத்து, ஒரு வசதியை ஏற்படுத்தித் தர முடியும். மூலதனம் எவ்வாறு இடத்தை உருவாக்குகிறது என்பதற்கும், மக்களுக்கு மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் தருகிறது என்பதற்கும் ஓர் உதாரணம் ஆகும். இடத்தை உருவாக்குவதன் மூலம் பணம் மகிழ்ச்சியை உருவாக்குகிறது எனக் கூறலாம்.

செல்வம் பலரைத் தடுமாற வைக்கிறது என்பது வருத்தத்தைத் தரும் செய்தி ஆகும். உலகத்தை உண்மையிலேயே மேம்படுத்த விரும்பினால், மனத்தூய்மை உள்ளவர்கள் செல்வத்தை எப்படி பயன்படுத்துவது என்பதை மற்றவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். செல்வம் சரியான வழியில் உருவாகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய முடிந்தால், உலகம் நல்ல இடமாக அமையும். செல்வம் உலகத்தில் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன். செல்வம் என்பது நிறைய பேர்களுக்கு மகிழ்ச்சியைப் பெற்றுத்தரும் ஒரு வழி ஆகும்.

3) பொறாமையால் கறைபட்ட ஏழ்மை தவறானது

மற்றவர்கள் கொள்கைகளை உங்களால் மாற்ற முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். ஏழ்மையிலும் தூய்மை என்ற கொள்கையில் நம்பிக்கை இருந்தால், ஒருவரும் அதை எதிர்க்கமாட்டார்கள். உங்கள் கொள்கையின்படி நீங்கள் வாழ்வதாக இருந்தால், வாழுங்கள். அது ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட வாழ்க்கைமுறை. இருப்பினும் இவ்வாறு வாழும்போது மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படாதீர்கள்.

உண்மையான ஏழ்மை வாழ்க்கையில் திருப்தி அடைந்தால், அது ஒரு தனி மனிதனின் முடிவாகும். ஆனால் மற்றவர்களை ஒருபோதும் எடைபோடாதீர்கள். மக்களில் பலர், வாழும் வகைகளும் வெவ்வேறு சிந்திக்கும் வகைகளையும் வைத்திருக்கிறார்கள். நீங்கள் ஏழ்மையில் வாழ்வது என்று தேர்ந்தெடுத்துவிட்டால், எல்லோரையும் அவ்வாறே வாழ வேண்டும் என்று கட்டாயப்படுத்தாதீர்கள். பொறாமை மற்றும் சந்தேகத்தை எழுப்பாதீர்கள். இது மிகவும் முக்கியம்.

உண்மையான ஏழ்மையில் வாழ்வது என்ற முடிவில், பொறாமை என்னும் கறை படட்டுவிட்டால், உங்கள் ஏழ்மை எதிர்மறையான ஒன்றாக மாறிவிடும். உலகப் பொருட்கள் மீது உள்ள பற்றுதலை இது அகற்ற முடிந்தால், உங்கள் மனத்தின் அதிர்வுகள் தூய்மையாக இருந்தால், அப்போது ஏழ்மை என்பது ஒரு நற்குணம் ஆகும். ஆனால் ஏழ்மை, சந்தேகத்துக்கும் மற்றவர்களின் உலகியல் பொருட்கள் மீதும் பொறாமைக்கும் வழி வகுக்குமானால், உங்கள் இதயம் கறைபட்டுவிடும். ஏழ்மை என்பது தவறாகிவிடும்

இத்தகைய எதிர்மறை எண்ணங்கள் உங்களிடம் அல்லது மற்றவர்களிடம் இருப்பதைக் கண்டுபிடித்தால், அதைத் தோற்கடிக்க நீங்கள் போராட வேண்டும். ஏழ்மை உங்களைக் கட்டிப்போட்டிருந்தால், உங்கள் வாழ்க்கை துயரமானதாக இருந்து, அதனால் பிறர்மீது பொறாமைப்பட நேர்ந்தால் அதை விட்டு வெளியேற்ற நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

சிலர் தங்களிடம் பணம் நிறைய இருக்கிறது என்று கவலைப்படுகிறார்கள். பணம் இல்லாதவர்கள், அல்லது கடனில் கஷ்டப்படுபவர்கள், இவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தங்கள் இதயங்களில் இணக்கமான நிலை காணப்படும். போதுமான பணம் இருந்தால் கவலைப்படத் தேவையில்லை என்று சொல்லப்படுகிறது. நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். துன்பப்படாமல் வாழ்க்கை வாழ்வதற்கு, போதுமான பணம் இருப்பது நல்லது. இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் உங்கள் வாழ்க்கை துயரமாகவும் பொறாமை நிறைந்ததாகவும் இருக்கும்.

ஆதலால் நீங்கள் உண்மையான ஏழ்மை வாழ்வு வாழ விரும்பினால், மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படாதீர்கள். உங்களால் பொறாமைப் படாமல் இருக்க முடியாது என்றால் வறுமையிலிருந்து மீள்வதற்கு முயற்சி செய்யுங்கள். ஒரு குறிப்பிட்ட செல்வத்தைத் திரட்டுவதற்கு அதற்கான இலக்குகளை நிர்ணயித்து அவற்றை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

4) செல்வத்தை உருவாக்குவதற்கான மூன்று அடிப்படைக் கோட்பாடுகள்

செல்வத்தை உருவாக்குவதற்கு மூன்று கோட்பாடுகள் உள்ளன.

முதலாவது எப்போதும் உண்மை என்று கருதப்படும் சிக்கனம் என்பதாகும். அதாவது குறைவாக செலவு செய்தல் மற்றும் வீணாவதைத் தவிர்த்தல் ஆகியவை. இது ஒரு துவங்கும் இடம் மட்டுமே. நீங்கள் ஊதாரியாகவும் ஆடம்பர வாழ்க்கையும் வாழ்ந்தால், எவ்வளவு பணம் இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் செலவழித்துவிடுவீர்கள்.

“மூன்றாம் தலைமுறை மறுபடியும் ஆலைக்குக் திரும்பிப் போய்விடும்” என்று ஒரு பழமொழி உண்டு. முதல் தலைமுறையில் யாராவது ஒருவர் கடுமையாக உழைத்து தான் வேலை செய்யும் ஆலையை விலைக்கு வாங்கிவிடுவார். இரண்டாவது தலைமுறையினர், வியாபாரத்தை விரிவாக்குவார்கள். பிறகு மூன்றாம் தலைமுறையினர் நிறுவனத்தை திவால் ஆக்கி, மீண்டும் ஆலைத் தொழிலாளி ஆகிவிடுவார்கள். பெரும்பாலும் மூன்றாவது தலைமுறையினர் வாழ்க்கை முறை ஊதாரித்தனமாக மாறி, கடுமையாக வேலை செய்வதை மறந்து விடுவார்கள். அதன் விளைவு, பணத்தை விரயம் செய்துவிட்டு விரைவில் தங்களை அழித்துக் கொள்வார்கள். தனி மனிதன் வாழ்க்கைக்கும், பெரிய நிறுவனத்திற்கும் இது பொருந்தும். ஆதலால் சிக்கனம் - குறைவாக செலவிடுதலும் தேவைக்கேற்ப செலவு மட்டும் - மிக முக்கியம் என்பேன்.

செல்வத்தைஉருவாக்குவதற்கான இரண்டாவது கோட்பாடு பணம் எப்படி செலவு செய்வது என்று தெரிந்தவர்களிடம் மட்டுமே போய்ச் சேரும். வயல் நடுவில் திடீரென்று தோன்றாது ஆனால் பணம் எதற்காக என்று தெரிந்தவர்களிடம் வந்து சேரும்.

நிறைய பணம் வங்கியில் குவிகிறது. அதற்குக் காரணம் அதை மேலும் பெருக்குவது எப்படி என்று வங்கிகளுக்குத் தெரியும். அவர்களிடம் வரும் பணத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். தனிமனிதன் என்பவனும் அதே போலத்தான். எப்படி பயன்படுத்துவது என்று தெரிந்தவர்களிடம் பணம் குவியும். உதாரணமாக நீங்கள் உங்களுக்காக ஒரு வீடு கட்ட விரும்பினால், நீங்கள் அதற்கான பணத்தைப் பெறுவதற்கு கடுமையாக உழைப்பீர்கள். அல்லது உங்களுக்கு பல குழந்தைகள் இருந்து அவர்களுக்கு பல்கலைக் கழக படிப்பு தர வேண்டும் என்று நினைத்தால், அதை நிறைவேற்ற உங்கள் வருவாயைப் பெருக்க வேண்டும்.

இவ்வாறு பணத்தை சரியாக செலவு செய்யத் தெரிந்தவர்களிடம்

மட்டுமே பணம் வந்துசேரும். நீங்கள் செல்வந்தர் ஆக விரும்பினால் நீங்கள் எதற்கு பணத்தை செலவிட நினைக்கிறீர்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பது அவசியம். “இன்னின்ன காரணங்களுக்காக எனக்கு பணம் தேவை. எனவே நான் மேலும் செல்வந்தராக விரும்புகிறேன்” என்று நீங்கள் உங்களுக்கே சொல்ல வேண்டும். யாருக்குப் பணம் தேவையில்லை என்று நினைக்கிறார்களோ, அவர்கள் ஒருபோதும் செல்வந்தர் ஆக முடியாது. ஒருவேளை ஒரு குறிப்பிட்ட அளவு செல்வத்தை சேர்க்க முடிந்தாலும், அது மிகக் குறைந்த அளவே இருக்கும். உண்மையான செல்வம் என்பது யார், எதற்காக பணம் வேண்டும் என்பதைப்பற்றி தெளிவாகத் தெரிந்திருக்கிறார்களோ, அவர்களிடம் மட்டுமே, உண்மையான செல்வம் வந்தடையும்.

பணத்தைச் செலவு செய்யத் தெரிந்தவர்களைத் தேடி உலகம் முழுவதும் செல்வம் பெருகி வழிந்து ஓடுகிறது. அவர்கள் முன் வந்தால், பணம் அவர்களிடம் தானாகச் சென்றடையும். இப்படிப் பார்க்கும்போது பணம் என்பது உடலில் ஓடும் ரத்தத்தைப் போன்றது. எங்கு அதிகமாகத் தேவைப்படுகிறதோ, அங்கு சென்றடையும். உலகம் முழுவதும் பலரிடம் பணம் கொட்டிக் கிடக்கிறது, ஆனால் அதை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியவில்லை. யாராவது ஒரு புதிய கருத்தைச் சொல்லி அதன்மூலம் எப்படி பணத்தைப் பயன் படுத்துவது என்று சொன்னால், செல்வம் அவர்களைத் தேடி ஓடிவரும்.

ஒரு புதிய வியாபாரம் என்பது ஒரு நல்ல உதாரணம். மக்கள் ஒரு வியாபாரத்தைத் தொடங்கினால், தேவையான மூலதனம் சேர்வதைக் காணலாம். வங்கிகளும் பங்குதாரர்களும் வியாபாரத்தில் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர். எனவே உதவி பல திசைகளிலிருந்து வந்து சேருகிறது. நல்ல கருத்துக்களில் துவங்கி, மக்களின் இதயங்களைக் கவர்கிறது. பல இடங்களிலிருந்து சக்தியைப் பெறுகிறது. அதன்மூலம் செல்வம் பெருகுகிறது.

செல்வம் என்பது கருத்துக்கள் மற்றும் உற்சாகம் பொங்குபவர்களை நோக்கி, ஈர்க்கப்படுகிறது. அதாவது, அதை சரியாகப் பயன்படுத்துகிறவர்களிடம் சென்றடைகிறது. செல்வத்தை எப்படி பயன்படுத்துவது என்பதைப்பற்றி உயர்ந்த எண்ணங்கள் தேவை.

மூன்றாவது கோட்பாடு “மனம் தொடர்பான விதிகள்” என்பதைப்

போலவே இருக்கும். "கொடுக்கும் மக்கள் பெறுவார்கள்" என்பதாகும். நீங்கள் செல்வத்தை சேகரிப்பதில் வெற்றி கண்டால், அது உங்களுக்கு மட்டுமே ஏகபோக உரிமை என்று நினைக்கக் கூடாது. உங்களிடம் உள்ள செல்வத்தை செலவழித்து மற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றி, அவர்களுக்கு மகிழ்ச்சியைப் பெற்றுத் தந்தால், செல்வம் என்பது சுழற்சியில் உங்களிடம் வந்து சேரும். உங்களிடம் உள்ள பணத்தை உங்களுக்கு மட்டுமே, உங்கள் நலத்துக்கு மட்டுமே செலவு செய்தால், படிப்படியாகக் காணாமல் போகும். ஆனால் அதையே எத்தனை பேர்களுக்கு முடியுமோ அத்தனை பேர்களுக்காக செலவிட்டால், அது மேலும் வளர்ந்து பன்மடங்காகப் பெருகும்.

அமெரிக்காவின் மாபெரும் மோட்டார் தயாரிப்பாளரான ஹென்றி ஃபோர்டு தன்னுடைய வாழ்நாளில் அளவற்ற செல்வத்தைச் சேர்த்தார். அது எப்படி முடிந்தது என்றால், ஒவ்வொருவரும், அலுவலக ஊழியரும், கூலி வேலை செய்பவரும், சொந்தமாக ஒரு கார் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கனவு கண்டார். அதற்காக அவர் ஒரு காரைத் தயாரித்தார். தங்களுடைய கூலியிலிருந்து சேமித்து ஓராண்டு காலத்திற்குள் எல்லோரும் ஒரு கார் வாங்க வேண்டும் என்று விரும்பினார். அவர் கனவு உண்மையானது.

இந்த நூலின் முதல் பகுதியில் கோனேசுக்கே மட்சூஷிட்டாவைப் பற்றி பேசியிருந்தேன். அவர் பரிந்துரைத்தது "குழாய்த் தண்ணீர் தத்துவம்" என்பதாகும். தண்ணீர் இலவசம் இல்லை என்றாலும், எடுத்து மாளாத அளவுக்கு இருந்தாலும், இது உண்மை போலத் தோன்றியது. முற்றிலும் புதியவர் ஒருவர் உங்கள் வீட்டு எதிரில் உள்ள குழாயிலிருந்து தண்ணீர் குடித்தால், அவரைத் திருடன் என்றோ அல்லது உங்கள் தண்ணீரைத் திருடிவிட்டான் என்றோ நினைக்க மாட்டீர்கள். தண்ணீர் இலவசம் இல்லை என்றாலும் உங்களுடைய அனுமதி இன்றி குடித்ததால், சட்டத்தின்படி அவனைத் திருடன் என்று கருத வேண்டும். ஆனால் தண்ணீர் மிகக் குறைந்த கட்டணத்தில் தரப்படுவதால், அது ஏறக்குறைய இலவசம் என்றே நினைக்கிறோம். யாரும் அவனைத் தண்ணீர் குடித்ததற்காக திருடன் என்று அழைப்பதில்லை. அவன் தானே எடுத்துக்கொண்டாலும், யாரும் தாங்கள் வழிப்பறி செய்யப்பட்டதாக நினைக்க மாட்டார்கள்.

மட்சூஷிட்டாவின் குறிக்கோள் வீட்டுக்குப் பயன்படும் மின்சார சாதனங்களை மலிவான விலையில் தயாரிப்பது என்பதாகும். தண்ணீரை நினைத்தது போல் இவற்றையும் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைத்தார். அதையே அவர் "குழாய்த் தண்ணீர் தத்துவம்" என்று குறிப்பிட்டார். அன்பின் அடிப்படையில் எழுந்த தத்துவம் அது. அவர் எதிர்பார்த்தது போலவே அவருடைய வணிக நிறுவனம், மலிவான மின் சாதனங்களைத் தயாரித்தது. அதன் விளைவு தற்போது அதன் வருமானம் ஒரு ஆண்டில் மட்டும் நூற்றுக்கணக்கான பில்லியன் யென்கள் ஆகும்.

அன்பும் செல்வமும், கொடுக்கும் இதயத்தை உடையவர்களுக்கு மட்டும் தரப்படுகிறது. அது சுழற்சியில் சுற்றி, கொடுத்தவரிடமே திரும்பி வந்து மேலும் செல்வத்தை அதிகரிக்க உதவும். எனவே அளவில்லாத வளர்ச்சி அடைவதற்கு, உங்களுடைய அன்பைப் பகிர்ந்து கொள்வது போல, செல்வத்தையும் பகிர்ந்து கொள்வது முக்கியம். உங்களுடைய பணத்தை, பிறருக்கு செலவு செய்வதன் மூலம் பலவழிகளில் பலருக்குப் பயன்படட்டும்.

செல்வத்தை அடைவதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. இருந்தாலும் நான் விளக்கிய மூன்று வழிகள் அடிப்படையானவை. முதலில், பணத்தை அளவோடு செலவு செய்யுங்கள். இரண்டாவது, செல்வத்தை எப்படி பயன்படுத்துவது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். மூன்றாவது, சேர்த்த செல்வத்தை மற்றவர்களுக்கு செலவிடத் தயாராக இருங்கள். இந்த மூன்று கோட்பாடுகளையும் பின்பற்றினால், உங்கள் செல்வம் தவறானது என்று கருத மாட்டார்கள். இவற்றைப் பின்பற்றும் வரையில் உங்களுடைய செல்வம் இறைவன் தந்த ஆசீர்வாதம் ஆகும். செல்வத்தைச் சேர்க்க முனையும்போது இவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். மேலும் செல்வத்தின் வாயிலாகப் பெறும் செல்வாக்கு தவறானது என்று கருதத் தேவையில்லை.

4. துணைவரும் வீடும்

1) உங்களையே தலைசிறந்தவராக ஆக்கத் தொடங்குங்கள்

மூன்றாவது மையக் கருத்தாக, "துணைவரும் வீடும்" என்பதைப்பற்றி கூற விரும்புகிறேன். சரியான துணைவரைத்

திருமணம் செய்து கொள்வது எப்படி என்பதில் துவங்குகிறேன். சிலர் இதைப்பற்றி ஐந்து, பத்து, ஏன் இருபது ஆண்டுகள் வரை கவலைப்படுகிறார்கள். ஆனால் வியப்புக்குரிய செய்தி என்னவென்றால், இதற்கு விடை காண்பது மிகவும் எளிதானது. நீங்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக தலைசிறந்த துணைவர் என்பவர் நீங்கள் தேடிப் பிடிப்பவர் அல்ல. உண்மையில் எவ்வளவு தீவிரமாகத் தேடுகிறீர்களோ, அவ்வளவு தூரம் தள்ளிப் போய்விடுவீர்கள்.

என் காதில் விழும் அளவிற்கு நீங்கள் எண்ணுவதை என்னால் கேட்க முடிகிறது. “இது உண்மையாக இருக்க முடியாது. முயற்சிக்கு எப்போதும் நல்ல பரிசு கிடைக்கும் என்று எப்போதும் சொல்வீர்கள். கேளுங்கள் கொடுக்கப்படும் என்பீர்கள். நாம் தேடிப் போனால் அது ஓடிப் போகுமா? இது ஒரு நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது.” யார் கேட்கிறார் களோ அவர்களுக்குக் கிடைக்கும். முயற்சிக்கு பரிசு கிடைக்கும் என்பவை எல்லாம் உண்மைகளே. ஆனால் நான் இப்பகுதியில் திருமணத்தைப்பற்றி பேசப் போகிறேன். இங்கு விதிகள் கொஞ்சம் மாறுபட்டவை. மேலும் கவனம் செலுத்திப் பார்த்தால், உங்களுக்கு திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற மன உறுதி இருந்தால், நீங்கள் அதை அடைவீர்கள். மிகச் சிறந்ததை நோக்கி முயற்சி செய்து ஓடினால், அது உங்களிடமிருந்து விலகிப்போகும் என்பதும் உண்மையே ஆகும்.

நாய்களும் பூனைகளும் தங்கள் வாலையே விரட்டிப் பிடிப்பதைப் போலாகும். பூனைக்குட்டி தன்னுடைய வாலைப் பார்த்துவிட்டு, அதைப்பிடிக்க முயல்வதையும், அது எவ்வளவு முயற்சி செய்தாலும் ஒருபோதும் வெற்றி அடையாததை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இருந்தாலும் அதை மறந்துவிட்டு முன்னால் போனால், வால் பின்னாலேயே வரும். துணைவரைக் கண்டுபிடிப்பதும் இது போன்றதே. துணைவரை மக்கள் தங்களுடைய “மேலான பாதி” என்று கூறுவார்கள். உண்மையில் துணைவர் என்பவர், உங்களில் ஒரு பகுதியே ஆகும். மிகச் சிறந்ததை நோக்கி முயற்சி செய்து ஓடினால், அது உங்களிடமிருந்து விலகிப் போகும். ஆனால் நீங்கள் இயற்கையாக நடந்துகொண்டு முன்னே போனால், அது பின்னால் வரும். கேட்பதற்கு சற்று விசித்திரமாக இருப்பினும், அது மிகவும் பொருத்தமான உவமையே ஆகும்.

நான் சொல்லவிரும்புவது என்னவென்றால், சிறந்த துணைவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் தலைசிறந்த மனிதராக முதலில் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் ஆதர்ஷ துணைவரைப்பற்றி உங்களுக்கு பலவிதமான எண்ணங்கள் இருக்கலாம். ஆனால் நீங்கள் முதலில் செய்யவேண்டியது, உங்களை மேம்படுத்திக் கொள்வதாகும். இதன் விளைவாக கனவு நாயகன் அல்லது நாயகி வரும்போது உங்களை திருமணம் செய்துகொள்ள விரும்புவார்.

நீங்கள் விரும்பும் துணைவரின் எல்லா குணநலன்களையும் பட்டியலிட்டு "இதுவே என் குறிக்கோள், இத்தகைய துணைவரையே நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று முடிவெடுத்து அதன்பிறகு அவரைத் தேட ஆரம்பித்தால், நீங்கள் தேடுபவர் உங்களுக்குக் கிடைக்க மாட்டார். மாறாக உங்கள்துணைவர் நேரில் வந்தால், எத்தகைய துணைவரை அவர் திருமணம் செய்துகொள்ள விரும்புவார் என்பதைப்பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும். அத்தகைய மனிதராக உங்களை மாற்றிக்கொண்டால், நீங்கள் தேடும் சிறந்த துணைவர் விரைவில் உங்கள் முன்பு தோன்றுவார்.

இதைச் சொல்வதற்கு முக்கிய காரணம், திருமணம் செய்துகொள்ளும்போது தம்பதியர் இருவருக்கும் ஒருவருக்கொருவர் மிகவும் பொருத்தமானவராக அமைய வேண்டும் என்பதே. இருவரும் இக் கட்டத்தில் மிக நன்றாகப் பொருந்த வேண்டும் என்பது மிகவும் முக்கியம். அதாவது கற்பனையில் ஒருவரை மிகச் சிறந்தவராக நினைத்துக்கொண்டு அவரைத தேடிப் போனால், அவரைக் கண்டுபிடிக்க முடியாது. உங்கள் சரியான துணைவராக ஆக்கிக் கொண்டால் ஒழிய நேரில் சந்தித்தாலும், விரைவு ரயில் வண்டி ரயில் நிலையத்தை விரைவாகக் கடப்பது போல், உங்களைக் கடந்து சென்று விடுவார்.

ஒரு சிறந்த துணைவரை மனதில் நினைத்துக்கொண்டு அவரைத் தேடுவது சரியே என்றாலும், அவரை நேரில் சந்திக்க நேர்ந்தால், நீங்கள் எப்படி தோற்ற மளிப்பீர்கள் என்று நினைத்துப் பாருங்கள். ஒரு திரைப்பட நடிகர் மீது, ஆசை வைத்து அவரிடம் நேரில் போய் பேச நேரிட்டால், அவர் உங்கள் தோள்மீது கைகளைப் போட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒருவேளை ஓடிப் போவீர்கள். நீங்களும் அவ்வாறு நடந்து கொண்டால், நீங்கள் விரும்பும் சிறந்த துணைவரைத் திருமணம்

செய்துகொள்ள முடியாது. நீங்கள் பயத்தினாலோ அல்லது குழப்பத்தினாலோ ஓடி ஒளிந்தால், நீங்கள் நெருங்கிப் போக முடியாது. உங்களை நீங்கள் பழக்கிக்கொண்ட பிறகு, அவரைச் சந்தித்தால், அவர் உங்களை சிறந்த துணைவர் என்று நினைப்பார். இது ஒரு முக்கியமான கருத்து ஆகும்.

இளைஞர்களைப் பொறுத்தமட்டில் முதலில் ஒரு நல்ல வேலையில் நிலையாக அமர வேண்டும். ஏனென்றால் உங்கள் வேலையின் வாயிலாக எது முக்கியமோ அதை அடைய முடியும். பொருளாதார வெற்றி தொடர்பாக இளைஞர்களுக்கு எதிர்காலம் குறித்து, ஒரு தெளிவான பார்வை இருக்க வேண்டும்.

பலரால் எத்தனையோ துணைவர்களுடன் அறிமுகமானபோதும் திருமணம் செய்து கொள்ளமுடிவதில்லை. இத்தகைய மனிதர், அவர் தேடும் நபர் கிடைக்கவில்லை அல்லது தலைசிறந்த துணைவர் கிடைக்கவில்லை என்று சொல்வார். உண்மையில் பிரச்சினை என்னவென்றால், அவர்களால் விருப்பு வெறுப்பின்றி தங்களை சரியாக எடைபோட முடியவில்லை என்று பொருள். இதன் விளைவாக எத்தகைய மனிதர் தன்னுடைய பொருத்தமான துணைவராக இருப்பார் என்று அவரால் சொல்ல முடியாது. தங்களுடைய எதிர்பார்ப்பை ஏற்றி இறக்கி சரியான துணைவரைக் கஷ்டப்பட்டு தேடும்போது, கடைசியில் எவரையும் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடும்.

இருந்தாலும் தங்களுடைய எதிர்கால பலன் எப்படி இருக்கும் என்று தெரிந்தால், விரைவில் அவருக்குப் பொருத்தமான ஒருவர் கிடைத்துவிடுவார். ஒரு நிறுவனத்திற்காக வேலை செய்தாலும், அல்லது தாமே ஒரு வியாபாரத்தைத் தொடங்கினாலும், அவர்களால் இவ்வாறு சொல்ல முடிய வேண்டும். “நான் இன்ன நிறுவனத்திற்காக வேலை செய்கிறேன். என்னுடைய எதிர்காலம் இன்னின்ன மாதிரி விரிவடையும். நான் இவ்வளவு பணம் வருங்காலத்தில் சம்பாதிப்பேன்.” இவ்வாறு உற்சாகத்துடன் கூற முடிந்தால், அவருக்கு ஒரு நல்ல துணைவர் கிடைப்பது உறுதி.

செய்யும் வேலை உங்களுக்கு அலுப்பாக இருந்து அதைவிட்டு விரைவில் விலகப்போவதாக இருந்தால், உங்களுக்கு எத்தனை பேர்களை அறிமுகப்படுத்தி வைத்தாலும், உங்களுக்கு தலைசிறந்த துணைவர் கிடைக்க மாட்டார். இந்த வேலையையும் விட்டு விலக நேரிடலாம், எனவே இந்த திருமண வாய்ப்பை நழுவவிடாமல் முடித்துக்கொள்ளலாம் என்று நினைத்தால், நீங்கள் எதிர்பார்க்கும் சரியான துணைவர்

கிடைக்கமாட்டார். விசித்திரமாக இருந்தாலும் வாழ்க்கை அப்படித்தான் இயங்குகிறது. நீங்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், இறுதியில் உண்மை என்னவென்றால், உங்களுடைய துணைவர் எதிர்பார்க்கும், தலைசிறந்த துணைவராக முதலில் உங்களை மாற்றிக்கொள்வதே ஆகும்.

2) உங்கள் துணைவரைப்பற்றி உங்களால் நன்றாகப் புரிந்து கொள்ளமுடியுமா?

இந்தக் கட்டத்தில் நான் விவாதிக்க விரும்புவது, நீங்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், திருமணம் செய்து கொள்ள விரும்பினால், அதற்கு மிகவும் முக்கியமான தகுதி, உங்கள் துணைவரைப்பற்றி நன்றாகப் புரிந்து கொள்ளும் திறமை இருக்க வேண்டும். இன்னும் எத்தனையோ நிபந்தனைகள் உண்டு என்றாலும், இதற்கு அதிகமான முக்கியத்துவம் தரவேண்டும்.

அழகாக இருக்கிறாரா, அவலட்சணமாக இருக்கிறாரா, உயரமாக அல்லது குட்டையாக, குண்டாக அல்லது ஒல்லியாக இருக்கிறாரா, நிறைய பணம் வைத்திருக்கிறாரா அல்லது நல்ல படிப்பு படித்திருக்கிறாரா என்பது பற்றி நீங்கள் கவலைப்படலாம். இதைப்போல் இன்னும் எத்தனையோ அளவுகோல்கள் உண்டு. இவற்றில் எதற்கு முக்கியத்துவம் தருவது என்பது பலருக்குத் தெரியாது. ஒருவர் கெட்டிக்காரராக ஆனால் ஏழையாக, லட்சணமாக ஆனால் குள்ளமாக, அழகாக ஆனால் முட்டாளாக இருக்கும்போது, எவற்றிற்கு இடம் தருவது என்று பலருக்குத் தெரியாது. பிறரிடம் அறிவுரை கேட்கலாம். ஆனால், முடிவில் முன்பைவிட மேலும் குழப்பத்தில் ஆழ்ந்துவிட நேரிடும்.

பார்வைக்கு அழகாக இருக்கவேண்டும், அதுவே முக்கியம் என்பார் ஒருவர். இரண்டாமவர், தோற்றத்தைப்பற்றி கவலைப்படாமல், மாறாக அவருடைய குணத்தைப் பார்க்க வேண்டும் என்பார். மூன்றாமவர், கெட்டிக்காரத்தனம் மிக முக்கியம் என்பார். நான்காமவர் நல்ல குடும்பப்பின்னணி அவசியம் என்பார். உங்களால் முடிவெடுக்கமுடியாது. உங்கள்நிபந்தனைகளுக்குப்பொருத்தமான எல்லா குணங்களும் ஒருங்கே அமைந்த நபர் கிடைக்கமாட்டார். ஓரிரு குறைபாடுகளுடன் உள்ள யாராவது ஒருவரை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். கேள்வி என்னவென்றால்,

முன்னுரிமையை எதற்குத் தரவேண்டும் என்பதே ஆகும்.

பொதுவாகச் சொல்வதானால், உங்களைப் புரிந்துகொள்பவர் யார் என்று தெரிய வேண்டும். எவ்வளவு பணம் வைத்திருக்கிறார் என்பதைப்பற்றி கவலை இல்லை. ஏனென்றால் பணம் முழுவதும் செலவழிந்த பிறகு, உங்களுக்கு இடையில் ஒன்றும் இருக்காது. ஒருவர் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் காலம் செல்லச் செல்ல, அழகு ஒவ் வொரு நாளும் குறைந்துவிடும். நீங்கள் திருமணம் செய்பவருக்கு ஆளுமை நன்றாக இருக்கிறது என்றாலும், ஒருநாள் அவரிடம் குறைகள் இருப்பதைக் காண்பீர்கள்.

இறுதியில் மிஞ்சுவது ஆழ்ந்த பரஸ்பர புரிதல் மட்டுமே. நல்ல புரிதல் என்பது இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகள்கூட தொடர்ந்து நடக்கும். வெளியில் தெரியும் குணநலன்களை மட்டும் பார்த்தால், திருமணமான புதிதில் நன்றாக இணைந்து வாழ்ந்தாலும், இருவருக்கும் இடையே உள்ள தொடர்பு மெல்ல மெல்ல நின்று போய், இறுதியில் உங்கள் உறவில் விரிசல் உருவாகி விடும்.

கல்வியில் உயர்வு என்பது ஒரு மனிதனிடம் உள்ள மிக முக்கியமான தகுதி என்று ஒரு பெண் நினைத்து, ஒரு சிறந்த பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற ஒருவரைத் திருமணம் செய்து கொண்டால், இளமையில் கஷ்டப்பட்டு படித்திருந்தாலும், பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறிய பிறகு, மது அருந்துவது மிகவும் பிடித்துப்போய், திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு இரவும் வெளியில் தங்கி, முகம் சிவப்பாக வீங்கி, நேரங்கழித்து வீடு திரும்பினார் என்றால், தலை சிறந்த பல்கலைக் கழகத்தில் படித்தார் என்பதற்காக, அவள் அவரைத் திருமணம் செய்திருக்கலாம். ஆனால், உடல் சிவப்பாகும் வரை மது அருந்தி, ஒருபோதும் மது இல்லாமல் இல்லை என்ற நிலையில், காலையில் அலுவலகத்திற்குப் போவதற்கு முன்பே குடிக்க ஆரம்பித்தால், அவள் ஏமாற்றமடைவது உறுதி. சில சமயங்களில் திருமணத் திற்குப் பிறகு சிலர் மாறுவதும் உண்டு

அவள் அறிவுக்கூர்மைக்காக அவரைத் திருமணம் செய்துகொண்டாள். மாறாக, அறிவுக்கூர்மையும், படிப்பில் சாதனை என்பது ஒன்றல்ல. உண்மையில் அறிவுக்கூர்மையானவர்கள் பள்ளியில் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அறிவு கூர்மைக்கும்

படிப்பில் திறமைக்கும் ஓரளவு தொடர்பு உண்டு என்றாலும், அது நூறு சதவிகிதம் அல்ல. பல இடங்களில் தொடர்பு அறுபது முதல் எழுபது சதவிகிதம் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

இந்த வேறுபாடு தனிப்பட்ட ஒருவரின் விருப்பத்தைப் பொறுத்தது. உதாரணமாக, அறிவுக்கூர்மை உடையவர், பள்ளிப் படிப்பைக் கூட முடிக்காவிட்டாலும், மேன்மேலும் தன் அறிவுக்கூர்மையை அதிகப்படுத்திக் கொள்வார். இத்தகைய மனிதர்களுக்கு வயது அதிகமாகும்போது, உண்மையான அறிவுஜீவியாகவே மாறிவிடுவார்கள். ஆனால் ஒருவர் குழந்தையாக இருக்கும்போது கட்டாயப்படுத்தி படிக்கவைத்தால் வளர்ந்தபிறகு அதை வெறுப்பார். கட்டாயப்படுத்தி படிக்க வைக்கப்பட்டவர், கெட்டிக்கார மனிதராக மாறலாம். ஆனால் இறுதியில் மேலே குறிப்பிட்ட உதாரணத்தில் உள்ளவர்போல், தன்னுடைய வேலையைத் தூக்கி எறிந்துவிட்டு ஒவ்வொரு இரவும் குடித்துவிட்டு வீட்டுக்கு வருவார். இருபத்திரண்டு அல்லது இருபத்திமூன்று வயதில் மிகவும் கெட்டிக் காரராக இருந்திருக்கலாம். நாற்பது வயதை அடையும்போது அவர் முற்றிலும் மாறிய மனிதராக மாறியிருப்பார்.

திருமணம் செய்து கொள்வது என்னும் முடிவு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இருக்கலாம். அவற்றுள் ஒன்றை மட்டும் தேர்வு செய்வதற்கு முன்பு, நீங்கள் எவ்வளவு தூரம் உங்கள் துணைவரைப்பற்றி புரிந்து கொண்டீர்கள் என்பது முக்கியம். அவரைப்பற்றி ஆழமாக அறிந்து கொண்டீர்களா, அவருடைய வாழ்க்கையின் தொலைநோக்கு என்ன என்று உங்களுக்குத் தெரியுமாஎன்று, ஒருமுறை உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். அவருடைய குணநலன்களின் ஆழத்தைப்பற்றி உங்களால் ஊடுருவிப் பார்க்க முடிந்தால், உங்கள் திருமண வாழ்க்கை இனிதாக அமைய வாய்ப்பு உண்டு.

உங்கள் வேலை அல்லது வாழ்க்கை குறித்த உங்கள் கருத்துக்களை, எந்த அளவுக்கு உங்கள் வருங்காலத் துணைவரிடம் புரிந்துகொள்ளும் திறமை இருக்கிறது என்பதை உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். உங்கள் துணைவர் மேலெழுந்தவாரியாகப் பாராட்டுபவரா அல்லது நீங்கள் எப்படி சிந்திக்கிறீர்கள் என்பதை ஆழமாகக் கணிப்பவரா? உங்களை அவர் அல்லது அவள், நன்றாகப் புரிந்துகொண்டார் என்று உறுதியாக நம்பினால், இந்தப் புரிதல் இருவரிடமும் உள்ளது

என்றால், நீங்கள் திருமணம் செய்துகொள்வது பாதுகாப்பானது.

இந்தப் பகுதியில் சிறந்த துணைவரைத் தேடுவதற்கான, இரண்டு வழிகளை விவரித்தேன். முதலாவது, நீங்கள் திருமணம் செய்துகொள்ள விரும்புவரைத் தேடி விரட்டாமல், அவருடைய குறிக்கோளுக்கு ஏற்ப உங்களை மாற்றிக் கொள்வது என்பதாகும். இரண்டாவதாக, புரிந்துகொள்வதின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்தி உள்ளேன். உங்கள் வருங்காலத் துணைவரைப் பற்றி புரிந்து கொள்ளும் திறமை உங்களிடம் உள்ளதா, அவள் அல்லது அவர் உங்களைப் புரிந்துகொள்ள முடியுமா என்பதுதான் முக்கியம்.

3) பொருத்தமான ஜோடியை உருவாக்க நீங்கள் பாடுபட வேண்டும்

அடுத்து, திருமணத்திற்குப் பிறகும் உறவை உறுதிப்படுத்துவது குறித்து குறிப்பிட விரும்புகிறேன். ஒரு தம்பதி திருமணம் முடிந்தவுடன் வாழும் காலத்தில் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் அவர்கள் உறவுகள் மெல்ல மெல்ல நொறுங்கி மணமுறிவுகளுக்குச் சென்றுவிடும்.

இவ்வாறு அவதிப்படும் மக்கள் யார் என்றால், கணவனும் மனைவியும் ஒரு பூட்டும் சாவியும் போல ஒருவருக்கொருவர் மிகச்சிறப்பாகப்பொருந்த வேண்டும் என்று நினைப்பவர்கள் ஆகும். ஒரு குறிப்பிட்டவரை மணந்தால் மகிழ்ச்சி பெறலாம் என்று நினைப்பார்கள். அப்படி நடக்காவிட்டால் திருமணம் மனக்கசப்பில் முடியும் என்று நம்புவார்கள். பிறரை ஏதோ ஒரு பொருளைப்போல் பார்ப்பவர்களின் திருமண வாழ்க்கை, தோல்வியில் முடியும். அ என்பவரை மணந்திருந்தால், உண்மையான மகிழ்ச்சி கிடைத்திருக்கும். மாறாக ஆ என்பவரை மணந்திருந்தால், கிடைத்திருக்காது. ஆ என்பவரை மணக்க நேர்ந்ததால், எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை என்று நினைப்பவர்களின் திருமணம் நீடிக்காதது வியப்புக்குரியது அல்ல.

தலைசிறந்த ஜோடி என்பது மக்கள் முயற்சி செய்து உருவாக்க வேண்டுமே தவிர, ஏதோ தானாக நிகழ்ந்துஇருவரும் தொடர்ந்து மகிழ்ச்சியுடன்வாழ்ந்தார்கள் என்பது அல்ல. ஒரு ஜோடி ஓரளவு புரிந்துகொண்டு வாழ முடிந்தால் அதன்பிறகு படிப்படியாக தலைசிறந்த ஜோடியாவதற்கு உறவுகளை மேம்படுத்த வேண்டும்.

அதாவது, உங்கள் துணைவர் உங்களுக்குப் பொருத்தமானவர் அல்ல என்று கூறுவதற்கு முன்பு, உங்களால் ஏதாவது செய்ய முடியுமா, ஏதாவது நீங்கள் நினைத்துப் பார்க்காத ஒரு கருத்து இருக்கிறதா, உங்கள் முயற்சியில் ஏதாவது குறை இருக்கிறதா என்று உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும்.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு நீங்கள் முயற்சி செய்து பாருங்கள். உண்மையில் உங்களுடன் ஒத்துப்போகாதவர் என்பவர்கள் அதிகம் இல்லை. நீங்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்தபிறகு, முயற்சி மட்டுமே தேவை. உங்கள் உறவுகளில் எண்ணற்ற சோதனைகள் இருந்திருக்கலாம். ஆனால் அவை உங்களை அழிக்க முயன்றால், அவற்றை முறியடிப்பதற்கு சாமர்த்தியமாகவும் புதிது புதிதாகவும் வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். முயற்சி செய்வதற்குத் தயாராக இருத்தல் என்பதை நீங்கள் மறக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

5. உங்கள் தலைவிதியை மாற்றும் சந்திப்புகள்

1) ஓர் உயர்ந்த மனிதர் சந்திப்பை எதிர்பாருங்கள்

தலைவிதி தொடர்பான சந்திப்புகளைப்பற்றி நான் பேச விரும்புகிறேன். என்னுடைய வாசகர்கள் பல வயதினர். உங்களுக்கு சுமார் இருபது வயது நிரம்பப் பெற்றிருந்தால், உங்கள் வாழ்க்கையை மாற்றிய நபர்கள் ஓரிருவரை மட்டுமே சந்தித்திருப்பீர்கள். ஆனால் வயது அதிகமாகும்போது முப்பது, நாற்பது அல்லது ஐம்பது வயது ஆகும்போது, உங்கள் வாழ்க்கையை மாற்றக் கூடிய பலரைச் சந்திப்பீர்கள்.

உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால், அதில் பல திருப்புமுனைகளைப் பார்க்கலாம். அவை ஒவ்வொன்றும் உங்கள் தலைவிதியையே மாற்றக்கூடியதாக அமைந்திருக்கும். இத்தகைய திருப்புமுனையைப் பார்க்கும்போது, ஏதாவது ஒரு வழியில் உங்களை மாற்றிய ஒரு மனிதரைக் காண முடியும். வாழ்க்கை என்னும் பாதையில் வரும் சந்திப்பில் நின்று கொண்டு இடப்புறம் போவதா, வலப்புறம் போவதா அல்லது நேராகப் போவதா என்று முடிவெடுக்க வேண்டிய நேரத்தில், உங்களுக்கு உதவுவதற்கு என்றே நிச்சயமாக ஒருவர் நின்று

கொண்டிருப்பார். இவரைச் சந்தித்த போது எப்படி நடந்து கொண்டீர்கள் என்பதைப் பொறுத்து உங்கள் தலைவிதி மாறும்.

இத்தகைய நேரங்களில் உங்கள் தலைவிதியை நன்றாக மாற்ற ஒருவரை விரும்புவீர்கள். ஆனால் சில சமயங்களில் அதற்கு நேர்மாறாகவும் நடக்கும். சிலருக்கு, தற்செயலாக ஒருவரைச் சந்தித்ததன் விளைவாக அவர்களுடைய வாழ்க்கை திடீரென்று மோசமான பக்கம் திரும்பும். அவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கலாம், அல்லது ஒருவருடன் வியாபாரம் செய்து திவாலாக நேரிடலாம்.

பள்ளி ஆசிரியர் ஒரு அறிவுரை தந்து அதைப் பின்பற்றியதால், பேரிழப்பு ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய நிகழ்வு நடக்கலாம் என்றாலும், நான் கூற முற்படுவது நல்ல விளைவுகள் தரும் சந்திப்பைப் பற்றியே ஆகும். வாழ்க்கையில் வெற்றிபெற மகிழ்ச்சியையும் செல்வத்தையும் வாங்கித் தரவல்ல, நண்பர்களின் சந்திப்புகளைப் பொக்கிஷமாகப் போற்றுவது மிக முக்கியம்.

சீனாவில் “உயர்ந்த மனிதர்” என்று ஒரு கருத்து உள்ளது. சாதாரணமாக ஒருவரைச் சந்திக்கும்போது “அண்மையில் உயர்ந்த மனிதர் எவரையாவது சந்தித்தீர்களா?” என்று கேட்பார்கள். சாதாரணமாக இந்த சொல் நாணயமுள்ள உயர்ந்த பதவியிலுள்ள நன்றாகப் படித்த, உங்களைவிட பணக்காரரைக் குறிக்கும். அல்லது குறைந்தபட்சம் உங்களை நல்ல நிலைக்கு உயர்த்தும் நிலையில் உள்ளவரையாவது குறிக்கும். ஒருவருடைய உடல்நலம் அல்லது தற்போதைய நிலை என்பதைப்பற்றி விசாரிப்பதுபோல், இந்த வாழ்த்துச் சொல்லை அன்றாட வாழ்வில் அடிக்கடி பயன்படுத்துவதைப் பார்த்திருக்கிறேன். நல்ல மனிதர் “சந்திப்பு” முக்கியத்துவம் வாய்ந்தது.

எங்கள் இன்ஸ்டிடியூட் ஃபார் ரிசர்ச் இன் ஹ்யூமன் ஹேப்பினஸ் நிறுவனத்தில் தனி மனிதனின் முயற்சி, மற்றும் சுய கட்டுப்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவோம். ஆனால், இவை மாடிப்படி போல, ஒரு சமயத்தில் ஒரு படி மட்டும் ஏறுவதைப் போன்றதாகும். அதற்கு பதிலாக உயர்ந்த மனிதரின் தோற்றம் என்பது தூக்கிச் செல்லும் மின் கருவியைப் போன்றது. இத்தகைய தூக்கியில் நுழைந்து விட்டால், பல மாடிகளுக்கு உடனடியாகப் போய்ச் சேர முடியும். வெளியே வந்தால் சிறிது நேரத்திற்கு முன், புறப்பட்ட பழைய இடத்தைக் காட்டிலும் ஒரு புதிய உலகத்தில் நுழைந்தது போல் தோன்றும். இதைப் போல்

வாழ்க்கையில் பலமுறை நிகழ்வதுண்டு.

இன்னொரு விதமாகச் சொன்னால், அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் மனிதர்களைச் சந்திக்கிறார்கள். நீங்களும் உங்கள் வாழ்க்கையை முற்றிலும் மாற்றிய ஒரு சந்திப்பை அனுபவித்திருப்பீர்கள். வாழ்க்கையில் ஒவ்வொரு திருப்புமுனையிலும் யாரோ ஒருவர் ஏதோ சொல்கிறார், அதைப்பற்றி நினைத்துக்கூட பாராமலும் ஆராயாமலும் சொன்னது பிற்காலத்தில் ஒரு வழிகாட்டியாக அமைந்தது என்பது உண்மை. அப்படிச் சொன்னவர் இந்த நிகழ்வை முழுதும் மறந்திருக்கலாம். ஆனால் இவ்வாறு நடப்பதுண்டு.

சில நேரத்தில் எவராவது ஒருவர், உங்களிடம் வந்து செல்வத்தைப் பெருக்கும் வழியைச் சொல்லி இருக்கலாம். அவ்வாறு செல்லும்போது அவருடைய அறிவுரையையும் கருத்துரையையும் கேட்டு, அதன்படி சரியான திசை நோக்கிச் செல்ல வேண்டும். அவர் எப்போது உங்கள் முன் வருவார் என்பதைச் சொல்ல முடியாது. ஏனென்றால் இத்தகைய சந்திப்பு, ஆளுக்கு ஆள் வேறுபடும். ஆனால் நீங்கள் எப்போதும் தயாராக இருந்து, உங்களுக்கு வழிகாட்டிய வல்லவரின் சந்திப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் இத்தகைய சந்திப்பை விரும்பினால், உறுதியாக அத்தகைய மனிதர் உங்கள் முன் தோன்றுவார்.

அத்தகைய மனிதர் வரும்போது உங்கள் வாழ்க்கையில் ஒளி மிளிரும். நீங்கள் யாராயிருந்தாலும் சரி, இத்தகைய ஒளிரும் காலம் உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு கட்டத்தில் வருவது உறுதி. இத்தகைய அனுபவத்தை எப்பொழுதும் பெறவில்லையே என்று கூறுபவர்கள் நன்றி மறந்தவர் ஆவார் அல்லது மறந்திருப்பார். அது பல உருவங்களில் வரலாம். எனவே இதைப்பற்றி நன்றாக சிந்தித்துப் பாருங்கள். அது உங்களை ஒரு படி முன்னேற்ற உதவியாக இருக்கும்.

நீங்கள் இத்தகைய சந்திப்புக்காக எவ்வளவு தயார் செய்து இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு நடப்பது உறுதி. எனவே ஆண்டுதோறும் உங்களைத் தயார் நிலையில் வைத்திருங்கள். யாராவது ஒருவர் வந்து நல்ல வழியில் செல்வதற்கு அறிவுரை கூறி நடத்திச் செல்வார். அதன்மூலம் உங்கள் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும். ஏனெனில் இவ்வாறு செய்தால், அத்தகைய மனிதர் எப்போதும் வருவார். ஒவ்வொரு மாதமும் இத்தகைய சந்திப்புக்கு நீங்கள் தயாராக இருந்தால் அந்த

மனிதர் உங்கள் முன்பு மாதா மாதம் வருவார். இத்தகைய சந்திப்புகள் நடப்பது, எவ்வளவு உறுதியாக நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

காரணம் என்னவென்றால், தொடர்ந்து இத்தகைய சந்திப்புகளை எதிர்பார்த்தால், உங்களைக் காக்கும் தேவதை அல்லது வழிகாட்டும் தேவதைகள், ஒருவருடைய சந்திப்பை நிகழ வைக்கும். உங்களின் இத்தகைய போற்றத்தக்க மனோபாவத்திற்காக பரிசு தர வேண்டும் என்று நினைத்து அவைகளே உங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவதற்காக, யாராவது ஒருவரைத் தேடித் தருவார்கள். இத்தகைய திருப்புமுனை, இத்தகைய மனிதரை நேரடியாகச் சந்திப்பதால் வரலாம், அல்லது வேறு ஒருவர் மூலமாகவோ, அல்லது காக்கும் தேவதை மூலமாகவோ, உங்களுக்குத் தெரியாமலேயே வரலாம். எப்படிப் பார்த்தாலும், ஏதாவது நல்லது உறுதியாக நடக்கும்.

மக்கள் உங்களை எப்போதும் கண்காணித்துக்கொண்டு இருக்கிறார்கள். உங்களை வெவ்வேறு சூழ்நிலையில் பார்க்கிறார்கள். நீங்கள் முன்னேற, பலர் உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய விரும்புவார்கள். இப்பேர்ப்பட்ட மனிதரைச் சந்திப்பதற்கான அடிப்படைத் தேவை, இத்தகைய சந்திப்பு நிகழ உளமார விரும்புவதுதான்.

2) உங்களிடம் சொல்லப்படுவதைப் பணிவுடன் கேளுங்கள்

விதியை மாற்றும் சந்திப்புகளுக்கான இரண்டாவது அடிப்படைத் தேவை, பணிவு என்பதாகும். உங்களைவிட புத்திசாலிகள் இந்த உலகத்தில் உண்டு என்பதை ஒப்புக்கொண்டு அவர்களில் ஒருவரைச் சந்தித்தால், அவர்கள் சொல்வதைப் பணிவுடன் கேட்க வேண்டும். நீங்கள் கேட்கத் தவறினால், உங்கள் வாய்ப்பை இழக்க நேரிடும். உங்களை மாற்றவல்ல சொற்கள் இருக்கின்றனவா என்று தேடவேண்டும். மிக முக்கியமான கருத்துக்களைக் கூறும் மனிதர்களின் சந்திப்புகளை எதிர்பார்க்க வேண்டும்.

அடுத்து, அவர்கள் சொல்வதைக் கேட்கத் தவறக்கூடாது. அதனால் சந்திப்பை வீணாக்கிவிடக்கூடாது. “இது மகிழ்ச்சியான தேவதை, நல்ல செல்வத்தின் தேவதை” என்று தோன்றினால், அதை நழுவவிடக்கூடாது. கொடுக்கப்படும் வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்துங்கள். இத்தகைய விதியை

மாற்றும் சந்திப்பு, உங்கள் வாழ்க்கையின் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். இது ஓர் ஒளிரும் தருணம் ஆகும். எனவே அதை நீங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் தலைவிதி நிர்ணயித்த சந்திப்பில், நின்று கொண்டிருக்கிறீர்கள். பலதரப்பட்ட மக்கள், உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்வதற்கு உதவி நல்குவார்கள். நீங்கள் சாதித்தது உங்கள் முயற்சியால் மட்டுமே கிடைத்தது என்று நினைத்தால், நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களால் மட்டும் தனியாக எதையும் சாதிக்க முடியாது. எனவே நீங்கள் பணிவுடன் இருந்து, நல்ல மனிதர்கள் சொல்வதைக் கேட்கத் தவறாதீர்கள்.

இப்பகுதி “வாழ்வும் வெற்றியும்” என்று இருப்பதால் உங்களுடைய தனி முயற்சியால் சாதித்த சாதனைகளைப் பற்றி கேட்பதற்கு, எதிர்பார்த்துக் கொண்டு இருப்பீர்கள். எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, உண்மையான வெற்றிக்கு வழி மற்றவர்கள் தரும் உதவிக் கரங்களே ஆகும். பலர் வாய்ப்புகளைத் தருவார்கள். பலர் உங்களுடைய வாழ்வுக்கு உதவி செய்ய முயன்றால், வெற்றி பெறாமல் இருப்பது மிகக் கடினம். அதற்கு மாறாக நிறைய பேர் நீங்கள் வெற்றி பெறுவதைத் தடுத்தால், முன்னேறுவது மிகக் கடினம். உங்களுக்கு கடும் முயற்சி தேவை. மற்றவர்கள் உங்களுக்கு உதவி செய்ய விரும்பினால், நீரோட்டத்தின் போக்கில், நீங்கள் வெற்றி பெற்றுவிடலாம். இதற்காக நீங்கள் நன்றி சொல்ல வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால் மக்கள் தங்கள் முயற்சிகளால் மட்டுமே வெற்றிபெற முடியாது. மற்றவர்கள் உதவியுடன் உங்கள் இலக்குகளை அடைய முடியும் என்பதை நினைவில் வைத்துக்கொள்வது முக்கியம்.

3) நன்றியுள்ள இதயம் கொண்டு இருங்கள்

நான் இப்போது இருக்கும் நிலைக்கு வர நிறைய முயற்சி தேவைப்படவில்லை என்று சொன்னால், நான் பொய் சொல்கிறேன். நான் நல்ல பாதையில் இப்போது நடப்பதற்குக் காரணம், உலகத்தில் நிறைய மக்களிடமிருந்து கிடைத்த ஆதரவும் இறைவனிடமிருந்து பெற்ற உதவியுமே.

வழக்கமான சொற்களில் சொன்னால், இதனை “அதிர்ஷ்டம்”

என்று வர்ணிக்கலாம். ஆனால் உண்மை உலகத்தைப்பற்றி நேரடியாகத் தெரிந்த காரணத்தால் “அதிர்ஷ்டம்” என்ற சொல்லை அறவே பயன்படுத்த முடியாது. இது வேறு உலகத்தில் வாழ்பவர்கள் ஒத்துழைப்புடன் கிடைத்த விளைவு என்று எனக்குத் தெரியும். அவர்கள் உண்மையான உழைப்பால் எனக்கு இந்த பாக்கியம் கிடைத்தது. இந்த நன்றி உணர்வு மிக முக்கியம் உங்களுடைய அதிர்ஷ்டம் மேலும் உயரும்போது நன்றியைத் தெரிவிக்க மறந்துவிடாதீர்கள்.

உங்களுடைய நல்வாழ்வு மேல்நோக்கிப் போகுமானால், மூன்று கருத்துக்களை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். முதலில், எப்போதும் மனதார உங்கள் பாக்கியத்தில் மாற்றம் வரவேண்டும் என்று எதிர்பாருங்கள். இரண்டாவது, பணிவாக இருந்து ஆலோசனைகள் கேளுங்கள். மூன்றாவது, உங்கள் இதயத்தில் நன்றி உணர்வு இருக்கட்டும். இந்த விதிகளைப் பின்பற்றினால், உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்படும்போது, அது உண்மையில் ஒளியைப் பிரகாசிக்கும்.

6. ஒரு ஆன்மிகத் தொன்மை மரபு

1) நேர்மை என்னும் ஆன்மிகத் தொன்மை மரபு

ஐந்தாவது மற்றும் கடைசி மையக்கருத்தாக ஆன்மிகம் என்னும் தொன்மை மரபைப்பற்றி விவாதிக்க விரும்புகிறேன். முதல் பகுதியில் ஆரோக்கிய வாழ்க்கை பற்றியும், இரண்டாவது பகுதியில் செல்வத்தை உருவாக்குவது பற்றியும், மூன்றாவது பகுதியில் துணைவர் மற்றும் வீடுபற்றியும், நான்காவது பகுதியில் உங்கள் தலைவிதியை மாற்றக்கூடிய சந்திப்புகளைப் (விதிவசமான சந்திப்பு) பற்றியும் பேசினேன். நீங்கள் எப்படி படிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து, உலகியல் வெற்றிக்கு கையேடாகவும் அல்லது இந்த உலகில் எப்படி முன்னேறுவது என்பதற்கு விளக்கமாகவும் உங்களுக்கு எண்ணங்களை உண்டாக்கி இருக்கலாம்.

ஆனால் இப்பகுதி, வாழ்க்கையும் வெற்றியும் என்பதாகும். உலகியல் வெற்றிக்குப் பிறகு என்ன என்பதைப்பற்றி சிந்திக்காமல் இதைப்பற்றி முழுவதும் கருத்து தெரிவிக்க முடியாது. உலகியல் வெற்றிக்கு அப்பால் செல்ல வேண்டியது மிகவும் முக்கியம். உலகியல் வெற்றியைத் தாண்டக்கூடிய ஒன்று

உங்களிடம் இருந்தால் ஒழிய, வாழ்க்கையில் உண்மை வெற்றி கண்டதாகக் கருத முடியாது.

உலகியல் வெற்றியைத் தாண்டி நிற்பது என்ன? இந்த உலகத்திலும் அடுத்த உலகத்திலும் தொடரும் மகிழ்ச்சி என்பதைப்பற்றி நான் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். ஒருவித மகிழ்ச்சி, அதை நீங்கள் இறந்தபிறகும்உங்களுடன்எடுத்துப்போகலாம். இந்தமகிழ்ச்சிஎந்த உருவத்தில்இருக்கும்? அதுமுற்றிலும் ஆன்மிகத் தொடர்புடையது. அதனை இதயத்தின் பொக்கிஷம் என்று வர்ணிக்கலாம். அது இந்த உலகத்தைச் சார்ந்தது அல்ல.

உண்மையின் சட்டங்களைப் புரிந்து கொண்டவர்களுக்கு அவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு, வாழ்வில் வெற்றி என்பது உலகியல் வெற்றியை விட அதிக மதிப்புள்ளது. உயர்வான ஒன்றை அதாவது ஆன்மிக தொன்மை மரபைப்பற்றி புரிந்து கொண்டால் ஒழிய, நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றதாகக் கருத முடியாது. இது புனைந்துரைக்கப்பட்ட கருத்து அல்ல. நான் இந்தக் கருத்தை முன்னரே, பல நூல்களில் அறிமுகப்படுத்தி இருக்கிறேன். ஒருவேளை அவற்றைப் படித்திருக்கலாம். இருந்தாலும் மீண்டும் ஒருமுறை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு ஆன்மிகத் தொன்மை மரபு என்பது எளிதில் புரிந்து கொள்ளமுடியாத சொற்றொடர் ஆகும். என்னை இதற்கு இன்னொரு பெயரைச் சூட்டச் சொன்னால், அதனை நேர்மை என்பேன், நீங்கள் பிறக்கும்போதே உங்களுடன்வந்தது திறமை. நீங்கள் உலகுக்கு வந்த நாளிலிருந்தே அதனுடைய விதைகள் உங்களுடன் இருக்கின்றன. அதனை நீங்கள் வளர்க்காவிடினும் அதனுடைய மறைந்துள்ள சக்தி உங்களிடம் இருக்கிறது. அதனை வளர்ப்பது உங்களைப் பொறுத்தது. நேர்மை என்பது நீங்கள் பிறக்கும்போது உங்களிடம் இருப்பதல்ல.

இந்த மூன்று பரிமாணங்கள் கொண்ட உலகில், வாழ்க்கை நடத்தும்போது தோன்றுவதாகும். அது அடையப்பட்ட குணம் ஆகும். மேல் உலகத்திலுள்ள உயர்ந்த ஆவிகள், ஏழாவது பரிமாணத்தில் உள்ள பேரொளியின் தேவதைகளுக்கு நேர்மை என்பது உண்டு. அவர்களுக்குக்கூட இந்த உலகில் பிறக்கும் போது நேர்மை என்னும் குணம் இல்லை. இருந்தாலும் அவைகளிடம் திறமைகள் இருக்கும். நீங்கள் திறமைகளுடன் பிறக்கிறீர்கள், ஆனால் நேர்மையுடன் அல்ல.

2) இரண்டு வழிகளில் உருவாகும் நேர்மை

நேர்மை என்பதை எப்படிப் பெறுவது? பல பத்தாண்டு காலமாக மெல்ல மெல்ல உருவானாலும், எப்படி உருவாகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? இரண்டு வித சூழ்நிலைகளில் நேர்மை என்பதைப் பெறமுடியும். ஏமாற்றம், தோல்வி, மற்றும் துயரமான நிலை இவற்றினாலும், மற்றொன்று வெற்றியின் மூலமாகவும் பெறமுடியும். இத்தகைய நேரங்களில் நேர்மை என்பதை எளிதாகப் பெற முடியும். வாழ்க்கையின் மற்ற காலங்களிலும் நேர்மை என்பதைக்க குறைந்த அளவில் மட்டுமே பெற முடியும். ஆனால், உங்கள் வாழ்க்கையின் நினைவுச் சின்னமாகக் கருதப்படும் மிகச்சிறந்த நேர்மை என்பது இந்த இரண்டு அனுபவங்கள் மூலமாகவே உருவாகும்.

நாம் உற்சாகமிழந்த நேரத்தில், ஏமாற்றமடையும்போது துயரத்தை எதிர்கொள்ளும்போது நேர்மை என்பது எப்படித் தோன்றுகிறது என்று சிந்திப்போம். துயரத்தினால் வருந்தும்போது, நம்முடைய அதிர்ஷ்டக் குறைவைப் பற்றி புகார் கூறுவது பழக்கம். ஆனால் சிலர் தங்கள் துரதிருஷ்டத்தைப் பற்றி முணுமுணுப்பதில்லை. தங்களுடைய நிலையை எண்ணி வருந்துவதும் இல்லை. மக்களில் பலர் ஒரு தவறு செய்தால், அதிர்ஷ்டத்தையும் அப்போதுள்ள சூழ்நிலைகளைப் பற்றியும் குறை கூறுவார்கள். மற்றவர்கள் அவர்களைக் கைவிட்டுவிட்டதாகக் குற்றம் சாட்டுவார்கள். அல்லது அவர்களைக் காக்கும் ஆவிகளைக்கூட குறை கூறுவார்கள். பலரால் துயரம் மற்றும் ஏமாற்றத்தினால் ஏற்படும் அழுத்தத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது.

தன்னை உணர்ந்தவர்கள், துயரம் தங்களை நசுக்கிப்போட அனுமதிக்கமாட்டார்கள். எப்படிஉள்ளதோ, அதைஅப்படியே ஏற்று சகித்துக்கொள்வார்கள். இவ்வாறு இழப்புகளைத் தாங்கிக் கொள்பவர்கள் சராசரி மனிதர்களைவிடப் பரவாயில்லை. கெட்டநிலை வந்தபோதும், வாழ்க்கையை நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொள்பவர்கள் இதற்கும் மேலானவர்கள் ஆவார்கள். தன்னை உணர்வதில் இத்தகைய மனிதர்கள் ஏணியின் அடியில் உள்ள படியில் இருக்கிறார்கள்.

இருப்பினும் வாகைசூடும் சிந்தனையைப் பயன்படுத்தி எல்லா துயரங்களையும் முறியடிப்பவர்கள் பாராட்டத்தக்கவர்கள்.

துன்பம் வரும்போது அதில் ஏதோ இறைவன் நோக்கம் இருப்பதைக் கண்டுபிடித்து, அது என்ன பாடம் கற்றுத் தர முயல்கிறது என்று தங்களையே கேட்டுக்கொள்வார்கள். அந்தப் பாடத்தை நிச்சயமாகக் சுற்றுக்கொள்வார்கள். தங்களுக்கு என்ன தேவை, இந்த துன்பம் என்ன சொல்லித் தருகிறது என்று தங்களையே கேட்டுக்கொண்டு, அதன் அடிப்படையில் தங்கள் குணநலனை உருவாக்கிக் கொள்வார்கள். இத்தகைய அனுபவத்தைப் பெறுபவர்கள், நேர்மையை விரிவாக்கிக் கொள்வார்கள். அவர்களிடம் அளவுக்கு மிஞ்சிய பலம் இருக்கும். அதில் ஒளி வீசும்.

சோதனைகளையும் ஏமாற்றங்களையும் பொறுத்துக் கொள்வது என்பதே பாராட்டத்தக்கது. ஆனால் அவற்றில் இறைவனின் நோக்கம் என்ன என்பதை தங்கள் அனுபவத்தில் தெரிந்துகொண்டு தங்களுக்குள்ளேயே வெற்றிக்கான ஒரு விதையைத் தேடிப்பிடித்து அதை வளர்த்துக்கொள்வார்கள். இவ்வாறு செய்வது உண்மையிலேயே மிகச்சிறப்பானது. அங்குதான் நேர்மை என்பது உருவாகிறது.

இரண்டாவது, வரிசை சூழ்நிலைகளில் உருவாகும் நேர்மை வெற்றியுடன் தொடர்புடையது. வரலாற்றில் இடம் பெற்றுள்ளவர்கள் வாழ்க்கையில் வெற்றி கண்டவர்கள் ஆவார். எத்தனை முறை தோல்வியைச் சந்தித்தாலும், முடிவில் பெரிய வெற்றியை அடைந்தனர். ஆபிரகாம் லிங்கன் எடுத்துக்காட்டைப் பாருங்கள். அவர் தேர்தலில் தோல்வி அடைந்தார். தனிப்பட்ட உறவுகள் தோற்றுப் போயின. தொடர்ந்து கொடுமைகளை அனுபவித்தார். அவருடைய காதலி இறந்துபோனார். இறுதியில் அவர் அமெரிக்க நாட்டின் தலைவர் ஆனார். அவர் தலைவர் ஆகாவிட்டால், அவர் வரலாற்று நாயகனாக இன்றளவும் நினைவில் இருக்கமாட்டார். இறுதியில் அவர் வெற்றி கண்டார்.

நீங்கள் தொடர்ந்து தடங்கல்களை அனுபவித்தாலும், என்றாவது ஒருநாள் நீங்கள் பூத்துக் குலுங்கும் வாய்ப்பைப் பெறுவது உறுதி. கடைசியில் வெற்றி வரும் போது அதை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் என்பது மிக முக்கியம். எல்லா வெற்றிக்கான கனிகளையும், நீங்களே எடுத்துக்கொள்ளக் கூடாது. உங்கள் முயற்சிகளால் மட்டுமில்லாமல், இறைவனின் கருணையால் கிடைத்தது என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள். வெற்றி என்பது சிறியதாக கருவாக

இருக்கும்போது தண்ணீர் மற்றும் உரங்களையிட்டு நீங்கள் அதை வளர்த்தீர்கள். உங்களுக்குக் கொடுத்தபோது வெற்றி என்னும் பூ அந்த விதையின் உள்ளே இருந்தது. பிறகு அது தானாகவே மலர்ந்தது. நீங்கள் தண்ணீரையும் சத்துணவையும் தந்து வளர வழி செய்தீர்கள். இதை இப்படித் தான் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் நீங்களே காரணம் என்று பெருமை கொள்ளாதீர்கள். ஓரளவுக்கு நீங்கள் உதவினீர்கள் என்றாலும், இறைவனின் கருணையினால் உருவானது என்று நினைத்துக்கொள்ளுங்கள். ஒரு வெற்றியை தனிப்பட்ட சாதனையாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்னும் மனப்பாங்கே ஒப்பற்ற நேர்மையை உருவாக்கும். எல்லாப் பெருமையையும் நீங்களே எடுத்துக் கொண்டு வெற்றி உங்கள் முயற்சியாலும் திறமையாலும் மட்டுமே கிடைத்தது என்று நினைத்தால், உங்களுக்கு நேர்மை என்பது உருவாகாது. உங்கள் திறமைக்குக் கிடைத்த வெற்றி என்னும் அனுபவம் மட்டுமே ஆகும்.

வெற்றிக்கு நீங்களே காரணம் என்று பெருமை கொள்ளாமல், அது எண்ணற்ற மக்களின் முயற்சியால் கிடைத்தது என்று சொன்னால் என்ன ஆகும்? இந்த வெற்றி இறைவனின் அருளால் கிடைத்தது. உங்களைப் பாதுகாக்கும் வழிகாட்டும் ஆத்மாக்களின் நல்வாழ்த்துக்களால் கிடைத்தது என்று நம்பினால் என்ன ஆகும்? இந்த வெற்றி இறைவனின் கருணையால் கிடைத்தது என்று நினைத்தால் நீங்கள் எப்படி நடந்துகொள்வீர்கள்? உங்கள் வெற்றி அதிகமான மக்களுக்குப் பலன் தருமாறு, நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். இவ்வாறே நேர்மை உருவாகிறது.

ஒவ்வொரு மனிதனும் வேறுபட்ட வாழ்க்கை வாழ்கிறான். ஆனால் நேர்மை இந்த இரு காரணங்களால் மட்டுமே உண்டாகிறது. இதை நீங்கள் எப்படியாவது அடைய வேண்டும். நீங்கள் முயற்சி செய்து ஓரளவுக்கு நேர்மை, அது எவ்வளவு குறைவாக இருந்தாலும் சரி அதை அடைந்தே ஆக வேண்டும், என்று விரும்புகிறேன். அடுத்த உலகுக்குப் போகும்போது, உங்களுடன் ஆன்மிக தொன்மைமரபாக எடுத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் நீங்கள் உண்மையிலேயே வாழ்க்கையில் வெற்றி அடைந்தீர்கள் என்று கூறமுடியும். இந்த வாழ்நாளிலேயே உங்களால் இதை அனுபவிக்க முடியும் என்று நம்புகிறேன்.

பகுதி
4

வாகை சூடும் சிந்தனையின் வலிமை

4

வாகை சூடும் சிந்தனையின் வலிமை

1. தியானத்தையும் முன்னேற்றத்தையும் இணைக்கும் கோட்பாடு

எங்கள் நிறுவனத்தில், மகிழ்ச்சிக்கான கோட்பாடுகளை விளக்குவதற்கு, நான் நான்கு விதமான பாதைகளை அறிமுகப்படுத்தி உள்ளேன். அன்பு, ஞானம், தியானம், முன்னேற்றம் ஆகியவை. என்னுடைய இந்த நூலின் மையக் கருத்து "வாகை சூடும் சிந்தனை" என்பதாகும். அது தியானத்தையும் முன்னேற்றத்தையும் இணைக்கும் தத்துவம் ஆகும். பொதுவாக மக்கள், தீர்மானமான சிந்தனை என்பதைப் பயிற்சி செய்யும்போது தீர்மானமாகவும், ஆக்கபூர்வமாகவும் முன்னேறினால் போதுமானது என்று நினைக்கிறார்கள். எங்கள் நிறுவனத்தின் அடிப்படை போதனைகளில் ஒன்றான தியானத்துடன் ஒத்திசைந்து போக வைப்பது எப்படி என்று நாம் சிந்திக்க வேண்டும்.

மக்களிடம் எண்ணங்கள், செயல்கள் ஆகியவைபற்றி ஒரு நாள் தியானம் செய்து இன்னொரு நாள் தீர்மானமான சிந்தனையைப் பயன்படுத்தி முன்னேறுமாறு தூண்டினால், எதன்மீது கவனம் செலுத்துவது என்பது பற்றி ஊசலாடுவார்கள். இதுவரையில் எந்த வழியைப் பின்பற்றுவது என்பதை அவரவரிடம் விட்டு விட்டேன். இதனால் சிறிது குழப்பம் ஏற்பட்டிருக்கலாம். இந்தக் காரணத்திற்காகவே, வாகை சூடும் சிந்தனை என்னும் கருத்தை, இரண்டையும் இணைப்பதற்கும் தெளிவாக்குவதற்கும் அறிமுகப்படுத்தி இருக்கிறேன். ஒரு பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று தெரியாத போது வாகை சூடும் சிந்தனையைப் பயன்படுத்துங்கள். ஏனென்றால் அது தியானம், முன்னேற்றம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கி இருப்பதால் ஒரு பயன்தரும் தத்துவம் ஆகும்.

தீர்மானமான சிந்தனையைப் பயன்படுத்தும்போது நிழல்களையும், இருட்டான பகுதிகளையும் பார்க்க மாட்டார்கள். ஒளியை மட்டுமே பார்த்து, வெளிச்சமான பக்கத்தின் மீது மட்டுமே கவனம் செலுத்தி, ஆக்க பூர்வமாகவே சிந்திப்பார்கள்.

இந்த தத்துவம் மிகவும் சக்திவாய்ந்தது என்றாலும் இந்தக் கோணத்தில் மட்டுமே பார்வையைச் செலுத்துவதால், தியானத்திற்கு இடம் இருக்காது. நீங்கள் எவ்வளவு தீர்மானமாகவும் தொலைநோக்குடன் செயல்பட்டாலும், சில நேரங்களில் சில விஷயங்கள் சுலபமாக நடப்பதில்லை. கடந்த காலத்தில் நீங்கள் தோல்வியை அனுபவித்திருப்பீர்கள். அவற்றை அப்படியே ஒதுக்கி வைத்து விட்டு முன்னேற முயல்வது சரியா?

நீங்கள் முன்னேறிக் கொண்டிருக்கும் வரையில் முடிவான மனோபாவத்துடன் இருக்கும் வரையில் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ளலாம். நீங்கள் விழுந்தாலோ அல்லது தவறுகளைச் செய்தாலோ, ஒருவேளை இப்படிச் சொல்லிக்கொள்வீர்கள். “இதைப்போன்ற வைகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நான் வெளிச்சத்தில் இருக்கிறேன். மனித இயற்கை என்பது அடிப்படையாகப் பார்த்தால், வெளிச்சம் மட்டும்தான்.” தீர்மானமான சிந்தனையைப் பின்பற்றுபவர்கள் இவ்வாறு நினைப்பார்கள். ஆனால் வாழ்க்கை என்பது இதுமட்டும்தானா? மக்களின் உணர்வுகள் அவ்வளவு சாதாரணமானதா?

மனிதர்களின் இதயங்களையும் மனங்களையும் படித்திருந்ததால், இது மட்டும் போதுமா என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன். மக்கள் ஒரே திசையில் மட்டும் முன்னேறுவது போதுமா, ஒரு குறிப்பிட்ட வகைச்சிந்தனையை மட்டும் பின்பற்றுவது சரியா? இல்லை. நிச்சயமாக இல்லை. மனிதர்களின் இதயங்களும் மனங்களும் எண்ணங்களாலும் ஆழ்ந்த உணர்ச்சிகளாலும் நிரம்பி இருக்கின்றன. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு சிந்திக்க வேறு ஒரு ஆழ்ந்த தத்துவம் தேவைப்படுகிறது.

2. உன்னதமான உலகில் வாகை சூடும் சிந்தனையின் சக்தி

வாகை சூடும் சிந்தனை என்பது, ஒவ்வொரு தனி நபருக்கு

மட்டுமே உரித்தான தனிப்பட்ட தத்துவம் ஆகும். இருந்தாலும் எந்த அணுகுமுறையுடன் செல்வது என்பதைப்பற்றி ஒரு விளக்கம் தருவது அவசியம் என்று நினைக்கிறேன். இந்தக் கோணத்திலிருந்து வாகை சூடும் சிந்தனையின் சக்தி என்ன என்பதை விளக்க விரும்புகிறேன்.

தவறுகள் செய்யாமல் எவராலும் வாழமுடியாது என்னும் கருத்திலிருந்து இந்தத் தத்துவம் துவங்கியது. பிரச்சினைகள் இல்லாமல் எவராலும் வாழ்க்கையைக் கடக்க முடியாது. மக்கள் முதலில் இடப்புறம், பிறகு வலப்புறம் என்று சென்று தோற்றுப்போய் வீழ்கிறார்கள். மீண்டும் எழுகிறார்கள். எப்போதும் தங்கள் வாழ்க்கையை வளமாக்கவும், மகிழ்ச்சி பெறுவதற்கும், தொடர்ந்து ஏதாவது ஒரு வழியைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மை நிலையை எதிர்நோக்குகையில் வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வதற்கு என்ன தேவைப் படுகிறது? இதையே நான் விளக்க விரும்புகிறேன்.

வாகைசூடும் சிந்தனை என்னும் தத்துவம் நீங்கள் சுவாசித்து, உண்டு வாழ்விடமாய் கொண்டு இருக்கும் இந்த முப்பரிமாண உலகில், உளதாயிருக்கும் மாபெரும் சக்தியை உங்களுக்கு அளிக்கும். முப்பரிமாண உலகைத் தாண்டி இயங்கும் பல கோட்பாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக தன்னை உணர்தல் சம்பந்தப்பட்ட விதி என்னும் சட்டம் உண்டு.

மேல் உலகத்தில் உங்களிடம் உள்ள சக்தியை நூறு சதவிகிதம் வெளிப்படுத்தலாம். ஆனால் முப்பரிமாண உலகில் இது சத்தியமாகாது. ஒவ்வொரு மனிதனும் தன்னை மாறுபட்ட விதத்தில் வெளிப்படுத்த முடியும். பேரொளி ஒன்றே என்னும் தத்துவம் சொல்வதாவது - “உண்மையில் ஒளிமட்டுமே இருக்கிறது” என்பதாகும். அது உயர்ந்த பரிமாணங்களில் மேலும் வலுவுள்ளதாகிறது. ஆனால் முப்பரிமாண உலகிற்கு இது பொருந்தது. வாகைசூடும் சிந்தனை என்பது முழுவதும் புரிந்து கொள்ளாத ஆன்மிக நெறிகளை விளக்குகிறது.

3. சங்கடங்களை உங்கள் ஆத்மாவுக்கு பலமாக மாற்றிக்கொள்ளுங்கள்

வாழ்க்கையில் எழும் எல்லா சங்கடங்களையும் ஆத்மாவுக்கு

ஊட்டச்சத்தாக மாற்ற முடியும் என்ற அடிப்படையில், வாகைசூடும் சிந்தனை உருவானதாகும். நீங்கள் வாழ்க்கையில் பல்வேறு பின்னடைவுகள், ஏமாற்றங்கள், சங்கடங்கள் ஆகியவற்றைச் சந்திக்க நேரிடும். இவ்வுலகுக்கு நீங்கள் வந்த காரணம் என்ற கோணத்திலிருந்து பார்த்தால், அவற்றை வெறுமனே தவிர்த்துவிட முடியுமா? இதைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சங்கடங்களையும் கஷ்டங்களையும் தவிர்ப்பதற்காகவா நீங்கள் இங்கு பிறந்தீர்கள்? இந்தக் கேள்விக்கு நீங்கள் கட்டாயம் பதில் சொல்ல வேண்டும்.

வாழ்க்கையின் பொருள் என்பதை நினைத்துப் பார்த்தால், இது சரி அல்ல என்று உணர்வீர்கள். சில நூறு அல்லது சில ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த உலகத்தில் பிறக்கின்றீர்கள். மாறுபட்ட பல்வேறு சூழ்நிலையில் வாழும் மக்களுடன் வேலை செய்து ஆத்மாவை மேலும் தூய்மைப்படுத்துவதற்காக இந்த உலகில் பிறக்கின்றீர்கள். இந்த பூமியில் வாழும் வாழ்க்கை நிச்சயமாக நல்ல அனுபவங்கள் நிறைந்ததாக இருக்காது. ஆனால் நீங்கள் பிறப்பதற்கு முன்பு இதைப்பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும்.

எல்லாம் உங்களுக்காக இடர்களற்று நடக்கும் என்று நம்பி நீங்கள் வரவில்லை. பூமியில் வந்ததன் நோக்கம், உயர்ந்த நிலையை அடைவது என்பதாகும். பல்வேறு அனுபவங்களையும் சோதனை செய்து தவறுகளைத் திருத்தி ஒன்றுசேர்த்து அதன்மூலம் உண்மையான ஒளியுடன் மிளிர்வது என்பதே உங்கள் நோக்கம். வாழ்க்கையின் நோக்கத்தை இவ்வாறு பார்த்தால் சங்கடங்களும் சிக்கல்களும் ஒரு புதிய அர்த்தத்தைத் தரும். இத்தகைய உணர்தலே வாகை சூடும் சிந்தனையின் அடிப்படை ஆகும்.

உங்கள் சிந்தனையில் மனிதர்களுக்கு அழியாத வாழ்வு உண்டு என்றும் புனர்ஜென்மம் மூலம் பூமிக்கு மீண்டும் தொடர்ந்து வருவார்கள் என்று நினைத்துப் பார்த்து உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளை மாறுபட்ட கோணத்தில் பார்த்து, இத்தகைய அனுபவங்கள் மூலம் உங்களுடைய ஆத்மாவுக்குத் தேவையான விலை மதிக்க முடியாத ஊட்டச்சத்து கிடைப்பதற்காகத் தரப்பட்டுள்ளதாகும். இதுவே வாகை சூடும் சிந்தனையின் அடிப்படை ஆகும்.

வாழ்க்கையில் உள்ள முக்கியமான சவால் என்பது இயன்ற

அளவுக்கு முயற்சி செய்வது. அறிவு, திறமை, எண்ணங்கள் அனைத்தையும் பயன்படுத்தி, வரும் பிரச்சினைகளை சமாளித்து அதன்மூலம் உங்கள் ஆத்மாவை வலுப்படுத்தும் சக்தியாக மாற்றவும். ஒருபோதும் ஒரு பிரச்சினையைத் தவிர்ப்பதோ அல்லது மறுப்பதோ கூடாது. அவ்வாறு செய்து திருப்தி அடையாதீர்கள். இதுவே எங்கள் அமைப்பின் பாடங்களில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. வாழ்க்கை என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தரப்பட்ட பயிற்சி புத்தகத்தைப்போல இருக்கும். ஒவ்வொரு பிரச்சினைக்கும் முயற்சி செய்து தீர்வுகாண முயலவும்.

உங்களுக்கான தனியே பிரச்சினைகள் அடங்கிய பயிற்சி புத்தகம் இருக்கிறது. அவை அனைத்திற்கும் விடை காணவேண்டும். வாகை சூடும் சிந்தனை என்பதைக் கற்றுக்கொள்வதற்கு இது ஓர் அடிப்படைத் தேவை என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். உங்களுடைய பிரச்சினைகளை நீங்களே தீர்க்க வேண்டும். ஒருமுறை செய்தால், அல்லது அவ்வாறு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தால், மற்றவர்களுக்கு வழிகாட்டுங்கள். உதவி செய்வதோடு திருப்தி அடையாமல், பெரிய ஆக்கபூர்வமான அமைப்பை ஏற்படுத்த முயலுங்கள். இதுவே வாகை சூடும் சிந்தனையின் வடிவமைப்பு ஆகும்.

4. உங்கள் நேரத்திற்கு முதலாளியாக இருங்கள்

வாகை சூடும் சிந்தனையைப் பயன்படுத்தும்போது கிடைக்கும் உண்மையான சக்தி எப்படிப்பட்டது என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அடிப்படையான கருத்து என்னவென்றால், அதனை வெல்ல முடியாத சக்தி என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

இன்ஸ்டிடியூட் ஃபார் ரிசர்ச் இன் ஹ்யூமன் ஹேப்பினஸ் நிறுவனத்தைத் துவக்கியபிறகு பலரிடம் தொடர்பு ஏற்பட்டு பல்வேறு வழிகளில் சிந்திப்பதைக் கேட்டறிந்தேன். சிலர் வெளிக்ச்சத்திலும், சிலர் இருளிலும் வாழ்வதுபோலத் தெரிந்தது. சிலர் மகிழ்ச்சியாகவும், சிலர் சோர்வடைந்தும், அனைவரும் பலவிதமான சிறிய நாடகங்களை அரங்கேற்றுவது போலத் தோன்றியது. எங்கள் நிறுவனத்தின் செயல்பாடுகளில் தொடர்பு கொண்ட பிறகு, பலர் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொண்டார்கள்.

வாழ்க்கை நடத்தும்போது வெளிச்சமான மற்றும் இருட்டான பகுதி, மகிழ்ச்சியான அல்லது சோகமான காலகட்டங்களைக் கடந்து போகிறார்கள். சில சமயங்களில் அவை அவர்களுக்கு சாதகமாகவும் சில சமயங்களில் இல்லாமலும் போகலாம். அத்தகைய சூழ்நிலையில் அவர்களைக் கவனித்தால், அவர்கள் எப்படி சமாளிக்கிறார்கள் என்பதற்கேற்ப, அவர்களைப் பிரித்தால், அனைவரும் அடியில் குறிப்பிட்ட ஏதாவது ஒரு பிரிவில் இருப்பார்கள்.

ஒரு பிரிவினர் எல்லாம் அவர்கள் எதிர்பார்த்தபடி நடந்தால் சிறப்பாக செயல்படுவார்கள். காற்று பின் பக்கத்திலிருந்து வீசுவதால், எல்லாம் அவர்கள் நினைத்தபடியே நடக்கும், மிகச் சிறப்பாக வாழ்வார்கள். எதிர்க்காற்று வீச ஆரம்பித்தால், அவர்களால் சமாளிக்க முடியாது. காற்று அவர்களுக்கு சாதகமாக வீசினால் அவர்களின் பாய்மரக் கப்பல் வேகமாகப் போகும். ஆனால் காற்று சுழன்று திசை மாறினால் அவர்களால் முன்னேற முடியாது. சிலர் கவிழ்ந்து விடுவதும் உண்டு. மக்களில் பலர் இந்தப் பிரிவில் அடங்குவர்.

இன்னொரு பிரிவு மக்கள், வெல்லமுடியாத தைரியம் உடையவர்கள். அவர்கள் பிறக்கும்போதே பலமான மனவலிமை உடையவர்கள். அவர்களிடம் விடாப் பிடியான குணம் தெரியும். ஒருவரின் மனவலிமை சில தருணங்களில் மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கும். அது உண்மையானதா என்பதைச் சோதித்து, காலப் போக்கில் தெரிந்து கொள்ளலாம்.

வாகை சூடும் சிந்தனை என்னும் தத்துவம் உங்கள் நேரத்தின்மீது முழு ஆளுமையைத் தந்து, காலத்தை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும். நீங்கள் தத்துவத்தைப் புரிந்துகொண்டீர்களா என்று பார்க்க, ஆறு மாதத்திற்கு முன் அல்லது ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தீர்கள் என்று திரும்பிப் பாருங்கள். இந்தக் காலத்தில் எதைச் சாதித்திருக்கிறீர்கள், முன்னால் அல்லது பின்னால் போயிருக்கிறீர்களா, திசை தடுமாறினீர்களா அல்லது சரியான பாதையில் சென்றீர்களா என்று பாருங்கள். இதே போல் எப்போதும் நீங்கள் கடந்து வந்த பாதையைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அதனால், நீங்கள் ஒரு சரியான பாதையில் முன்னேறி இருந்தால், சில சமயங்களில் தோல்வி அடைந்தாலும், மொத்தத்தில் ஒரு பெரிய போட்டியில் வெற்றி பெற்றிருக்கிறீர்கள்.

வாகை சூடும் சிந்தனை என்பது ஒரு மரத்தின் வளர்ச்சியைப் போன்றது. மரம் வளரும்போது பல்வேறு சவால்களையும் கொடுமைகளையும் சந்திக்க வேண்டியிருக்கும். பலமான காற்று வீசி கிளைகளையும் இலைகளையும் உதிரச் செய்யும். தேவையான உரம் இல்லாமல் வேர்கள் வெளியே வந்து பட்டுப் போகும் நிலைகூட வரலாம். இருந்தாலும் என்ன நடந்தாலும் அது போராடி இன்னும் உயரமாக வளரும். வாகை சூடும் சிந்தனையானது இதுபோன்ற முயற்சியை அடிப்படையாகக் கொண்டது.

5. மூங்கில் மரத்தின் சக்தி உருவாக்கும் கணுக்கள்

வேறு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். நீங்கள் மூங்கில் மரத்தை நினைத்துப் பாருங்கள். அது வளரும்போது அடிமரத்தைப் பார்த்தால், அதனுடைய கணுக்கள் உச்சியில் போகப்போக சிறுத்துப் போய் இருக்கும். கணுக்களை ஏதோ ஒருவிதமான இயற்கையின் அமைப்பு என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆனால் நான் பார்க்கும்போது, மூங்கில் மரம் எவ்வளவு பாடுபட்டு கணுக்களை உருவாக்குகிறது என்று வியந்ததுண்டு.

மூங்கிலில் எட்டு முதல் பன்னிரெண்டு அங்குல இடைவெளிவிட்டு கணுக்கள் தோன்றும். ஒவ்வொன்றும் பலமானதாக இருக்கும். அடிமரத்தில் கணுக்கள் பெரிதாகவும் பலமானதாகவும் மேலே போகப்போக உச்சியில் சிறியதாகவும் வலுவில்லாமலும் இருக்கும். காற்றில் வளைந்து கொடுக்கும். இருப்பினும் காலப்போக்கில் மெல்லிதான, பலமில்லாத பகுதிகள் வலுப்பெற்று கணுக்கள் பெரிதாகி உச்சி இன்னும் உயரமானதாகிவிடும். நீங்கள் மூங்கில் மரத்தைப் பார்த்தால், அது நிதானமாக, பகுதி பகுதியாக வளர்வதைக் காணலாம். எனக்கு அது மனத்தில் பதியத் தக்கதாக இருக்கிறது. அது முப்பது அடி வளர்ந்தாலும், அறுபது அடி வளர்ந்தாலும், இணையற்றதாக இருப்பதற்குக் காரணம் அதன் கணுக்களே ஆகும்.

மூங்கில் மரங்கள் காற்றை எதிர்த்து நிற்கக் கூடியவை. எவ்வளவு காற்று வீசினாலும் மூங்கில் எளிதாக முறிவதில்லை. அது பலமான மரம் அல்ல. இருப்பினும் அது பலவீனமானது அல்ல. ஏனெனில் அது வளையக்கூடியது. காற்று வீசலாம், மழை பொழியலாம். ஆனால் அவற்றைப் பொருட்படுத்தாமல் மூங்கில் வளர்ந்துகொண்டே இருக்கும். அது தன்னுடைய வளர்ச்சியை

தண்டில் பதித்திருப்பதை நீங்கள் பார்த்து தெரிந்து கொள்ளலாம். “இப்படித்தான் நான் இவ்வளவு வளர்ந்திருக்கிறேன்” என்று சொல்வதுபோலத் தோன்றும். கணுக்களை உண்டாக்கும்போது மூங்கில் எப்படி நினைத்திருக்கும் என்று நான் சிந்திப்பதுண்டு. ஒவ்வொரு கணுவைக்கட்டும்போதும், அது இவ்வாறு நினைத்திருக்கலாம். “நான் இவ்வளவு உயரம் வளர்ந்திருக்கிறேன்” என்று மூங்கில் மரத்திற்கு தான் சாதித்திருக்கிறோம் என்ற உணர்வைத் தந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

நீங்கள் எப்படி உங்கள் வாழ்க்கையை உருவாக்குகிறீர்கள் என்பது, பலவிதத்தில் மூங்கில் மரத்தை ஒத்து இருக்கிறது. மூங்கிலைப்போல நீங்களும் மெலிந்து இருக்கிறீர்கள். மூங்கில் மரத்தின் அடிமரப்பகுதி குறுக்கே எட்டு அல்லது பத்து அங்குலம் மட்டுமே இருக்கும். அதைவிடப் பெரிதாக வளர முடியாது. முதலில் மூங்கில் மண்ணின்மேல், ஒரு குருத்தாகத் தோன்றும். அதற்குப் பிறகு நிதானமாக வளரும். ஆரம்பத்தில் இருந்த வளையும் தன்மையும் வலிமையும் இழப்பதில்லை. வளைந்து கொடுக்கும் தன்மையும் வலிமையும் இணைந்து ஒத்திசைவோடு இருக்கும். இதுவே வளர்ச்சிக்குத் தேவையானது.

வாகை சூடும் சிந்தனை என்னும் தத்துவம், வாழ்க்கையின் நல்ல நேரத்திலும் கெட்ட நேரத்திலும் வளர்வதற்குத் துணை புரிகிறது. இது மூங்கிலின் வளர்ச்சியைப் போன்றது. அடிப்படையில் மூங்கில் வளைந்து கொடுக்கும். இருப்பினும் வலுவானது. ஒரு பக்கத்தில் மட்டும் வளைந்தாலோ அல்லது வளையாமல் போனாலோ சரியாக இருக்காது. வில்லோ மரங்கள் மூங்கிலைப் போல் காற்றில் ஆடுவதில்லை, வளைவதில்லை. எனவே அவை எளிதில் உடைந்து போகின்றன. மூங்கில் துண்டாவதில்லை. ஆனால் வில்லோ மரம் எளிதில் துண்டாகி விடுகிறது. வில்லோ மரங்கள்கூட அவ்வளவு எளிதாக உடைவதில்லை என்று அறிந்திருப்பீர்கள். வலிமையாய்த் தோன்றுவதெல்லாம், உண்மையில் பலவீனமாய் இருக்கலாம், உடைந்தும் போகலாம். எது வளைந்து கொடுக்கிறதோ அதற்கு உண்மையான பலமும் உடைவதற்கு கடினமானதாகவும் இருக்கும். இதையே நீங்கள் அடைய முற்பட வேண்டும். ஏனென்றால் நீங்கள் வாழும் முப்பரிமாணமான உலகம் பாதுகாக்கப்பட்ட கண்ணாடி வீடு அல்ல. அதில் மழை பொழியும், காற்று வீசும், புயல் வரும், வறட்சியும் இருக்கும்.

நான் மூங்கில் உதாரணத்தை ஓர் உவமானமாகச் சொன்னேன். சிந்தித்துப் பார்த்தால், உங்கள் வாழ்க்கையும் விதியும் மாறி மாறி சுழற்சியில் வரும். ஒரு சுழற்சி எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்று தெரியாது. பல மாதங்கள், பல ஆண்டுகள் ஆகலாம். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. சில நேரங்களில் எல்லாம் நன்றாகவே நடக்கும். சில நேரங்களில் எதுவும் சுலபமாக நடக்காது. சோதனைக் காலத்தில்தான் அற்புதமான வழிகள் பிறக்கும் என்று நான் நம்புகிறேன். வாழ்க்கையின் திருப்புமுனைகளில் தவிர்க்க முடியாமல் உடன் இருக்கும் மக்களுடனும் சூழ்நிலையுடனும் ஒத்துப்போக முடியவில்லையே என்பதை உணர்வீர்கள். விளைவு, நீங்கள் துன்பப்படுவீர்கள். இத்தகைய காலகட்டத்தைக் கடக்காமல் இருப்பது நல்லதா என்று என்னைக் கேட்டால், இல்லை என்று சொல்வேன். ஏனென்றால் இத்தகைய சோதனைக் காலத்தில் தான் அற்புதமானவை நிகழ ஆரம்பிக்கும்.

வாழ்க்கையை இவ்வாறு பார்த்தால், சோதனைக் காலத்தைக்கண்டு அஞ்ச வேண்டியதில்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள். சோதனைக் காலத்தில் உங்கள் ஆத்மா மிகவும் அதிகமான ஊட்டத்தைப் பெற்று, நீங்கள் முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்வீர்கள். இதனை மூங்கில் மரம் புதிதாக ஒரு கணுவை உண்டாக்குவதற்கு ஒப்பிடலாம். பத்து அல்லது பன்னிரெண்டு அங்குலம் மெதுவாக வளர்ந்து ஒரு கணுவை உருவாக்கும் வரையில் வளர்கிறது. இது மூங்கிலுக்கு ஒரு வலியைத் தரும் காலமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இதுவரையில் வளர்ந்ததுபோல் சுலபமாக கணு என்பதை உண்டாக்காமல் வளரக்கூடாதா என்று நினைக்கலாம். மேலும் முப்பது அல்லது அறுபது அடி உயரம் வரை தடங்கல் ஏதும் இல்லாமல் வளர்ந்தால் அற்புதமாக இருக்கும் என்று கனவு காணலாம். இருப்பினும் ஒவ்வொரு எட்டு அல்லது பன்னிரெண்டு அங்குலம் வளர்ந்ததும் நிறுத்திவிட்டு ஒரு கணுவை உருவாக்கு கிறது. இவ்வாறு நடக்கும்போது ஒரு எதிர்ப்பு உணர்வும், தேங்கி நிற்பது போலவும் தோன்றும். தன் விருப்பப்படி ஏன் வளர முடிவதில்லை, ஏன் இத்தகைய தடங்கலை அனுபவிக்க வேண்டும் என்று அதற்கு வியப்பாக இருக்கும்.

மூங்கிலுக்கு இது ஒரு துயரமான காலமாகும். ஏனென்றால் அது தொடர்ந்து வளர விரும்பினாலும் அது ஒரு கணுவை உண்டாக்க வேண்டியிருக்கிறது. அது ஒரு குழப்பத்தை அனுபவிக்கிறது என்று நான் எண்ணுகிறேன். ஒரு தடை எதிர்ப்படும்பொழுது,

விரைவில் சக்தி உள்ளுக்குள் ஒன்றுதிரண்டு கணு உருவாகின்றது. கணுவை உருவாக்கிவிட்டால், மூங்கில் அடுத்த கணு வரும் வரையில், வழக்கம்போல் வளரலாம். இவ்வாறு கணுக்களை உருவாக்குவது மரத்துக்கு மிகவும் துயரமானதாக இருந்தாலும், அதன் காரணமாகவே, அதனால் தொடர்ந்து வளர முடிகிறது. இதை அது உணராமல் இருக்கலாம். கணுக்கள் அதன் வளர்ச்சிக்கு அடிப்படை ஆகும்.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால், விதியும் அதிர்ஷ்டமும் சுழற்சியில் வரும். சில நேரங்களில் எல்லாம் நன்றாக நடக்கும். சில நேரங்களில் எதுவுமே நடப்பதில்லை. வாய்ப்புக்கான காலம் துயரமான காலம். இந்தச் சமயங்களில் நீங்கள் வளர்ந்து கணுக்களை உண்டாக்கவேண்டும். துயரமான காலமே உங்கள் வாழ்க்கையின் கணுக்கள் ஆகும். ஒருமுறை கணுக்களை உருவாக்கிவிட்டால், அடுத்த கட்டத்திற்கு முன்னேறிவிடலாம்.

உங்கள் வாழ்க்கையை ஒருமுறை திரும்பிப் பார்த்து எப்போது நீங்கள் அதிகமாக கற்றுக்கொண்டீர்கள் என்று பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் சில காலம் கஷ்டப்பட்டிருப்பீர்கள், மற்றவர்கள் சொற்களால் காயப்பட்டிருப்பீர்கள், வணிகத்தில் கஷ்டப்பட்டிருப்பீர்கள், திவாலாகி இருப்பீர்கள், நோயினால் அவதிப்பட்டிருப்பீர்கள். இருந்தாலும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, உங்கள் அனுபவங்களைத் திரும்பிப் பார்த்தால் அந்த நாட்களே உங்களுக்கு இனிமையான நினைவுகளைத் தரும். எனவே இனி வாழ்க்கை பொறுக்கமுடியாது என்று வரும்போது, வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்குப் போவதற்கு முன்னர், நீங்கள் ஒரு கணுவை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள்.

6. கடினமான சூழ்நிலையில் வருடாந்திர வளையங்களை உருவாக்குதல்

கடந்த பகுதியில் வாழ்க்கைக்கு உவமானம் காட்ட மூங்கில் வளர்ச்சியைப் பயன்படுத்தினேன். சாதாரண மரம் கூட இதற்குப் பொருந்தும். மூங்கிலைப்போல் கணுக்கள் இல்லாமல், இவற்றில் வருடாந்திர வளையங்கள் இருக்கும்.

நான் கிராமத்தில் வாழ்ந்தபோது குப்பைகளை எரிப்பதற்கு அடுப்பு ஒன்றை உருவாக்கினேன். செங்கற்களையும்

கற்களையும் பயன்படுத்தி நெருப்பு பரவாமல் தடுக்கும்படி செய்தேன். அதன் பக்கத்தில் ஒரு மரம் இருந்தது. எரியும் நெருப்பு அதைக் கொன்றுவிடும் என்று நினைத்தேன். நான் எதிர்பார்த்ததற்கு மாறாக அப்படி நடக்கவில்லை. மற்ற மரங்கள் மடிந்த போதிலும் இந்த மரம் மட்டும் மேலும் உறுதியாகி வளர்ந்தது.

நெருப்பின் அடுப்பு பக்கத்தில் வளர்வது என்பது அந்த மரத்துக்குக் கொடுமையாக இருந்திருக்கும். ஆனால் அதன் வளர்ச்சி ஆண்டுதோறும் வளையங்களாக மரத்தில் தோன்றின. அடிமரம் படிப்படியாக பெரிதாகி முழு உயிர்ப்புடன் இருந்தது. மற்ற மரங்கள் இதைவிட இசைவான இடங்களில் வளரும் மரங்கள் புயல் காற்றில் சடுதியில் வீழ்வதைப் பார்த்திருக்கிறேன். இதை மனித வாழ்க்கையுடன் ஒப்பிட்டால், மற்ற மரங்கள் பெரிய நிறுவனங்களில் வேலை பார்க்கும் உயர்ந்த குடிமக்களைப் போலத்தோன்றியது. அவர்கள் பணக்காரக் குடும்பங்களில் இருந்து வந்தவர்கள், கொடுமை என்றால் என்ன என்று தெரியாமலேயே வாழ்ந்தவர்கள் ஆவார்கள். ஆனால் ஒரு பலத்த காற்று அடித்ததும் அதாவது அவர்கள் வாழ்க்கையில் ஒரு சிறு பின்னடைவு ஏற்பட்டாலும், அதன் அழுத்தத்தைத் தாங்க முடிவதில்லை.

அதற்கு மாறாக, கடினமான சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் கொடுமைகள் காரணமாக உருவான பலத்தைக் கொண்டவர்கள், அவ்வளவு எளிதாக துவண்டு விடுவதில்லை. துன்ப நிலைக்கு இடையில் உறுதியுடன் இருப்பதால் எந்த சங்கடத்தையும் கடந்து விடுவார்கள். எத்தகைய தடங்கல்களையும் தாண்டி விடுவார்கள். அதன்மூலம் அவர்களுடைய குணநலனில் வருடாந்திர வளையங்களைப் பதித்து தங்கள் உயர்ச்சியை உயர்த்திக் கொள்வார்கள்.

உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தால், அவர்கள் பெரும்பாலானோர் கடினமான சூழ்நிலையில் வாழ்ந்தார்கள் என்பது தெரியும். இது எதைக் காட்டுகிறது என்றால் துன்பநிலையை அனுபவிக்காமல், அவர்கள் ஆத்மாவில் வருடாந்திர வளையங்களைப் பதித்திருக்க முடியாது. எனவே வாழ்க்கையில் கடினமான சூழ்நிலைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பது மிகமுக்கியம். என்னைப் பொறுத்தமட்டில் நான் கடினமான சூழ்நிலையில் வளர்ந்ததால்தான், மக்கள் முன் நின்றுகொண்டு வாழ்க்கைப்

பிரச்சினைகளைச் சமாளிப்பது குறித்து, அறிவுரை கூற முடிகிறது. அந்த சமயங்களில் எதைப்பற்றி சிந்தித்தேனோ அவைகளை என்னுடைய வலிமை ஆக்கிக் கொண்டேன்.

துரதிருஷ்டம் என்னும் பேய்க்காற்று தந்த அடியினாலும், அனலும் பனிக்கட்டியும் போன்ற துயரங்களாலும் உடலுக்கும் ஆத்மாவுக்கும் ஒருவித தடுப்புசக்தி கிடைத்தது எனலாம். அதன் விளைவு, வாழ்க்கைப் பிரச்சினைகளை எப்படி சமாளிப்பது என்பதைப் புரிந்து கொள்வீர்கள். ஒருமுறை இந்த சாமர்த்தியம் கிடைத்துவிட்டால் புது அறிவையும் மற்றவர்கள் அனுபவங்களையும் உங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து புதிய கருத்துக்களை வெளிக்கொணரமுடியும். ஒவ்வொரு அனுபவத்தையும் ஒரு பாடமாகவும், உங்கள் ஆத்மாவுக்கு பலமுள்ள சக்தியாகவும் மாற்ற முடியும்.

7. நீண்ட தூர ஓட்ட வீரரைப்போல சிந்தியுங்கள்

புத்தகத்தின் இப்பகுதியில் வெல்லமுடியாத சக்தியைப்பற்றி குறிப்பிட்டேன். இப்போது அதனுடன் தொடர்புடைய தலைப்பான குறுகிய கால மற்றும் நீண்ட கால சிந்தனை என்பதைப்பற்றி நான் ஆராயவிரும்புகிறேன். ஒரு நிலைமையை இரண்டு விதமாகப் பார்க்கலாம் - குறுகிய காலம் மற்றொன்று நீண்ட காலம்.

எல்லாவற்றையும் நீண்ட கால கண்ணோட்டத்திலேயே பார்த்து குறுகிய காலம் முக்கியம் இல்லை என்று நினைக்கக்கூடாது. “மழைக்காலத்திற்கு உணவுப் பொருட்களைச் சேர்த்து வைத்துவிட்டு இப்போது எதை வேண்டுமானாலும் செய்வேன்” என்று கூறுவது நல்லது அல்ல. இப்போது கோடை காலம் என்றாலும் இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் இருக்கும். குளிர் காலத்திற்கான போதுமான விறகையும் கரியையும் வைத்திருப்பதால், இனி கவலைப்பட ஒன்றுமில்லை என்று சோம்பலாக நாட்களைக் கழிக்கக் கூடாது.

இருந்தாலும் நாம் தோற்றுவிட்டோம், இதைவிட மோசமான நிலை இனி வரப்போவதில்லை, நம்மால் தொடர்ந்து துக்கத்தையும் துன்பத்தையும் தாங்க முடியாது என்று நினைத்து சோர்ந்துவிடக் கூடாது. ஏனென்றால் இத்தகைய காலங்கள் குறைவாகவே இருக்கும். ஓரிரு ஆண்டுகள் வரை கவனம் செலுத்தினால், நீங்கள் சோர்வடைந்து நீங்கள் எதிர்பார்த்தபடி

நடக்கவில்லை என்று நினைக்கலாம். ஆனால் அத்தகைய சமயங்களில் உங்களுடைய சிந்தனையை முழுவதும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

குறுகிய காலத்தில் நீங்கள் வெற்றி அடையவில்லை என்றால் உங்களிடம் குறுகிய ஓட்டப்பந்தய வீரர் ஆவதற்கான திறமை இல்லை. உங்களுக்கு நூறு மீட்டர் ஓட்டத்தில் வெற்றிபெற முடியவில்லை என்பதால், ஓட்டப்பந்தய வீரர் ஆகும் திறமையே இல்லை என்று நினைக்கக்கூடாது. ஒரு சில மீட்டர்களே ஓடும் பந்தயங்களும் இருபத்திஆறு மைல்கள் ஓடும் மராத்தான் ஓட்டமும் உண்டு. குறுகிய ஓட்டம் ஓடுவதில் திறமை இல்லை என்றால், நீண்டதூரம் ஓடுவதற்கான திறமை இருக்கிறதா என்று உங்களையே கேளுங்கள். சில நேரங்களில் உங்கள் கண்ணோட்டத்தையே மாற்றுங்கள் என்பேன்.

நான் ஒரு ஓட்டப்பந்தய வீரன் அல்ல. நான் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது மராத்தான் போட்டியில் பங்கு கொண்டு, ஒரு நல்ல இடத்தைப்பெற்றேன். நீண்டதூர ஒட்டப்பந்தய அனுபவம் எல்லாவற்றிலும், நிதானமாக இருப்பது எப்படி என்பதன் முக்கியத்துவத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தது. ஓட்டப் பந்தயம் ஆரம்பித்ததும் என்னைப்போல் ஒத்த திறமை உள்ளவர்களுடன் ஓடி ஒரு நிதானமான வேகத்தை உணர்ந்தேன். சிறிது தூரம் ஓடிய பிறகு என் உடலில் மெல்ல கதகதப்பு வந்தவுடன் நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே ஓட முடியும் என்று தெரிந்தது. பாதிதூரம் வந்ததும், என்னுடைய வேகத்தை அதிகரித்தேன். அப்போது என்னுடைய கால்கள் மேலும் நீளமாவது போல் உணர்ந்தேன். தொடர்ந்து வேகத்தை அதிகரித்ததும் குறுகிய ஓட்டத்தில் என்னை எப்போதும் தோற்கடிக்கும் வீரர்களையும் முந்திக்கொண்டு ஓட முடிந்தது.

குறுகிய ஓட்டப் பந்தய வீரர்களின் உடல் வலுவாக இருந்தாலும், நெடுதூர ஓட்டப் பந்தயத்தில் அவர்களுடைய நடை தவறிப்போனால் அவர்களால் தொடர்ந்து ஓட முடியாது. மிக வேகமாக ஓடினால் பாதி தூரத்தில் விழுந்து விடுவார்கள் மூச்சு வாங்கும். களைப்படைந்து ஓய்வைத் தேடுவார்கள். நான் அவர்களை முந்தியபோது அவர்கள் முகங்களில் வியப்பைப் பார்க்க முடிந்தது. என்னை முந்த முயன்றபோது முடியாமல் பின்தங்கிவிட்டனர். என்ன நடந்தது என்பதை நம்பமுடியவில்லை. உண்மையில் அது ஒரு வியத்தகு அனுபவமாக இருந்தது.

உங்கள் நடையைச் சீராக்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றி இங்கே நான் பேசி இருக்கிறேன். உங்கள் வலிமையை சரியாக எடைபோட்டு, எப்போது சற்று அதிகமான முயற்சி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து, நீண்ட கால ஓட்டத்தில் சிறந்த முடிவுகளைப் பெறவேண்டும். மேலும் முன்னேற்றம் பெற எப்போதும் இடம் இருக்கிறது.

8. திறள் எண்ணிக்கையின் விளைவு

எங்கள் நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு உண்மையைப் பற்றி படிப்பது உண்மையில் ஒரு தலைவலியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். புத்தகங்களைப் படிப்பதற்கு நேரம் இல்லை என்பதும், கருத்தரங்குகளில் கற்றுக்கொள்வதில் உள்ள கஷ்டத்தினாலும் ஏற்பட்ட கவலையால் இருக்கலாம்.

குறுகிய காலத்தை மட்டும் பார்த்தால், மக்களின் திறமை வெவ்வேறு அளவில் இருக்கும். ஒரு குழுவிடம் ஓராண்டு காலத்தில் ஒன்றில் வல்லமை பெறுங்கள் என்றால், மற்றவர்களைவிட சிலர், வேகமாகக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் நம்முடைய குறிக்கோள் ஓராண்டு காலத்தில் வல்லமை பெறுவது அல்ல. ஓராண்டு காலத்தில் இந்த உலகத்தைவிட்டுப் போவதும் அல்ல. சவால் என்னவென்றால் உங்கள் வாழ்நாளில், உங்கள் ஆத்மாவுக்கு எவ்வளவு ஊட்டச்சத்து பெற முடியுமோ அதைப் பெற்று, உங்கள் குணநலனை மேம்படுத்திக்கொண்டு மேல் உலகத்திற்குத் திரும்புவதாகும்.

வேகமாகப்போய் குறுகிய காலகட்டத்தில் எதையாவது சாதிக்க விரும்பினால், அநேகமாக நீங்கள் வெற்றி பெறமாட்டீர்கள். இருந்தாலும் சற்று நீண்ட கால அளவில் பார்த்தால், பல்வேறு சிந்திக்கும் வழிகள் இருப்பது தெரியும். ஒருவரின் திறமையையும் சாதனைகளையும் அளப்பதற்கு, ஓராண்டு காலத்துண்டுகளாகக் கணக்கிட்டுப் பார்ப்பது சரி அல்ல. மூன்று அல்லது நான்கு ஆண்டு துண்டுகளாகப் பிரிப்பதுகூட போதாது. காலகட்டத்தை நீட்டிப்பது அவசியம். சிலர் ஓராண்டு காலத்தில் ஒரு பாடத்தைக் கற்பதில் களைத்துப் போய் விட்டுவிட்டால், படிப்பதற்கு இன்னும் நீண்டகாலம் தேவை என்று புரிந்து கொள்ளுங்கள். இவ்வாறே நீங்கள் உங்கள் சிந்தனையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்தால், நீண்டதூர ஓட்டப்பந்தய வீரரைப்போல்

சிந்திக்கிறீர்கள். மெல்ல மெல்ல, ஆக்கபூர்வமான விளைவுகளைப் பார்க்கலாம். வியப்புக்குரியது என்னவென்றால், நீங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக குறுகிய ஓட்டப்பந்தய வீரரைப்போல் மிக விரைவிலேயே நல்ல விளைவுகளைப் பார்க்கலாம். உங்களால் செய்ய முடிந்ததற்குக் காரணம் குவிக்கப்பட்ட விளைவு ஆகும். சேர்த்து வைத்ததன் விளைவு எனலாம். உங்களிடம் குறிப்பிட்ட திறமை ஏதும் இல்லாமல், மெதுவாகப் போவதற்கு உங்களையே நொந்து கொண்டாலும், நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்தால், குவிக்கப்பட்ட விளைவு விரைவில் வேலை செய்ய ஆரம்பிக்கும். ஓரளவு நீங்கள் கட்டுப்பாட்டுடன் இருந்தால், ஓரளவு உங்கள் அறிவை அதிகமாக்கி இருந்தால், இதுவரையில் நீண்ட காலம் எடுத்துக் கொண்டதை இப்போது குறுகிய காலத்தில் விரைவாக சாதிக்க முடியும். பார்ப்பதற்கு வியப்பாக இருந்தாலும் அப்படித்தான் நடக்கிறது.

புளித்த காடியை சாதத்துடன் கலந்து சிறிது காலம் வைத்தால் அது புளித்துப் போய் சாராயமாகிவிடும். அதே போல் அது அனுபவங்களைச் சேமித்துவைத்தால் சிறிது காலத்திற்குப் பிறகு அவை பலன் தரும். நீங்கள் எதிர்பாராத நேரத்தில் நிகழ்ந்து மேலும் முன்னே போக உந்துசக்தியைத் தரும். எனினும் இந்த புளித்துப் பொங்குதல் நடைபெற பல ஆண்டுகள் ஆகலாம் என்று நான் எச்சரிக்கிறேன்.

இதுபோன்ற விளைவுகள் பல உணவு வகைகளிலும் பானங்களிலும் நடப்பதைப் பார்க்கலாம். சிலவற்றின் உண்மை மதிப்பு உயர்வதற்கு பல ஆண்டுகள் அடைத்து வைத்திருக்க வேண்டும். திராட்சை சாராயம் ஒரு முக்கியமான உதாரணம் ஆகும். அடைத்து வைத்த குப்பிகளின் மதிப்பு எவ்வளவு ஆண்டுகள் அடைத்து வைத்திருக்கிறோமோ, அந்த அளவிற்கு உயரும். காய்ந்த கருவாடுகூட அப்படித்தான். நல்ல மீனைச் சாப்பிட விரும்பினால், புதிதாகப் பிடிக்கப்பட்ட மீனே சிறந்தது. இருப்பினும் பிடித்த மீன் கருவாட்டுக்கு ஈடாகாது. முதலில் மீனைக் காய வைப்பார்கள். பிறகு அதன்மேல் பாசி படரும். இது பெரிதும் ருசியை அதிகரிக்க உதவும். ஆனால் நல்ல சுவையை அடைவதற்கு நீண்ட நாட்கள் வைத்திருக்க வேண்டும். சில பொருட்கள் குறிப்பிட்ட காலம் வரையில் வைத்திருந்தால், அவற்றின் மதிப்பு முற்றிலும் மாறிவிடும்.

இன்னொரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். இரண்டு

விதமான மாணவர்கள் பள்ளித் தேர்வில் நன்றாக வெற்றி பெறுகிறார்கள். ஒருவன் பாடப் புத்தகங்களை ஆரம்பத்திலிருந்து கடைசி பக்கம் வரை, முன்னுரை முதல் அடிக்குறிப்பு வரை படிக்கிறான். இன்னொருவன் முக்கியமான கருத்துக்களை மட்டும் பொறுக்கி எடுத்து மனப்பாடம் செய்து கொள்கிறான். எந்தப் பகுதியிலிருந்து தேர்வில் கேள்வி வரலாம் என்று அவனுக்குத் தெரியும். மீதமுள்ள பகுதிகளை ஒருமுறை மேலெழுந்தவாறு பார்த்துவிட்டுப் போவான். குறுகிய காலத்திற்கு பின்னால் குறிப்பிட்டது உதவியாக இருக்கும். ஏனென்றால் குறுகிய காலத்தில் முக்கிய பகுதிகளைப் படிக்க முடியும். ஆனால், தங்கள் புரிதலை ஆழப்படுத்த நினைப்பவர்கள் நல்ல பலனைத் தர நீண்ட நாட்கள் ஆகும். பல ஆண்டுகள் அடித்தள முயற்சி காரணமாக அவர்களுக்கு மிகச் சிறந்த முடிவுகள் கிட்டும். ஏனென்றால் அவர்கள் ஆழமாகச் சிந்திக்கப் பழக்கப்பட்டு விட்டார்கள்.

தங்களின் உயர்ந்த நோக்கத்தை அடைய, நீண்ட காலமாக அடித்தள முயற்சியை மேற்கொள்பவர் உண்மையில் கெட்டிக்காரர் அல்ல. அவர்கள் பாதி வழியில் நின்று சாதித்ததை நினைத்துப் பார்த்தால், அவர்கள் மெதுவாகக் கற்பவர்கள் என்றும், வெற்றி பெறுவதற்கு மறைந்துள்ள சக்தி எதுவும் இல்லாதவர் என்றும் தெரியும். பாதிவழியில் நிறுத்திவிட்டால் எதையும் சாதிக்க முடியாது. எனவே ஓய்ந்துவிடக்கூடாது என்றும் புரியும். விட்டுவிடாமல் இருந்தால், தண்ணீரின் அடிமட்டத்தில் இருந்தாலும் இறுதியில் தண்ணீரின் மேல்மட்டத்திற்கு வருவது உறுதி. அவர்களது மனஉறுதியே அவர்களை அழைத்துச் செல்கிறது. தண்ணீரில் ஒரேயடியாக மூழ்கிவிடாமல், என்றாவது ஒருநாள் மேலே வரும்போது அவர்கள் குறிக்கோளை நோக்கி வெகுதூரம் முன்னேறி இருப்பதை உணர்வார்கள்.

இது பொதுவாகக் கல்விக்குப் பொருந்தும். பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அவர்களின் குறுகிய காலகட்டத்தில் ஆரம்ப மற்றும் உயர் நிலைப் பள்ளியில் பெற்ற படிப்பு மதிப்பீடுகளை வைத்து நன்றாகப் படிக்கிறார்களா இல்லையா என்று முடிவு கட்டுகிறார்கள். இருப்பினும் அவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும் . பாடத்தில் முக்கியமான பகுதிகளில் மட்டும் கவனம் செலுத்தி அடுத்து வரும் கல்வி ஆண்டின் பகுதியில் என்ன சொல்லித் தரப்போகிறார்கள் என்பதைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே படித்துவிட்டால்,

நல்ல மதிப்பெண்களைப் பெறமுடியும். இப்பேர்ப்பட்ட மாணவன் வாழ்க்கையிலும் வெற்றி பெறுவான் என்று, நிச்சயமாக சொல்ல முடியாது.

சில குழந்தைகள் பள்ளியில் மற்ற மாணவர்களுக்கு முன்பு ஆசிரியர் சொல்வது அனைத்தையும் புரிந்துகொண்டு எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் கூறுவார்கள். முதல் பார்வையில் அவர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள் போலத் தோன்றுவார்கள். ஆனால் அவர்கள் கடன் அட்டையை வைத்துக்கொண்டு எல்லா பொருட்களையும் வாங்குவதற்கு ஒப்பானவர்கள். அவர்களிடம் பணம் இல்லாததால், எல்லாவற்றையும் கடன் அட்டையில் ஏற்றிக்கொண்டு கூலி அல்லது ஊக்க ஊதியம் வரும்போது கடனை அடைப்பார்கள். அவர்கள் எல்லாவற்றையும் வாங்கமுடியும், ஆனால் எப்போதும் கடனிலேயே இருப்பார்கள்.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே தகவல்களைப் பெறும் மக்கள் குறுகிய காலகட்டத்தில் வெற்றி பெறுவார்கள். அதே போல் பாடத்தில் முக்கியமான பகுதிகளை மட்டும்ப டிக்கும் மாணவர்கள், அதே கேள்விகள் தேர்வில் வந்தால், நிறைய மதிப்பெண்கள் பெறுவார்கள். இரண்டிலும் அணுகுமுறை ஒன்றாக இருப்பதால் இத்தகைய மனிதர்கள் வெற்றியின் கனிகளைச் சுவைக்க முடியும். நான் வலியுறுத்த விரும்புவது எது என்றால் வாழ்க்கைக்குத் தேவையான, உண்மையான பலம் அவர்களிடம் இருக்கிறதா என்று உறுதியாகத் தெரியாது.

அவர்களுக்கு நல்ல சகஊழியரும் வேலை செய்ய ஏற்ற சூழ்நிலையும் இருந்தால், அவர்கள் தொழிலில் வெற்றி பெறுவார்கள். இருந்தாலும் சக ஊழியர் மற்றும் சூழ்நிலை ஆகிய பொருத்தம் அமைந்திருக்கும் அளவுக்கு விளைவுகளும் வேறுபடும். வெற்றி பெருமளவு அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. ஆனால் சிலருடைய வெற்றி அதிர்ஷ்டத்தை நம்பி இருப்பதில்லை. அவர்களுக்கு எத்தகைய சூழ்நிலை அமைந்திருந்தாலும் எத்தகைய சகஊழியர்களுடன் வேலை செய்ய நேர்ந்தாலும் அவர்களால் தொடர்ந்து நல்ல முடிவுகளைத் தரமுடியும். இது நான் ஏற்கனவே குறிப்பிட்ட திறள் எண்ணிக்கையின் விளைவாகும்

உங்கள் அறிவுத் திரட்டில் உள்ள அனைத்து விஷயங்களும் வாழ்க்கைக்கு கட்டாயம் இல்லை. இதனை “அவசியமற்ற தேவைகள்”[1] என்று குறிப்பிடலாம். அதே போல் பள்ளியில்

கற்றுத் தரப்படும் விஷயங்கள் தேர்வுக்கு வருவதில்லை. இருந்தாலும் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் படித்தவன் எத்தகைய சூழ்நிலை இருந்தாலும் ஒரே அளவு திறமையைக் காட்ட முடியும். இத்தகைய மனிதனே மிக உயர்ந்த நிலைக்கு உயர்வான்.

ஒரு பாடத்தில் உள்ள சுருக்கத்தை மட்டும் எடுத்துக் கொள்ளக் கூடாது. குறுகிய காலத்தில் வெற்றிக்கு ஒரு விரைவான வழி காட்டினாலும் நீண்ட கால அடிப்படையில் பார்த்தால், அது உங்களை உண்மையான வெற்றியின் பக்கம் அழைத்துச் செல்லாது.

9. அதிர்ஷ்டத்தை நம்பியிராமல் அடுத்த கட்டத்துக்கு தயார் செய்யுங்கள்

வியாபாரத்தில் இது முற்றிலும் உண்மை. சில்லறை வணிகத்தில் ஈடுபட்டிருந்தால் ஒரு குறுகிய கால லாபத்தை ஈட்டுவது ஓரளவு எளிதானது. உதாரணமாக எவரும் விற்காத ஒரு பொருளை விற்கலாம். இலவச பரிசுகளை வழங்கலாம் அல்லது முற்றிலும் புதிய பொருள் ஒன்றை வெளிக்கொண்டு வரலாம். குறுகிய காலத்தில் லாபம் சம்பாதிக்க பல வழிகள் உள்ளன.

ஒரு பொருள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பிரபலமாகும். ஆனால் நீண்ட காலத்துக்கு இது நிலைக்காது. அதிகமாக விற்கும் ஒரு பொருளுக்கு குறுகிய காலத்தில் நிறைய பணத்தை சம்பாதித்துத் தரும் திறமை இருக்கிறது. ஆனால் இத்தகைய வியாபாரம் போட்டியாளர்களை ஈர்க்கும். உங்கள் வியாபாரத்தை பலர் பின்பற்றுவார்கள். நிறைய போட்டியாளர்கள் தோன்றும்போது உங்கள் வியாபாரம் குறைந்துபோகும். சிறிது காலத்திற்கு நன்றாக இருக்கும் என்றாலும், நிறைய போட்டியாளர்கள் வியாபாரம் செய்ய வரும்போது, உங்கள் லாபம் குறைந்துவிடும்.

உதாரணமாக, நகரின் மையப்பகுதியில் நீங்கள் ஒரு தங்கும் விடுதி கட்டுகிறீர்கள். இந்த வியாபாரத்தில் வேலை செய்வதற்கு ஏற்ற விகிதம், அதாவது நிரம்பப்படும் அறைகள் எண்பது சதவிகிதம் இருந்தால் போட்டி நிறுவனங்கள் சந்தையில் நுழையும். உங்களால் எண்பது சதவிகிதத்திற்கு அதிகமாக உங்கள் அறைகளை நிரப்ப முடிந்தால், உங்கள் விடுதிக்கு தேவை இருக்கிறது என்று பொருள். உடனே மற்ற தங்கும் விடுதி

உரிமையாளர்கள் மேலும் விடுதிகளைத் திறப்பார்கள். அதன்விளைவு, புதிய விடுதி அருகில் திறந்தவுடன், திடீரென்று உங்கள் வியாபாரம் குறைந்துவிடும். அதற்கு மாறாக எழுபது சதவிகித அறைகளே நிரம்பினால், வியாபாரம் லாபத்தைத் தராது. எழுபது சதவிகிதத்திற்கு குறைவாக நிரப்பப்பட்டால், வியாபாரம் லாபம் தராது.

எழுபது சதவிகிதத்திற்கு குறைந்தால் நஷ்டம் வரலாம், எண்பது சதவிகிதத்திற்கும் அதிகமானால் போட்டியாளர்களை ஈர்ப்பீர்கள். எனவே உங்கள் விருந்தினர் எண்ணிக்கை எழுபதுக்கும் எண்பதுக்கும் இடையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒரு நல்ல இடத்தைக் கண்டுபிடிக்கிறீர்கள். அங்கு வேறு எந்த தங்கும் விடுதியும் இல்லை. நீங்கள் “இந்த இடம் அருமையாக இருக்கிறது. இங்கு ஒரு தங்கும் விடுதியைக் கட்டினால் நான் லாபம் சம்பாதிப்பது நிச்சயம்” என்று நினைக்கலாம். அதனைத் தொடர்ந்து உங்கள் திட்டத்தை முடித்தவுடன், உங்கள் கணிப்புக்கு ஏற்ப நிறைய பணம் சம்பாதிக்கிறீர்கள். உங்களையே பாராட்டிக் கொண்டிருக்கையில், ஒரு போட்டியாளர் உள்ளே நுழைந்து, உங்கள் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து செல்கிறார். லாபம் சம்பாதிக்க புதுமை என்னும் மதிப்பையே நீங்கள் நம்பி இருந்தால், வியாபாரம் நீடிக்காது. விரைவில் சீரழிந்துவிடும்.

யாரும் முயற்சி செய்யாத புது வியாபாரத்தைத் தொடங்குவது நல்லது. ஆனால் ஓரளவு வெற்றி கண்டபிறகு, நீங்கள் மனதில் நினைவு வைத்துக்கொள்ள வேண்டியது ஒன்று இருக்கிறது. விடுதி நிர்வாகத்தில், விருந்தாளிகள் திரும்பத் திரும்ப வருமாறு உறுதி செய்ய வேண்டும். அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் சேவைகளையும் தொடர்ந்து தரவேண்டும். ஒருமுறை தங்கியவர்கள் மீண்டும் மீண்டும் வர விரும்ப வேண்டும். அக்கம்பக்கத்தில் விடுதிகள் இல்லை என்ற காரணத்திற்காக, அவர்கள் வரக்கூடாது. இந்த முறையில் நீங்கள் நிறைய லாபம் சம்பாதித்தாலும், விருந்தினர்கள் படிப்படியாகக் குறைவார்கள். அவர்கள் திரும்ப வருவதற்கான சேவையை நீங்கள் தொடர்ந்து தருவது அவசியம்.

அக்கம்பக்கத்தில் நல்ல விடுதிகள் இல்லை என்றால், நீங்கள் நல்ல சேவையைத் தந்தாலும் தராவிட்டாலும் உங்களால் எண்பது சதவிகித அறைகளை நிரப்ப முடியும். ஆனால்

காலப்போக்கில், ஒரு போட்டியாளர் தோன்றி, உங்கள் உண்மை நிலையை வெளிப்படுத்தி விடுவார். உங்கள் போட்டியாளர் உங்களைவிட நல்ல சேவை செய்தால், உங்கள் வாடிக்கையாளர்களைக் கவர்ந்துவிடுவார். விரைவில் நீங்கள் வியாபாரத்திலிருந்து விலக நேரிடும்.

சில நேரங்களில் முதல் பார்வையில் பார்க்கும்போது உங்களுக்கு சாதகமாக வசதியாக, உங்கள் பிரார்த்தனைக்கு ஏற்ப, நிகழ்வுகள் நடப்பதுபோலத் தோன்றும். உண்மையில் நீங்கள் நினைப்பதைவிட அதிகமாகவே நடக்கலாம். ஆனால் அவற்றை நம்பி இருக்கக்கூடாது. உண்மையில் அவ்வாறு நிகழ்ந்தால், ஏற்றுக் கொண்டு, அதற்கு அடுத்த கட்டத்திற்குத் தயாராக வேண்டும். சூழ்நிலை நன்றாக இருந்தாலும் மோசமானாலும், பொருளாதாரம் பொங்கி எழுந்தாலும் அமிழ்ந்து போனாலும், அடிப்படையில் எப்போதும் நல்ல பொருளை, நல்ல சேவையைத் தந்து, சராசரி நிலையைப் பராமரிக்க வேண்டும். கேட்பதற்கு சற்றுமந்தமாக இருந்தாலும், இது ஒரு முக்கியமான மனப்பாங்கு என்பதால், இதை நீங்கள் செயல்படுத்துவீர்கள் என்றும் நான் நம்புகிறேன்.

10. நிலைமை சாதகமாக இருந்தால் அன்பு என்னும் விதையை விதையுங்கள்

இதுவரையில் துன்ப நிலை பற்றியே கவனம் செலுத்தி இருந்தேன். நல்ல நேரம் என்பதும் முக்கியமானதே. எல்லாம் நன்றாக நடக்கும்போது, எல்லாம் நீங்கள் நினைத்தபடியே வெற்றி அடையும்போது, வாகை சூடும் சிந்தனை உங்களுக்கு அவசியமாக இருக்காது என்று நினைக்கலாம். "எல்லாம் திட்டமிட்டபடியே நடக்கிறது. எல்லாம் நிறைவேறுகிறது. இனிமேல் எனக்கு எந்தவித பிரச்சினைகளும் இல்லை" என்று உங்களுக்குள் நினைத்துப் பார்க்கலாம். ஆனால் மறைந்திருக்கும் இடர்ப்பாடுகள் இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும்.

நல்ல நேரங்களையும் கெட்ட நேரங்களையும் கீழே குறிப்பிட்டபடி பார்க்க வேண்டும். கஷ்டகாலம் என்பது உங்களுக்கு நிறைய வாய்ப்புக்களைத் தந்து உங்களையே கவனமாக உள்நோக்கிப் பார்ப்பதற்கு உதவும். உங்களைப்பற்றி சிந்திக்க நிறைய நேரம் கிடைக்கும். அவ்வாறு சுயபரிசோதனை செய்யும்போது, உங்களுடைய குணநலனைப் பற்றி ஆழமாகத்

தெரிந்து கொள்ளலாம். கஷ்ட காலம் என்பது பயிற்சி காலம் ஆகும்.

எல்லாம் நன்றாகவே நடக்கும்போது என்ன செய்ய வேண்டும்? நல்ல நேரங்களில் நீங்கள் அன்பைத் தருவதற்குப் பழக வேண்டும். உங்களுக்குக் கிடைக்கும் ஆதாயத்தைப் பற்றி மட்டுமே கவனமாக இருக்கக் கூடாது. மாறாக ஆன்மிகம் என்ற பொருளில் முதலீடு செய்யுங்கள். பேருண்மையின் சட்டங்களில் முதலீடு செய்யுங்கள். வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் அன்பைப் பிறருக்குத் தரவேண்டும்.

நான் லாப நஷ்டம் குறித்து பேசவில்லை. நல்ல நேரங்களில் நீங்கள் விதைக்கும் அன்பு என்னும் விதைகள், உங்களுக்கு கஷ்ட காலம் வரும்போது உங்கள் வாழ்க்கையை எளிதாக்கும். எல்லாம் மோசமாகப் போய்க்கொண்டிருக்கும்போது மற்ற மனிதர்கள் உங்களுக்கு உதவ முன்வருவார்களா என்பது, நீங்கள் நல்ல காலத்தில் எத்தனை அன்பு என்னும் விதைகளை விதைத்தீர்கள் என்பதைப் பொறுத்தது. எளிதாகச் சொல்வதானால் நீங்கள் சிக்கலில் இருந்தால், உங்களை வலுப்படுத்திக் கொள்வதில் தயக்கம் கொள்ளாதீர்கள். காலம் நல்லதாக இருந்தால் அன்பு என்னும் விதைகளை விதையுங்கள். இந்தச் சமயத்தில்தான் நமக்கு அனைத்தையும் தரும் அன்பைப் பழக வேண்டும் என்று உங்களிடமே சொல்லிக் கொள்ளுங்கள் இது மிகவும் எளிதான தத்துவம்போலத் தோன்றும். இருப்பினும் தொடர்ந்து வெற்றி பெறுவதற்கு இதுவே வழி.

துன்ப காலம் வரும்போது, மக்கள் இல்லாத ஒன்றுக்கு ஏங்குவார்கள். அவர்களின் கெட்ட நேரத்தையும் துயரத்தையும் நினைத்து வருந்துவார்கள். மற்றவர்கள் தரும் உதவியை நம்பி இருப்பார்கள். நிலைமை தேறும்போது கர்வம் அதிகமாகி, தாங்கள் பெற்ற வெற்றி முழுவதும் தங்கள் சொந்த முயற்சியால் வந்தது என்று நினைப்பார்கள். கர்வம் அதிகமாகி நண்பர்கள் அவர்களை விட்டுவிடுவார்கள். இத்தகைய மனிதர் எல்லாம் சுமுகமாக ஓடிக் கொண்டிருக்கும்போது, எல்லாம் சரியாகச் செய்வார்கள். ஆனால் காலம் மோசமாகும் போது, நொறுங்கி விடுவார்கள் அவருக்கு யாரும் உதவிக்கு வரமாட்டார்கள்.

உங்கள் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால், சில நேரங்களில் உங்களுக்கு ஆபத்து அல்லது கவலைக்கிடமான நேரத்தில் யாரும் அறிவுரை தரவில்லையா? உங்களுக்கு இத்தகைய அனுபவம் ஏற்பட்டிருந்தால், நன்றாக இருந்த

நாட்களில் நீங்கள் கர்வமாக இருந்தீர்கள். கர்வமாக இருப்பவர்கள் தங்களையே உயர்வாக நினைப்பவர்கள், மற்றவர்கள் தங்களை மையப்படுத்தி தங்கள்மீது அன்பு செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்று நினைப்பார்கள். அவர்களுக்கு மோசமான தோல்வி வரும்வரையில், எவரும் அறிவுரைகூட கூறமாட்டார்கள். ஒளி வெள்ளத்தில் தனித்து நிற்கும் கோமாளியைப்போல் இருப்பார்கள். தாங்கள் மிகவும் புகழ்பெற்றவர்கள் என்று நினைப்பார்கள். ஆனால் சற்று நின்று சுற்றிப் பார்த்தால், அவர்களைக் காண எவரும் இருக்க மாட்டார்கள். அவர்கள் சிக்கலில் இருக்கும்போது சமாளிக்க முடியாமல் போகும்போது, எங்கு தவறு செய்தார்கள் என்று கடைசியில் தங்களைத்தானே கேட்டுக் கொள்வார்கள்.

அதற்கு மாறாக தாங்கள் நன்றாக இருக்கும்போது மற்றவர்களை மறக்காதவர்கள் தொடர்ந்து அன்பு என்னும் விதைகளை விதைத்தவர்கள் தாங்கள் சிக்கலில் சிக்கிக்கொள்ளும்போது யாராவது ஒருவர் வந்து தக்க அறிவுரை தந்து காப்பாற்றுவார்கள். இதற்கு விதிவிலக்கு என்பதே கிடையாது. யார் ஒருவர் அன்பான இதயத்துடன் மற்றவர்கள்மீது அக்கறை காட்டுகிறாரோ அவர் பலருக்கும் நம்பிக்கை அளிக்கிறார். அதே சமயம் நேர்மையையும் வளர்த்துக் கொள்வார். இது சகஜம். எனவே தயவு செய்து இதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

நீங்கள் அடைந்த வெற்றியினால் எளிதாகக் கர்வமடைந்தவர்கள் குறிப்பாக கவனமாக இருக்க வேண்டும். உங்கள் நிதானத்தை இழக்காதீர்கள் அல்லது சாதாரண வெற்றியினால் எளிதாக திருப்தி அடையாதீர்கள்.

11. ஒரு படி மேலே உங்கள் குறிக்கோள் இருக்கட்டும்

இன்னொரு விதமான மக்கள், எண்பது சதவிகிதம் வெற்றி கண்டபிறகு திடீரென்று தங்கள் வழியில் தடுமாறி தோல்வியில் விழுவார்கள். இது எப்படி என்றால், சிலர் எண்பது சதவிகிதம் உயரமான மலையில் ஏறியபிறகு மலை உச்சியை எட்டும் தூரத்தில் பார்த்த பிறகு திடீரென்று வழுக்கி விழுவார்கள். இந்த நூலைப் படிப்பவர்களுக்கு இதுபோன்ற ஒத்த நிகழ்ச்சிகள் நடந்தது நினைவுக்கு வரும்.

இத்தகைய அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா? சற்று

பின்னோக்கிப் பாருங்கள். நீங்கள் வெற்றி அடைவதற்கு முன்பு ஏதோ நடந்து உங்கள் கனவுகளைத் தகர்த்தது. இத்தகைய மனோபாவத்தை எப்படி தாண்டிப் போவது என்று தெரியாவிட்டால் உங்களால் ஒருபோதும் உண்மையான வெற்றியை அடைய முடியாது.

தங்களால் ஓரளவு மட்டுமே சாதிக்க முடியும் என்று நினைப்பவர்கள் தங்களிடமிருந்து வெற்றி நழுவிப் போகும்போது அடிமனதில் வெற்றி பெற்றுவிடுவோமோ என்னும் பயம் இருக்கும். இத்தகைய மக்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வெற்றி கிட்டிவிடும் நேரத்தில் அவர்கள் பயந்து தங்கள் வீழ்ச்சிக்கான விதைகளைத் தாங்களே விதைக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் ஏன் செய்கிறார்கள் என்றால் முழு வெற்றியைக் கண்டு பயப்படுகிறார்கள். அதைப் பாடுபட்டுப் பெறவில்லையே என்று கவலைப்படுகிறார்கள். அதன் விளைவு வெற்றி தங்கள் கைகளிலிருந்து நழுவவும்படி எதையாவது செய்துவிடுவார்கள். இன்னும் சிறிது தூரமே செல்ல வேண்டும் எனும்போது, நொடித்துப் போய் கனவுகள் கலைந்து போகின்றன. இருந்தாலும் பிரச்சினை அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்ற மனஉறுதியில் இருக்கிறது. அவர்களே நூறு சதவிகித வெற்றியை அடைந்து விடுவோமோ என்று நடுங்குகிறார்கள்.

தங்கள் துணைவர் ஒரு நிறுவனத்தில் சேர்ந்து வெற்றி பெற்று நிறைய சம்பாதிக்க வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். தங்கள் துணைவர் நிர்வாகி ஆக வேண்டும் என்று விரும்புகின்றனர். அப்போது நிர்வாகியின் துணைவர் என்ற பெயர் கிட்டும். இது அவர்களை அச்சமடையச் செய்து ஏதாவது செய்து தங்கள் துணைவரின் புகழைக் குறைத்துவிடுகின்றனர். உதாரணமாக ஏதாவது செய்து புரளியைப் பரப்பலாம். தங்களுடைய துணைவர் முக்கியமானவர். ஆனால் தம்மால் ஒத்துப்போக முடியாமல் அவர்களின் நிலைமை கடினமாகலாம். அதன் விளைவாக அவர்களை அறியாமலேயே தங்கள் துணைவர் முன்னேற முடியாமல் எதையாவது செய்துவிடுகிறார்கள். இது ஒரு சாதாரணமாக நடக்கும் நிகழ்வுதான்.

இதற்குக் காரணம், அவர்களுக்கு உண்மையான வெற்றிக்கான போதுமான அனுபவம் கிடைக்கவில்லை. வெற்றியை அனுபவிக்காதவர்கள் தாங்கள் நன்றாக வெற்றி பெற்று

விடுவோம் என்று தெரிந்தால் பயந்துவிடுகிறார்கள். ஒருவேளை தோல்வி அடைந்தால் என்ன நடக்கும் என்று பயந்து ஓடிப்போக முயல்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் அவர்கள் இருக்கும்போது தாங்கள் முன்னே அந்தச் சமயத்தில் எதிர்நிற்பது பியூஜி என்னும் உயர்ந்த மலை அல்ல. அது எத்தனையோ தூரத்தில் இருக்கிறது. வந்திருப்பது இன்னுமொரு மலைக்குச் செல்லும் அடிவாரத்திற்கு மட்டுமே. அவர்கள் மலைப்பகுதியில் ஓர் ஓய்வெடுக்கும் இடத்தையே அடைந்திருக்கிறார்கள்.

இத்தகைய மனிதர்கள் எப்போதும் சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்கள். தங்கள் இலக்கைப் பார்க்கமுடியும் என்று நினைக்கிறார்கள். அதை நோக்கி முன்னேறும்போது இலக்கை மேலும் உயர்த்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஒரு படி முன்னே சிந்தித்து, தூரத்தில் இன்னும் உயரமான இலக்கை நிர்ணயிப்பதை ஒரு பழக்கமாக்கிக் கொள்வது முக்கியம். இன்னும் ஓர் உயரமான மலை ஏறுவதற்காகக் காத்திருக்கிறது என்று தங்களுக்கு தானே சொல்லிக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய முடிந்தவர்கள் ஒருபோதும் தோற்க மாட்டார்கள். சிறிய பின்னடைவுகள் ஏற்படலாம். முடிவில் அவர்கள் வெற்றி பெறுவார்கள்.

மீண்டும் தேர்வு குறித்த உதாரணத்திற்குப் போவோம். தேர்வு எழுதி முடித்தவுடன் தேர்வில் வெற்றி பெற்று விட்டோமா என்று பார்ப்பதற்குக்கூட நேரம் இல்லாமல் முடிந்தது என்ற மகிழ்ச்சியுடன் தங்கள் கவலைகளை மறக்க ஓடிப் போவார்கள். இத்தகைய மனிதர்கள் அடிக்கடி தோல்வியைச் சந்திப்பார்கள். இன்னொரு பக்கம், சிலர் தேர்வு எழுதியவுடன் நேராக படிக்கும் அறைக்குச் சென்று, அடுத்த தேர்வுக்குத் தயாராவார்கள். இத்தகைய மனிதர்கள் எளிதில் சிக்கலில் மாட்டிக் கொள்வதில்லை. ஆனால் தேர்வு எழுதியவுடன் மகிழ்ச்சியினால் நிரம்பி வழிபவர்கள், அவர்கள் வாழ்க்கையில் மேடு பள்ளங்களைச் சந்திக்க நேரிடும். எனவே ஒன்றைச் சாதித்தவுடன் அடுத்த இலக்கை நிர்ணயித்துவிட்டு எப்படி அதற்குத் தயார் செய்வது என்று திட்டமிட்டு அடைய வேண்டும், என்று நான் விரும்புகிறேன்.

12. மாற்ற தக்கவாறு சிந்தியுங்கள், சோதனையை சாதகமாக்குங்கள்

வாகை சூடும் சிந்தனை குறித்து இன்னொரு குறிப்பினைச்

சொல்ல விரும்புகிறேன். இந்தத் தத்துவம் ஜயூடோ விளையாட்டின் கோட்பாடுகளை ஒத்தது. எதிராளியைத் தரையில் வீழ்த்துவதற்கு, உங்களுடைய பலத்தை மட்டும் பயன்படுத்தினால் போதாது. மூங்கில் உதாரணத்தில் விளக்கியது போல உங்களுக்கு ஏற்படும் தொல்லைகைளையும் சங்கடங்களையும் பயன்படுத்தி, அவற்றை உங்களுக்கு சாதகமாக்கி அவற்றிலிருந்து ஆக்கபூர்வமான ஒன்றைத் தயாரிக்க வேண்டும். அதுவே வாகை சூடும் சிந்தனை என்பது.

தனியாக நீங்கள் சிறிதளவே சாதிக்க முடியும். ஆனால் வெளியிலிருந்து வரும் சக்திகளை உங்களுக்கு சாதகமாக்கினால் உங்களால் இன்னும் சிறந்த ஒன்றை உருவாக்க முடியும். இதுவும் மிகவும் முக்கியமானது. நீங்கள் இதைத் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

ஜயூடோவைப் போலவே, வாகை சூடும் சிந்தனையில், எதிராளியின் பலத்தை அவருக்கு எதிராகவே பயன்படுத்த வகை செய்கிறது. சிக்கல்களாலும், தொல்லைகளாலும் அவதிப்படும்போது அவற்றைப் பொறுத்துக் கொண்டால் மட்டும்போதாது. எதிராளியின் பலத்தையே பயன்படுத்தி மேலே வரவேண்டும். எளிதில் மாற்றத்தக்கவாறு சிந்தித்து அந்தச் சூழ்நிலையை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளுங்கள். இதைப் போலவே எப்போதும் சிந்தித்தால், அனைத்தும் தொடர்ந்து மேன்மேலும் முன்னேற்றம் அடைவதைக் காணலாம்.

அடுத்த நகர்த்துதலுக்கு எப்போதும் தயாராக இருங்கள். இப்போது என்ன பிரச்சினையில் இருக்கிறீர்கள் என்று கேட்டுக்கொள்ளுங்கள். தெரிந்து கொண்ட பிறகு அதை எப்படி சமாளிப்பது என்று கண்டுபிடியுங்கள். நீங்கள் பல படிகள் தாண்டி முன்னே இருந்தால், விளைவு எப்போதும் உங்களுக்கு சாதகமாகவே இருக்கும்.

13. அன்றாடம் வெற்றிதரும் வாழ்க்கையை நோக்கி

மகிழ்ச்சியின் தொடக்க நிலை என்னும் புத்தகத்தில் நான் “உறைப்பனி பந்து விளைவு”[2] குறித்து எழுதி இருந்தேன். இந்த கருத்தைப் பற்றியே நான் இங்கே யும் பேசிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு சாதகமாக ஏதாவது

நிகழ்ந்தால் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படி முடியாவிட்டால் கூட அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டு மேலும் முன்னேற்றத்திற்கான விதைகளை நடவேண்டும். என்ன நடந்தாலும் சரி, உறைப்பனிப் பந்தைப் போல், உங்கள் அனுபவம் என்னும் கிடங்கில் சேமித்து வையுங்கள். அவ்வாறு செய்தால் உங்கள் வாழ்க்கை ஆனந்தமாக இருக்கும். வெற்றியிலிருந்து இன்னொரு வெற்றியை நோக்கிச் செல்ல முடியும்.

இந்தத் தருணத்தில் ஒரு குறிப்பிட்ட கோணத்திலிருந்து வாழ்க்கையைப் பார்க்கிறீர்கள். அது ஆக்கபூர்வமான சிந்தனையிலிருந்து சற்று மாறுபட்டது போல இருந்தாலும், விளைவு ஒன்றாகவே இருக்கும். ஆக்கபூர்வமான சிந்தனை சொல்வது என்னவென்றால் உண்மையில் கவலை என்பதே கிடையாது. தீமை என்பதே கிடையாது. இத்தகைய நோக்கு அனைத்தும், ஒளி ஒன்றே என்னும் கோட்பாட்டை நோக்கிச் செல்கிறது. அதன் மையக்கருத்து ஒளி மட்டுமே இருக்கிறது என்பதாகும். இந்த மாபெரும் உலகத்தில் வாழ்க்கையின் குறிக்கோள், உங்கள் அனுபவங்களில் ஒரு கண்ணைப் பறிக்கும் ஒளியைக் காண்பதும், அன்றாடம் வெற்றி மட்டுமே எஞ்சி நிற்கிறது என்பதாகும். இறுதி முடிவு ஆக்கபூர்வமான சிந்தனையின் முடிவைப் போன்றதே ஆகும்.

ஆக்கபூர்வமான சிந்தனை என்பது உடனடியாக, உயர்ந்த உணரும் நிலைக்குக் கொண்டு செல்வது என்பதாகும். இந்தத் தத்துவம் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவினாலும், உங்கள் வளர்ச்சி மேலெழுந்தவாரியானதே ஆகும். நீங்கள் அன்றாடம் சோதனைகளைச் சந்திக்கும்போது இவற்றைப் பயன்படுத்தி ஆன்மாவுக்குத் தேவையான தசையை உருவாக்கி உங்கள் உண்மை பலத்தை அதிகமாக்கிக் கொள்வது முக்கியம்.

இதில் நீங்கள் வெற்றி பெற்றால் நீங்கள் வலுவுள்ள தளராத மனத்தை உண்டாக்கி இருப்பது தெரியும். வாகை சூடும் சிந்தனையின் ஒரு பகுதி என்னவென்றால் உங்கள் தளராத மனம் பெரிதும் பலப்படுத்தப் பட்டிருக்கும். கஷ்டங்கள் அதன் உள்ளே நுழையமுடியாது. பிரச்சினைகள் வரும்போது அவற்றை உள்ளே வாங்கிக்கொண்டு அவற்றை ஆத்மாவுக்கு ஊட்டச்சத்தாக மாற்றிக்கொள்ளும், வாகை சூடும் சிந்தனையை நீங்கள் பயன்படுத்தினால் சுற்றுமுற்றும் பார்த்து எத்தகைய பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்கத் தயாராகி,

அவை ஏதாவது நிகழ்ந்தால் உள்வாங்கிக் கொண்டு அவற்றையே பலமாக மாற்றிக்கொள்வதாகும். இந்தத் தத்துவம் மிகவும் சக்திவாய்ந்தது. இது தளராத மனத்தின் வெளிப்பாடு ஆகும்.

யாராவது ஒருவர் உங்களைப் பாராட்டினால், வாழ்த்தை ஏற்று, பல மனிதர்களின் உதவியால்தான் இவ்வளவு நன்றாக செயல்பட முடிந்தது என்று, உங்களிடம் சொல்லிக்கொள்ளுங்கள். சாதனை உங்களுடையதே என்று நினைக்காமல் பணிவுடன் இருங்கள். பெற்ற வெற்றி, இறைவனின் உதவியாலும் எண்ணிலடங்காத பல்வேறு மக்களாலும் கிடைத்தது என்று நினைத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு நீங்கள் சாதிக்கிறீர்களோ அவ்வளவு பணிவாக இருக்க வேண்டும். கஷ்டங்கள் வரும்போது, நீங்கள் மேலும் வளர்வதற்கும் பலன் தருவதற்கும் கிடைத்த ஊட்டச் சத்து என்று நினைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு நினைத்தால், துன்பகாலத்தைக் கண்டு நீங்கள் அஞ்சத் தேவையில்லை. கஷ்டம் வரும்போது பாடங்களைக் கற்பதற்காகக் கிடைத்த காலம் என்று நினைத்து, அதை மனதார ஏற்றுக்கொள்ளுங்கள். இவ்வாறு துன்ப நிலையை ஏற்றுக்கொள்வதால், உங்கள் ஆத்மா வளர்வதற்கு பலம் பெற்று புது ஒளியைப் பாய்ச்ச முடியும்.

துன்பநிலை வரும்போது, உதாரணமாக உங்களை பதவி இறக்கம் செய்தால், அல்லது சம்பளத்தைக் குறைத்தால், அல்லது நீங்கள் வேலை பார்க்கும் நிறுவனம் திவாலானால், உங்களையே தற்சோதனை செய்து பார்த்து, இந்தக் காலத்தை முழுமையாக உங்களுக்கு அனுகூலமாக்கிக் கொள்ளுங்கள் இத்தகைய நேரங்களைச் சிந்திப்பதற்கும், ஆழ்ந்து தன்னையே நோக்குவதற்கும், பயன்படுத்தி உங்கள் ஆத்மாவை உரப்படுத்த கிடைத்த வாய்ப்பாக நினையுங்கள். இறுதியில், நிலைமை ஓரளவு சரியானதும், நீங்கள் ஆக்க சிந்தனையுடன் முயற்சி செய்து முன்னேறி நல்ல விளைவுகளை உண்டாக்குங்கள்.

இன்னொரு விதமாகச் சொன்னால், தன்னை உள்நோக்குதல் என்னும் புத்தரின் தத்துவத்தையும், ஹெர்ம்ஸ்[3] என்பவரின் ஆக்கபூர்வமான தத்துவம் ஆகிய இரண்டையும் நீங்கள் பயன்படுத்த வேண்டும். நிலைமை கெட்டுப் போகும்போது சாக்கியமுனி புத்தர் சொல்லித் தந்த தன்னையே உள்நோக்குதல் என்பதைப் பயன்படுத்துங்கள். எல்லாம் நன்றாக நடந்துகொண்டிருக்கும்போது மேலும் முன்னேற, வளர்ச்சியடைய ஹெர்ம்ஸ் கற்றுக் கொடுத்ததைப்

பயன்படுத்துங்கள். இன்ஸ்டிடியூட் ஃபார் ரிசர்ச் இன் ஹ்யூமன் ஹேப்பினஸ் நிறுவனத்தின் போதனைகளில் இரண்டு கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளோம். தன்னையே உள்நோக்குதல் மற்றும் முன்னேற்றம் - இரண்டையும் நன்றாகப் பயன்படுத்தி வெற்றி பெறலாம்.

ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சிபெற, விருத்திசெய்ய குறி வையுங்கள். கொடுமையில் கஷ்டப்பட்ட பிறகு, தன்னையே உள்நோக்குவது மட்டும் போதாது. நல்லதையும் கெட்டதையும் ஒன்றை ஒன்று நீக்கினால் போதாது. மாறாக, வரும் புயலை எதிர்கொண்டு, அவற்றின் பலத்தை உங்களுடையதாக்குங்கள். புயல் ஓயும்வரை சமாளித்துவிட்டு, மீண்டும் இருந்த நிலைக்கே போவது சரி அல்ல. கஷ்டங்களைச் சமாளித்தபோது நீங்கள் அனுபவித்தவற்றை உள்வாங்கிக் கொண்டு, உங்களுக்குள்ளே ஒரு சக்தியாக உருமாற்றிக் கொள்ளுங்கள். ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தீர்கள் என்று திரும்பிப் பார்த்தால், நீங்கள் நீண்ட தூரம் வந்திருக்கிறீர்கள் என்று சொல்ல வேண்டும். உங்கள் உயர்ச்சியில் மேலும் உயர்வு வந்திருக்கிறது என்றும் கூற வேண்டும். இது உங்களைப் பொறுத்தவரையில் உண்மையா என்று நீங்கள் சோதனை செய்து பார்க்கவேண்டும்.

மூங்கிலைப்போல நீங்கள் தொடர்ந்து வளர்ந்தால், நீங்கள் வாழ்க்கையில் அன்றாடம் என்னும் அடிப்படையில் வெற்றி காண்கிறீர்கள். கீழ்க்கண்ட அறிவுரையுடன் இந்த நூலை முடிக்க விரும்புகிறேன். தன்னையே உள்நோக்குதல் மற்றும் முன்னேற்றம் என்னும் இரு தத்துவங்களைப் பயன்படுத்தி உங்களை வெல்லமுடியாதவராக ஆக்கிக் கொள்ளுங்கள்.

1. ரியோஒகாவாவின் அன் அன்வேஷக்கபிள் மைண்ட் நூலைப் பார்க்கவும். (லான்டர்ன்புக்ஸ்) பக். 25
2. ரியோ ஒகாவாவின் ஸ்டார்டிங் பாயிண்ட் ஆஃப் ஹேபினஸ் நூலைப் பார்க்கவும். (லான்டர்ன்புக்ஸ்) பக். 78-80.
3. ஹெர்ம்ஸ், புத்த உணர்வு நிலையின் ஒரு பகுதியாகும். ஹெர்ம்ஸ் வளமை மற்றும் கலைகளின் கடவுள். அவர் பண்டய கிரேக்கத்தில் வாழ்ந்து, வளமையின் விதிகளை கலையுணர்வோடு போதித்தார். ரியோ ஒகாவாவின் “தி கோல்டன் லாஸ்” நூலைப் பார்க்கவும் (லான்டர்ன் புக்ஸ்) பக். 151-153

பின்குறிப்பு

இந்த நூல், ஹேப்பி சயின்ஸ் உறுப்பினர்கள் ஜூன் 1989 முதல் ஜூலை வரையில் நடத்திய நான்கு கருத்தரங்குகள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. என்னுடைய குறிக்கோள், பல உதாரணங்கள் வாயிலாக பல்வேறு கண்ணோட்டங்களில் காண்பித்து எப்படி அன்றாட வாழ்க்கையில் வெற்றி பெறுவது என்பதை செய்து காண்பிப்பதுதான். வெற்றி குறித்து கருத்துக்கள், வாழ்க்கை, மகிழ்ச்சி மற்றும் ஞானோதயம் பெறும் வழிமுறை ஆகியவற்றைப் பற்றி இந்த நூலைப் பல்வேறு வகைகளில் படிக்கலாம்.

இந்த நூலைக் கவனமாகப் படித்தால், சுய சிந்தனையையும் முன்னேற்றத்தையும் இணைக்கும் சித்தாந்தத்தில் மையக் கருத்து என்பது வாழ்க்கையைப் பற்றிய ஆழமான கண்ணோட்டம் மற்றும் அனுபவத்தில் முதிர்ந்த அறிவு ஆகியவற்றைக் காணமுடியும்.

ஹேப்பி சயின்ஸ் போதனைகளைத் தெளிவாக்கி, வாழ்க்கையில் வெற்றியைத் தேடுபவர்களுக்கு அவசியமான நூலாக அமையும்.

ரியோ ஒகாவா,
ஹேப்பி சயின்ஸ்

ஆசிரியரைப் பற்றி

ரியோ ஒகாவா ஹேப்பி சயின்ஸ் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தவர், மற்றும் ஒரு ஆன்மிகத் தலைவர் ஆவார். மனிதனின் மகிழ்ச்சிக்கான வழிகளைப் பற்றியும் ஆவி உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்.

அவர் 1956ல் ஜப்பானில் டோகமா என்னுமிடத்தில் பிறந்தார் டோக்கியோ பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பிறகு, டோக்கியோவை தலைமை இடமாகக் கொண்ட ஒரு வர்த்தக நிறுவனத்தில் சேர்ந்தார். பிறகு நியூயார்க் பல்கலைக் கழகத்தில் உள்ள பட்டதாரிகள் மையத்தில் சர்வதேச பொருளாதாரம் என்ற படிப்பைப் படித்தார். 1986ல் தன்னுடைய வர்த்தக வாழ்க்கையைத் துறந்துவிட்டு ஹேப்பி சயின்ஸ் அமைப்பை நிறுவினார்.

இளவயதினரிலிருந்து வணிக நிர்வாகிகள் வரையில் எல்லா மட்டத்திலும் உள்ள மக்களுக்காகவும் ஹேப்பி சயின்ஸ் கருத்தரங்குகளை உருவாக்கினார். பேரறிவு, கருணை மற்றும் மக்களுக்கு ஆன்மிக மற்றும் சமயம் தொடர்பான வழிகளில் கற்றுத்தருவதில் ஈடுபாடு ஆகியவற்றிற்குப் புகழ் பெற்றவர் ஆவார்.

ஹேப்பி சயின்ஸ் உறுப்பினர்கள் அவர் கற்றுக்கொடுத்த வழிகளைப் பின்பற்றி தேவைப்படுபவர்களுக்கு உதவி புரிந்து அவருடைய போதனைகளைப் பரப்பி வருகின்றனர்.

பல நூல்கள் மற்றும் சஞ்சிகைகளின் ஆசிரியர் ஆவார். தி லாஸ் ஆஃப் தி சன், தி கோல்டன் லாஸ் தி லாஸ் ஆஃப் எடர்னிட்டி, தி எசன்ஸ் ஆஃப் புத்தா, தி ஸ்டார்ட்டிங் பாயிண்ட் ஆஃப் ஹேப்பினஸ், லவ், நேச்சர் அண்ட் ஃபர்கிவ். அவர்களுடைய நூல்களின் அடிப்படையில் பல வெற்றிகரமான முழு நீள துண்டுப் படங்களையும் (கணிப்பொறியில் உருவாக்கிய பொம்மைப் படங்களையும்) தயாரித்துள்ளார்.

ஹேப்பி சயின்ஸ் என்றால் என்ன?

மக்கள் தங்கள் ஆத்மாக்களை மெருகூட்டவும், ஞானத்தை ஆழப்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட மக்கள் நிறுவனம் ஆகும். ஹேப்பி சயின்ஸ் உண்மையின் வெளிச்சத்தைப் பரப்புவதற்கும், இந்த பூமியில் ஒரு மிகச் சிறந்த ஆதர்ச உலகத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற குறிக்கோள் கொண்டது.

இதன் கொள்கைகள் புத்த மதத்தின் சாரத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆன்மிக ஞானத்தைப் பெறுவது மற்றும் கொடுக்கும் அன்பு என்னும் பழக்கம் ஆகியவை இதன் இரு தூண்களாகும். உறுப்பினர்கள் புத்த பகவானின் உண்மைகள் (கோட்பாடுகள்) என்பதைப் பயின்று சுய சிந்தனையை அன்றாடம் பயிற்சி செய்கிறார்கள். இந்த வழியில் வாழ்க்கையைப் பற்றிய ஆழ்ந்த புரிதலும், சமுதாயத்திற்குத் தேவையான தலைமைப் பண்புகளை வளர்த்து அதன்மூலம் உலகத்தின் மேன்மைக்குப் பாடுபடவும் உதவுகிறது.

சுய முன்னேற்ற நிகழ்ச்சிகள்

ஒலி ஒளிக்காட்சிகள், தியானக் கருத்தரங்குகள் ஒவ்வொரு கிளை அலுவலகத்திலும் நடைபெறுகின்றன. கருத்தரங்குகளில் பங்கேற்பதன் மூலம்

- வாழ்க்கை என்பதின் நோக்கம்
- அன்பு என்பதின் உண்மைப் பொருள்
- வெற்றிக்கான கோட்பாடுகள்
- உங்கள் ஆத்மா எப்படி செயல்படுகிறது?
- தியானத்தின் முக்கியத்துவம் மற்றும் முறைகள்
- மன அமைதியைப் பெறுவது எப்படி?
- வாழ்க்கையின் சவால்களை எப்படி எதிர்கொள்வது?
- ஒளிமயமான எதிர்காலத்தை எப்படி உருவாக்குவது?
  இன்னும் பல

தியானத்திற்கான ஒதுக்கிடம்

உண்மைப் பாதையைக் கண்டறிய முயல்வோருக்கு கல்வி வாய்ப்புகள் தரப்படுகின்றன. ஹேப்பி சயின்ஸ் நிறுவனம், ஜப்பான் நாட்டில் ஆங்கிலம் பேசுவோர்களுக்காக தியானத்திற்காக ஒதுக்கிடம் ஏற்பாடு செய்கிறது. உங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் மன அமைதி பெறவும் உதவுகிறது.

மேலும் விவரங்களுக்கு, உங்கள் கிளை அலுவலகத்தை அல்லது உள்ளூர் தொடர்பாளரை அணுகவும். ஹேப்பி சயின்ஸ் அமைப்பில் சேருங்கள்.

ஹேப்பி சயின்ஸ்

சர்வதேச தலைமையகம்:

டோகியோ
1-2-38 ஹறிகாசி கோடான்டா,
ஷினாகவா, டோக்யோ 141-02, ஜப்பான்
தொ. பே: 81-3-5437-2777
ஃபேக்ஸ்:81-3-5437-2806
மின்னஞ்சல்: tokyo@happy-science.org
www.kofuku-no-kagaku.or.jp/en

வட அமெரிக்கா:

நியூயார்க்
79, ஃபிராங்கிளின் தெரு,
நியூயார்க், நியூ 10013, யூ. எஸ். ஏ.
தொ. பே. : 1-212-343-7972
ஃபேக்ஸ்:1-212-343-7973
மின்னஞ்சல்: ny@happy-science.org
www.happyscience-ny.org

லாஸ் ஏஞ்ஜலீஸ்
1590 ஈ. டெல் மார் பிஎல்விடி,
பாஸாடோ, சிஏ 9106, யூ. எஸ். ஏ.
தொ. பே. : 1-626-395-7775
ஃபேக்ஸ்:1-626-395-7776
மின்னஞ்சல்: la@happy-science.org
www.happyscience-la.org

சவுத் பே
2340 செப்புல்வேடா பிஎல்விடி. , #பி,
டாரன்ஸ், சிஏ 90501, யூ. எஸ். ஏ.
தொ. பே. : 1-310-539-771
ஃபேக்ஸ்:1-310-539-772
மின்னஞ்சல்: la@happy-science.org

சான் பிரான்சிஸ்கோ
525 கிளிண்டன் தெரு,
ரெட்வுட் சிட்டி, சிஏ 94062, யூ. எஸ். ஏ.
தொ. பே. / ஃபேக்ஸ்:1-650-363-2777
மின்னஞ்சல்: sf@happy-science.org
www.happyscience-sf.org

ஹாவாய்
1221, கேபியோலனி பிஎல்விடி, சுவீட் 920
ஹோனோலுலு, எச்ஐ96814, யூ. எஸ். ஏ.
தொ. பே. : 1-808-591-9772
ஃபேக்ஸ்:1-808-591-9776
மின்னஞ்சல்: hi@happy-science.org
www.happyscience-hi.org

ஃப்லோரிடா
மின்னஞ்சல்: florida@happy-science.org

அல்புகுவார்கியூ
மின்னஞ்சல்: abq@happy-science.org

பாஸ்டன்
மின்னஞ்சல்: boston@happy-science.org

சிக்காகோ
மின்னஞ்சல்: chicago@happy-science.org

அட்லாண்டா
மின்னஞ்சல்: atlanta@happy-science.org

டொராண்டோ
2420 ஏ பிலுார் தெரு,
மேற்கு ஆன்ட்டாரியோ, எம்6எஸ் 1பி9, கனடா
தொ. பே. : 1-416-551-7467
ஃபேக்ஸ்:1-905-257-2006
மின்னஞ்சல்: toronto@happy-science.org

வேன்கோவர்
மின்னஞ்சல்: vancouver@happy-science.org

மெக்ஸிக்கோ

மின்னஞ்சல்: mexico@happy-science.org

ஐரோப்பா:

லண்டன்
3 மார்கரேட் தெரு,
லண்டன், டபிள்யூடபிள்யூ 8ஆர்ஈ, யூனைட்டட் கிங்கடம்,
தொ. பே: 44-20-7323-9255
ஃபேக்ஸ்:44-20-7323-9344
மின்னஞ்சல்: eu@happy-science.org
www.happyscience-eu.org

பிரான்ஸ்
மின்னஞ்சல்: france@happy-science.org

ஜெர்மனி
மின்னஞ்சல்: germany@happy-science.org

ஆஸ்திரியா
மின்னஞ்சல்: austria-vienna@happy-science.org

ஸ்விட்சர்லாந்து
மின்னஞ்சல்: switzerland@happy-science.org

தென் அமெரிக்கா:

சௌ பௌலோ மேற்கு
ருவா கண்டாஒ, 363 வில்லா மரியானா
சௌ பௌலோ, சிஈபி 04023-001, பிரேசில்
தொ. பே: 55-11-5574-0054
ஃபேக்ஸ்:55-11-5574-8164
மின்னஞ்சல்: sp_oeste@happy-science.org

சௌ பௌலோ கிழக்கு
ருவா ஃபெர்னான்டோ டவரஸ், 124, டாடுஏபி
சௌ பௌலோ, சிஈபி 03306-030, பிரேசில்
தொ. பே: 55-11-2295-8500
ஃபேக்ஸ்:55-11-2295-8505
மின்னஞ்சல்: sp-leste@happy-science.org

ஓசியானியா:

சிட்னி
சுவீட் 17, 71-77
பென்சர்ஸ்ட் தெரு, வில்லோகுபை,
என்எஸ்டபிள்யூ 2068, ஆஸ்திரேலியா
தொ. பே: 61-2-9967-0766
ஃபேக்ஸ்:61-2-9967-0866
மின்னஞ்சல்: sydney@happy-science.org
www.happyscience.org.au

மெல்போர்ன்
சுவீட் 4, 1வது தளம், 269 சென்டர் ரோடு,
பென்டிலே, விஜசி 3204, ஆஸ்திரேலியா
தொ. பே: 61-4-3484-1896
மின்னஞ்சல்: mel@happy-science.org

நியூசிலாந்து
409ஏ, மனுகாவ் தெரு, எப்சாம்,
ஆக்லாண்டு 1023, நியூசிலாந்து,
தொ. பே: 64-9-630-5677
மின்னஞ்சல்: newzealand@happy-science.org

ஆசியா:

சோல்
162-17 சடாங்-டாங்,
டாங்ஜாக்ஜியூ, சோல், கொரியா,
தொ. பே. : 82-2-3478-8777
ஃபேக்ஸ்:82-2-3478-9777
மின்னஞ்சல்: korea@happy-science.org

டேகு
878-20, மேன்சான் 3 டாங் சுசாங்-கு
டேகு குவாங்கு-சி, கொரியா
தொ. பே. : 82-5-3291-3688
மின்னஞ்சல்: daegu@happy-science.org

தாய்பை
எண் 89, லேன் 155, துன்ஹா என் தெரு,
சாங்ஷான் டிஸ்ட்ரிக்ட், தாய்பை நகரம் 105, தைவான்
தொ. பே. : 886-2-2719-9377
ஃபேக்ஸ்:886-2-2719-5570

மின்னஞ்சல்: taiwan@happy-science.org
www.happyscience-taiwan.org

ஹாங்காங்
மின்னஞ்சல்: hongkong@happy-science.org

டெல்லி
மின்னஞ்சல்: newdelhi@happy-science.org
www.happyscience-india.org

ஹேப்பி சயின்ஸில் சேருங்கள்!

ஒகாவா குருவின் போதனைகளை பின்பற்ற விரும்பும் எவரும் ஹேப்பி சயின்ஸில் உறுப்பினராகச் சேரலாம். இதன் முக்கிய குறிக்கோளானது, உண்மையான மகிழ்ச்சியை அனுபவிப்பதும், அதை மற்றவருடன் பகிர்ந்து கொள்வதும் ஆகும்.

இதில் உறுப்பினரானால் ஒரு பிரார்த்தனை நூலும், அவ்வப்போது மின் அஞ்சல் செய்திக்கடிதங்களும் கிடைக்கப்பெறுவீர், இவற்றில் ஒகாவா குருவின் சமீபத்திய போதனைகளும் இருக்கும்.

பிரார்த்தனை நூல் மூன்று சக்தி வாய்ந்த பிரார்த்தனைகளைக் கொண்டது. இவற்றை தினமும் சொல்வதால் உங்கள் தெய்வீக குணத்தை வளர்த்துக் கொள்ளலாம், ஊக்கம் பெறலாம் மற்றும் ஆன்மிக காப்பு பெறலாம்.

உங்கள் பெயர், முவகரி, தொலைபேசி எண் அடங்கிய தகவலை மின் அஞ்சல்/தொலைபேசி மூலமாக தெரிவிக்கவும். மாறாக எங்கள் வலைதளத்தின் மூலமாகவும் தகவல் தரலாம். உங்களுக்கு தேவையான தகவல் மற்றும் விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும்.

வலைதளம்: http://www.happyscience-india.org
மின்னஞ்சல்: indiamember@happy-science.org
தொலைபேசி: 022-30500314

ஜப்பானின் மிகப்பெரிய ரகசியம் உங்களுக்குத் தெரியுமா?

ரியோ ஒகாவா ஒரு மதத் தலைவர். தொலை நோக்குடையவர். ஹேப்பி சயின்ஸ் என்பதைத் தோற்றுவித்தவர். உண்மை மற்றும் மகிழ்ச்சிக்கான வழிகள் ஆகியவற்றிற்காகத் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர் ஆவார்.

ஜப்பானில் 1965ல் ஒகாவா பிறந்தார். டோக்கியோவில் சட்டப் படிப்பும் நியூ யார்க்கில் சர்வதேசபொருளியலும் படித்தார். 1986ல் நியூயார்க்கில் தான் வேலை பார்த்துக்கொண்டிருந்த ஜப்பானிய வர்த்தக நிறுவனத்திலிருந்து விலகி ஹேப்பி சயின்ஸ் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.

1987ல் ஐஆர்எச் பிரஸ் கோ லிட். என்ற நிறுவனத்தை உருவாக்கினார். அதன் பிறகு ஒகாவா 2,100 நூல்களுக்கு அதிகமாக எழுதியுள்ளார். மிக அதிக அளவில் விற்பனையாகும் நூல்களில் சில - தி லாஸ் ஆஃப் தி சன், தி கோல்டன் லாஸ், தி லாஸ் ஆஃப் எட்டர்னிடி.

இந்த நூலைப் பற்றி

வாழ்க்கை என்பது மலையைத் தோண்டி உருவாக்கப்பட்ட ஒரு சுரங்கப் பாதைக்கு ஒப்பானது. கடினமான பாறைகளால் நமக்கு அவ்வப்போது தடைகள் ஏற்படலாம். 'வாகை சூடும் சிந்தனை', இப்பாறைகளை துளைக்கும் சக்தி வாய்ந்த கருவியாக பணியாற்றுகிறது.

இவ்வகை சிந்தனையை நாம் பழகும்போது, நாம் நம் வாழ்க்கையில் தோல்வி என்பதை எப்பொழுதும் உணரமாட்டோம். 'வாகை சூடும் சிந்தனை', செயல்முறை படுத்தக்கூடிய கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டது. 'வாகை சூடும் சிந்தனை', சுயபரிசோதனை மற்றும் முன்னேற்றம் இவற்றுக்கு இடையே பாலமாக இருக்கிறது. இந்நூலில் குறிப்பிட்டுள்ள சித்தாந்தத்தை படித்து, ரசித்து, பயிற்சி செய்து மேலும் அதை உங்களின் பலமாக பயன்படுத்தினால், இனி தோல்வி என்பதே இல்லை - வெற்றி மட்டுமே என்று நீங்கள் அறிவிப்பீர்கள்.

Visit jaicobooks.com for
Video Clips
Audio Clips
Extracts

Elevate Your Life. Transform Your World.
JAICO BOOKS
www.jaicobooks.com
Self-Help
ISBN-13: 978-81-8495-093-9
9788184950939
eBook AVAILABLE